யாழ். ரூபா 30, வன்னி ரூபா 20 பக்கங்கள் 40

# உதயன்

சுடர் 31 கதிர் 017 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 27, ஞாயிற்றுக்கிழமை 13.12.2015

மகாராஜா பொதிகள் சேவை

லண்டன், கனடா, சுவிஸ், ஆகிய நாடுகளில் இருந்து பொதிகள் சேவைகளினை மிகவும் குறுகிய காலத்தில் இலங்கையில் உள்ள GTV கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

GTV Enterprises (Pvt)Ltd.

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், 021 - 2224338 / 021-4925024

இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 - 4930200

## பலாலியில் தடுப்பிலிருந்த மகன் இன்று வரை வீடு திரும்பவில்லை

### தந்தையார் உருக்கமாக சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.13

பலாலி இராணுவ முகாமில் படையினர் தடுத்து வைத்திருந்த எனது மகனை மீட்டுத்தாருங்கள் என தந்தை ஒருவர் ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் உருக்கமாகக் கேட்டுள்ளார்.

எனது மகன் உள்ளிட்ட 27 பேர் தமது தடுப்பிலேயே உள்ளனர் என பலாலி முகாமில் படை அதிகாரியொருவர் எனக்கு கூறினார். எனினும் எனது மகன் இன்று வரை வீடு திரும்பவில்லை எனவும் அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று பக். 37

# புலிகளின் தலைமை குற்றம் புரியவில்லை

## படைத் தலைமைகளும் அவ்வாறே என்கிறார் மக்ஸ்வெல் பரணகம

யாழ்ப்பாணம், டிசெம்பர் 13

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைக்ளோ, இராணுவத்தின் தலைமைகளோ குற்றங்கள் புரியவில்லை. அந்த அமைப்புக்களிலிருந்த ஒரு சிலரே தவறுகள் இழைத்தனர். இந்த இரு தரப்பினரும் கொலைகாரர்கள் அல்லர். ஆனாலும், துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் - விரும்பத்தகாத சம்பவங்கள் என்பன இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் பக். 35



"தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு நோக்கத்துக்காகப் போரில் ஈடுபட்டார்கள். இராணுவத்யதினர் கொடுக்கப்பட்ட கட்டளைக்காகப் போரிட்டார்கள். இரண்டு தரப்பினரும் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படவில்லை. அத்துடன் ஒருவரை ஒருவர் பழி வாங்கும் நோக்குடனும் செயற்படவில்லை."

## இராணுவத்தினரே மகனைக் கொன்றனர்

### தந்தை ஒருவர் கண்ணீருடன் சாட்சியம்



யாழ்ப்பாணம், டிசெ. 13

இராணுவத்தினரே எனது மகனைப் பிடித்துச் சென்று கொலை செய்தனர் எனத் தந்தை ஒருவர் நேற்று ஜனாதிபதி ஆணைக்குழு முன் கண்ணீருடன் சாட்சியமளித்துள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழு பக். 36

## நீரில் மூழ்கி சிறுவன் உள்ளிட்ட இருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 13

கிணற்றுநீரில்மூழ்கி இரு வேறு சம்பவங்களில் எட்டு வயதுச் சிறுவன் உட்பட இருவர் பரிதாபகரமாக உயிரிழந் பக். 37

முச்சந்தி முரளி



யாரையும் காப்பாற்ற இல்லைத்தானே...

## சி.ஐ.டி எனக் கூறி கப்பம் பெற்றவர்களுக்கு சிறை

### தண்டனை வழங்கியது மன்னார் நீதிமன்று

யாழ்ப்பாணம், டிசெ. 13

இராணுவ புலனாய்வுப் பிரிவினர் என்றுகூறி மன்னார் நபரிடம் 50 ஆயிரம் ரூபாவைக் கப்பமாகப் பெற்ற தென்பகுதியைச் சேர்ந்த 3 பேருக்கு மன்னார் நீதிமன்று 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

குறித்த மூவருள் ஒருவரான பெண்ணுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது நீதிமன்று. மன்னாரில் 2010 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கல்கிசை மற்றும் பக். 37

## இரு பிள்ளைகளை சுட்டுக் கொன்றனர்

### ஒரு பிள்ளையைக் கடத்திச் சென்றனர் இராணுவம் மீது தாயார் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.13

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சோதனை என்ற பெயரில் வீட்டுக்குள் புகுந்த இராணுவத்தினர் எனது மகனையும் எனது சகோதரியின் மகன் மற்றும் மருமகன் ஆகியோரைக் கடத்திச் பக். 36

## சரவணபவனுக்கு ரணில் பாராட்டு

கொழும்பு, டிசெ. 13

நெருக்கடியான சூழ் நிலையிலும் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு உதயன் - சுடர்ஒளி பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளு பக். 36

## ஊடகவியலாளர்களுக்கு இப்போதும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்

### ஆட்சி மாற்றத்தின் பின்னரும் வடக்கில் இதுதான் நிலை என்கிறார் சரவணபவன் எம்.பி



கொழும்பு, டிசெ.13

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை அரச புலனாய்வாளர்கள் பின் தொடர்கின்றார்கள் - கண்காணிக்கப்படுகிறார்கள். பல ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றனர். மறைமுகமாக அச்சுறுத்தப்படுவதும் இனந்தெரியாத குழுக்கள் அச்சுறுத்துவதும் தொடர்கின்றன. பக். 37







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழக்கு தொடரப்படாதோர் விடுவிக்கப்படவேண்டும்

## அமைச்சர் தயாசிறி வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 13

புலிகளோ அல்லது வேறு எவரோ சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு இதுவரை வழக்குத் தொடரப்படாது தடுத்து வைக்கப்பட்டிருப்பின், அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று சபையில் வலியுறுத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, இதை எமது நாடு மட்டுமல்ல, உலகமும் ஏற்கும் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது இலங்கையின் இறைமைக்கு உட்பட்டு நாடாளுமன்ற அதிகாரம் மற்றும் நாட்டின் சட்ட அதிகாரம் என்பவற்றுக்கு உட்பட்டு நடைமுறைப்படுத்துவதற்குப் பேசப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடியே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றோம். நாம் இந்த விடயத்தைப் புத்திசாலித்தனமாகவும், இராஜதந்திர ரீதியிலும் அணுகுகின்றோம்.

சர்வதேச காணாமற்போனோர் பற்றிய பிரகடனத்தில் நாம் கைச்சாத்திட்டுள்ளோம். 1988, 1989 களில் பலர் காணாமற்போயினர். அதுமட்டுமல்லாது, போர் இடம்பெற்ற காலப்பகுதியில் தமிழர்கள் பெருமளவில் காணாமற்போயினர். இந்த நிலையில், நாம் காணாமற்போனோர் பற்றிய சர்வதேச பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளோம்.

இதேவேளை, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படாமல் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எப்படி



இவர்களைத் தடுத்து வைத்திருக்க முடியும்? இரட்டைக் கடவுச்சீட்டு வைத்திருக்கின்றவர்கள் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர்.

எனவே, புலிகளோ அல்லது வேறு எவரோ சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், அவர்களைப் பிணையிலோ அல்லது விடுதலையோ செய்யலாம். இதை எமது நாடு மட்டுமல்ல, உலகமும் ஏற்றுக்கொள்ளும் - என்றார்.

(த-5-சி)

# மன்னார் ஆயர் நலத்துடன்

மன்னார், டிசெ.13

கடந்த 3 மாதங்களுக்கு மேலாகச் சிங்கப்பூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நாடுதிரும்பிய மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆயர் இல்லத்தில் தற்போது நலமுடன் இருப்பதாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அ.விக்டர் சோசை அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கடந்த 9 ஆம் திகதி நாடு திரும்பிய நிலையில் விசேட ஹெலி மூலம் மன்னாருக்கு அழைத்து வரப்பட்டார். தற்போது ஆயர் மன்னார் ஆயர் இல்லத்திலேயே தங்கியுள்ளார்.

எனினும் ஆயருக்குக் கூடுதலான ஓய்வு தேவைப்படுகின்றது. தனது தேவைகளில் தானே ஈடுபடுவதால் அவரை அதிகமானவர்கள் பார்வையிடுவதைத் தாங்கள் தவிர்த்துக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த-ஜ-56)

# திருட்டுக் குற்றச்சாட்டு இரு சிறுவர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

பல்வேறு இடங்களில் வீடு புகுந்து திருடினார்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு சிறார்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, தவசிகுளம் பகுதியில் பதின்ம வயதுடைய இரண்டு சகோதரர்களே அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நேரடியாகத் திருடினார்களா அல்லது திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்டனர்களா என்பது பற்றிச் சந்தேகிப்பதாகவும், அது தொடர்பிலும் விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும், அந்தச் சிறார்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

(த-ஜ-4)

# காணாமற்போனோர் ஆணைக்குழுவின் கைபேசியைக் கண்டறியவேண்டிய நிலை

யாழ்ப்பாணம், டிசெ 13

காணாமற்போனோரைக் கண்டறிய யாழ். வந்த குழுவினரின் பெறுமதி மிக்க கைத்தொலைபேசியைக் கண்டறியவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ். வந்த காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழுவின் பெண் உத்தியோகத்தர் ஒருவரது கைத்தொலைபேசியே இவ்வாறு நேற்றுத் தவறவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது:-

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழுவின் அமர்வில் அங்கம் வகிக்கும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் மதிய உணவுக்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு உணவருந்தச் சென்றுள்ளார். அவர் திரும்பி வந்து பார்த்தபோது அவரது பெறுமதிவாய்ந்த கைத்தொலைபேசி களவாடப்பட்டுள்ளது.

பல இடமும் தேடியும் கிடைக்கவில்லை. இதனால் மாவட்டச் செயலகத்தில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.ரி.வி கமராவைப் பரீட்சிப்பதற்கு முயன்றவேளை விடுமுறை நாள்களில் அது இயங்குவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டதால் இந்த விடயம் தற்போது பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் இப்படித் திருடர்களா என அந்தப் பெண் உத்தியோகத்தர் மனவேதனையுடன் தெரிவித்தார்.

(த-101)



மட்டக்களப்பு மாவட்டத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையை வரவேற்கும் வகையில் 42 அடி உயரமான நத்தார் மரம் உருவாக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் கழிவுப்பொருள்களினால் உருவாக்கப்பட்டுள்ள ஒளியூட்டப்பட்ட இந்த நத்தார் மரம் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.(த-ஜ-10)

# உணவு தவிர்ப்பை தொடரும் கைதிகள்

கொழும்பு, டிசெ. 13

மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகள் இருவர் இன்றும் தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர். ஜெனிற்றன், கோமகன் ஆகிய இருவருமே அவ்வாறு உணவு தவிர்ப்புப் போராட்டதை முன்னெடுத்து வருகின்றனர்.

ஜெனிற்றன் கடந்த திங்கட்கிழமை தொடக்கமும், கோமகன் கடந்த புதன்கிழமை தொடக்கமும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் 6 வருடமாகச் சாட்சியமளிப்பதுக்கு முற்படாமையால், தனது வழக்கு இழுத்தடிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்து ஜெனிற்றன் போராட்டத்தை முன்னெடுக்கிறார். கோமகன் தன் மீது கடந்த புதன்கிழமை புதிதாக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதை எதிர்த்து போராட்டத்தை முன்னெடுக்கிறார்.

(த-ம)

# நிலாவெளிச் சடலம் புலிகளுடையதா ?

## விசாரிக்கிறது கியூ பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 13

திருகோணமலை நிலாவெளிக் கடற்கரையில் மீட்கப்பட்டிருந்த சடலம், விடுதலைப் புலி உறுப்பினருடையதாக இருக்கலாம் என்ற அடிப்படையிலும் விசாரணைகளை நடத்துவதாகத் தமிழக கியூப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி குறித்த சடலம் மீட்கப்பட்டது. அந்தச் சடலம் சென்னையைச் சேர்ந்த பூமிதுரை என்பவருடையது என்றும், அவர் ஒரு வாடகைக்கு விடப்படும் வாகனத்தின் சாரதி என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சடலத்திலிருந்து மீட்கப்பட்ட அடையாள அட்டையை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த பெயரைக் கொண்ட சாரதி கோயம்புத்தூர் பகுதியில் உயிருடன் இருக்கின்றமை தெரியவந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த நிலையில், சடலத்தில் இருந்து மீட்கப்பட்ட அடையாள அட்டையும் போலியானது என்று தெரியவந்துள்ளதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், சடலமாக மீட்கப்பட்ட நபர், ராமேஸ்வரம் பகுதி ஊடாகத் தமிழகத்துக்குள் பிரவேசிக்க முற்பட்ட வேளையில் கடலில் மூழ்கி இருக்கலாம் என்றும், அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவராக இருக்கலாம் என்றும் சந்தேகிப்பதாகவும் கியூ பிரிவு தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(த-4)

# வடமராட்சியில் இன்று முதல் காணமற்போனோரின் அமர்வு

கரணவாய்,டிசெ.13

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் வடமராட்சிப் பிரதேசத்துக்கான விசாரணைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் இரு தினங்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளன. இந்த இரு தினங்களும் விசாரணைகள் முற்பகல் 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

இதில் கரவெட்டி மற்றும் மருதங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த காணாமற்போனோருக்கான விசாரணைகள் இன்று ஞாயிற்றுக்கிழமையும், பருத்தித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான விசாரணைகள் நாளை திங்கட்கிழமையும் இடம்பெறவுள்ளன.

(த-ஜ-108)

# பரீட்சையில் ஆள்மாறாட்டம்; ஒருவர் கைது

கண்டி, டிசெ. 13

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின்போது ஆள்மாறாட்டம் செய்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி பெண்கள் உயர் வித்தியாலயத்தில் நடைபெறும் சாதாரணதர பரீட்சையின் போது இந்தச் சம்வம் இடம்பெற்றுள்ளது. குறித்த பரீட்சை கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், தனியார் பரீட்சார்த்திக்குப் பதிலாகப் பிறிதொரு நபர் பரீட்சைக்குத் தோற்றியபோதே வழமையான பரிசோதனையின்போது குறித்த நபர் மாட்டிக் கொண்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்கள் இடமாற்ற இழுபறிக்கு செயலரும் அதிகாரியுமே காரணம்

## *கல்வி அமைச்சு சபையில் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 13
யாழ். குடாநாட்டில் மாகாணப் பாடசாலைகளின் அதிபர்கள் இன்னும் இடமாற்றம் செய்யப்படவில்லை. மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும், இடமாற்ற அதிகாரியுமே இதற்குக் காரணம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் எழுப்பியிருந்த வாய்மூல கேள்விக்குக் கல்வி அமைச்சினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த மாகாணப் பாடசாலைகளின் அதிபர்களே அவ்வாறு இடமாற்றம் செய்ய வேண்டியிருந்தும் இடமாற்றம் செய்யப்படவில்லை.

7 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் சேவையாற்றிய பல பாடசாலை அதிபர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய பாடசாலை அதிபர்கள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதா? என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சு, தேசியப் பாடசாலை அதிபர்கள் தரத்துக்கு அமைய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தது.

மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் சிலர் யாழ். குடாநாட்டிலும் இடமாற்றம் செய்யப்படாதுள்ளனர். அதற்குக் காரணம் கேட்டபோதே, மாகாணப் பாடசாலை அதிபர்களின் இடமாற்ற அதிகாரி, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரே அதனை நடைமுறைப்படுத்தாததற்குக் காரணம் என்று சபையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# கணினி அறிவில் குறைந்த மாவட்டம் முல்லைத்தீவு

யாழ்ப்பாணம், டிசெ.13
இலங்கையில் கணினிக் கல்வி அறிவு மிகவும் குறைந்த மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் உள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை வீட்டுத் தளபாடப் பாவனையாளர்களில் 24.6 வீதமானவர்கள் குறைந்தது ஒரு கணினிக்கு உரிமையாளர்களாக இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

கணினிப் பயன்பாடு தொடர்பான ஆய்வு அறிக்கையைச் சமர்ப் பித்தபோது, வீட்டுக் கணினிப் பாவனையாளர்களில் 67 வீதமானவர்கள் தனது முதல் கணினியை 2010 ஆம் ஆண்டுக்கும் 2014 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கொள்வனவு செய்துள்ளனர்.

கணினிக்கல்வி அறிவு அதிகமாகவுள்ள மாகாணமாக மேல் மாகாணம் காணப்படுகின்றது. 15 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்டவர்களே கணினிப் பாவனையில் அதிக இடத்தைப் பெற்றுள்ளனர் என்றும் இது மொத்த கணினிப்பாவனையில் 57.2 வீதம் என்றும் திணைக்கள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-ஜ-4)

# நிர்வாக சபைக் கூட்டம் இன்று


வரணி,டிசெ.13
தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என சங்கத்தின் செயலாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (ஜ-122)

DMI COMPUTER EDUCATION
Diploma in
Auto CAD
2D & 3DModeling
புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30
DMI COMPUTER EDUCATION
113, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். Tel:. 021 222 4403
129/2, M. M. V. வீதி, நெல்லியடி. Tel:. 021 226 2470

2016 தரம்-10 -G.C.E (O/L) வகுப்புக்களுக்குரிய
"விஞ்ஞானம்"

பாடத்தை விஞ்ஞானமாகக் கற்க
விருப்புடைய மாணவர்களுக்கும்,
பெற்றோருக்கும் அழைப்பு விடுகின்றேன்.
ஆரம்பம்: 14.12.2015 காலை 8.30
தொ.பே. எண்: 077 955 4276
J.J.Michael (விஞ்ஞானமாணி)

## மரண அறிவித்தல்



### செல்லர் பரமனாதன் ஜீவானந்தம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் பரமனாதன் ஜீவானந்தம் (ஜீவானந்தம் மாஸ்டர்) 10.12.2015 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லர்-எஸ்தர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பீற்றர் ஆறுமுகம்- சீதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவாம்பிகையின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், Dr. பீற்றர் ஜெபநேசன் (வைத்தியர், அரசினர் வைத்தியசாலை- வவுனியா), ஜேம்ஸ் அருள்நேசன் (முன்னாள் உத்தியோகத்தர் Hatton National Bank - USA), ஜோன் ஜீவநேசன் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), அன்று திவ்வியநேசன் (வீதி அபிவிருத்தி திணைக்களம்-கிளிநொச்சி), மேரி ஜெபரூபி ஜெயரூபன் (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எலிசபெத் இந்திரரூபி தேவமித்திரன் (ஆசிரியை- சென்.ஜோன்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி கிறேஸ் ஜெபநேசன், காலஞ்சென்ற மஞ்சுளா அருள்நேசன் மற்றும் ஷிராணி ஜீவநேசன், சலோதிஸ்கா திவ்வியநேசன் (ஆசிரியை- சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி), ஜெயரூபன் (தொழில்நுட்பவியலாளர்) அருட்பணி தேவமித்திரன் (உப அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான ஜோசப் ஜெபக்குமார், போல் அருட்குமார் மற்றும் டெபோறா ஜெபசுகிர்தா (இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்-வவுனியா) ஜோசுவா ஜெபப்பிரகாசன் (வவுனியா மத்திய மகா வித்தியாலயம்), எஸ்தர் ஜெப சுதந்தி ரனி, (இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ஜோன் ஜெபவியூகன் (வவுனியா மத்திய மகா வித்தியாலயம்), சாம் தேவக்குமார் (ஆங்கில ஆசிரியர்-மட்டக்களப்பு), சொலமன் பிறேமக்குமார் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக் கழகம்) ஐன்ஸ்டின் ஜெப கிருஷாந்த் (பழைய மாணவர் சென். ஜோன்ஸ் கல்லூரி), வோல்ட்டா ஜெபபிரசாந் (மாணவர் சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜீவித்தன் ஜீவானந் தம் (பழைய மாணவர் சென். தோமஸ் கல்லூரி-கொழும்பு), சலோனிக்கா ஜீவானந்தம் (பிஷப்ஸ் கல்லூரி-கொழும்பு) ஆகியோ ரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற பரிமளசிங்கம் (கட்டடக் கலைஞர்) காலஞ்சென்ற ரெபேக்கா தர்மலிங்கம் (தலைமை ஆசிரியை) துரைசிங்கம் (ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி) காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (நில அளவைத் திணைக்களம்) சகோ.சாம் தேவபாலசிங்கம் (இயக்குநர் இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(13.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 37, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
திருமதி ஜெயரூபி ஜெயரூபன்: 0770366211
திருமதி இந்திரரூபி தேவமித்திரன்: 0776668968
திரு. அருள்நேசன் ஜீவானந்தம்: 0019292315276 (USA)
தகவல்:
குடும்பத்தினர்.
(சி/20770) (10.17)

வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் நகை வியா பார நிறுவன காட்சியறையில் கடமை யாற்றுவதற்கு,
- விற்பனையாளர்கள்
- அலுவலக உதவியாளர்கள் தேவை.

கிராமசேவையாளர், சமாதான நீதிவான் ஆகியோரின் சிபார்சுடன் தொடர்பு கொள்ளவும்.
(66930) (11,17,18)
075 999 2769

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி
- இலங்கையில் FRENCH EM BASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே 136 நாடுகளில் 1092 கிளைகள் எமது தலைமை நிறுவனம் பிரான்ஸில் உள்ளது.
- எமது DELF A1 சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்குத் தோற்றவேண்டியதில்லை.
- இலவசம்: படிக்கும் பாடங்களில் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை....
- யாழ்., வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள். பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்களுக்கான பிரெஞ்மொழிபெயர்ப்புகள்.
- பிரெஞ் மொழிபெயர்ப்புக்கள், பாடசாலை / பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டணம் மிக குறைவு

ஆரம்பம் சில தினங்களில். முதலில் தொலைபேசி ஊடாக பதிவை உறுதிப்படுத்துங்கள்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் புகையிரதக்கடவை AF வெள்ளை மாடிக்கட்டடம்)

EXPONET (PVT) LTD &
LONDON METROPOLITAN COLLEGE,
அனைத்து வகுப்புக்களுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்
IELTS
Duration : 60 hours (Week I Weekends)
Student Visa / Skill Migration
IELTS
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week I Weekends)
UKBAஇன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
No.136, Palali Road, Parameswara Junction, Jaffna
Tel : 021 7538395 Mobile: 0774765990

வேலையாள்கள் தேவை
- மின்னிணைப்பாளர்
- நீர்க்குழாய் பொருத்துநர்

மற்றும் உதவியாளர்கள் உடனடியாகத் தேவை.
பிறேம் எலக்றிக்கல்
தொடர்பு: 077 804 8143, 077 214 1722,
021 223 1393
Email: premelectricial7@gmail.com
(66926) (12.,14,15,18)

வழிமேல் விழிவைத்து
காத்திருக்க வேண்டியதில்லை
HIKVISION/கிக்விசன்
World's No.1
உலகின் முதல்தரப்படுத்தப்பட்ட
CCTVகமராக்களை பொருத்துங்கள்.
எங்கள் கமராக்கள்
விலை உயர்ந்தவை ஆனால் தரத்தில் பன்மடங்கு உயர்ந்தவை.
2வருட உத்தரவாதத்துடன் வழங்கப்படும்.
50 இற்கு மேற்பட்ட வகைகளில் உள்ளன.
6000ரூபா தொடக்கம் 50000ரூபா பெறுமதிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
மங்காமல் தெளிவாக பலகாலம் நிலைத்திருக்கும் உயர்தர Lens/வில்லைகளை கொண்டவை.
Night vision/இரவு கண்காணிப்புக்கு பெயர்போனது.
இலங்கையில் கூடுதலாக பிரபல்யமான இடங்களுக்கு பொருத்திய HIKVISION கமராக்களை நீங்களும் பொருத்தி நீண்ட நாள்களுக்கு நிம்மதியடையுங்கள்.
GreenGrass, Yaso Motors, Jaffna, Hardware, Store ....
மேலதிக விபரங்களுக்கு
உடன் நாடுங்கள்
SST SUNSAKTHY TRADERS
Tel.:021 221 7994
Hotline 077 593 0335
www.sunsakthy.com www.hikvision.com
Email: sunsakthy@yahoo.com
651,Hospital Road,
Jaffna.
LINK LANKA/ லிங் லங்கா ஏக முகவர்
ஆட்டோ மீற்றர்களும் உதிரிப்பாகங்களும் விரைவில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
7% CHRISTMAS OFFER!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
யாழ் புகையிரத நிலையத்திற்கு அருகில் 3 பக்க மதிலுடைய நிலப்பரப்பு 2 குழி 13 விஸ் தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 077 544 3346**

### வீடு விற்பனைக்கு
பிறவுண்றோட் கலட்டியில் அமைந்துள்ள மூன்று பரப்புக் காணிக்குள் அமைந்துள்ள 10 றூம், 7பாத்துறூமுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. கெஸ்ற் கவுஸ், முதியோர் இல்லம், மருத்துவமனைக்கு உகந்தது.
தொடர்பு: 077 026 0180 (c 20248) (14,16)

### மோட்டார் வாகனம் விற்பனைக்கு
NP WM - XXXX இலக்க முடைய CBZ Xtreme Hero Honda 2010 ஆம் ஆண்டு 150 CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
(66821)(11,15,17,18) **075 744 3020**

### காணி விற்பனைக்கு
செல்லர் வீதியில், 5½ பரப்பு விசாலமான சதுரக்காணி விற்பனைக்குண்டு. Education dept முத்திரை சந்தைக்கு அண்மையிலும், செம்மணி வீதியிலிருந்து 100m தூரத்தில் உள்ளது. வர்த்தக வதிவிடத்திற்கு மிகச் சிறந்தது.
(c 20274) (14,16)
**தொடர்பு: 077 603 3311**

### இரண்டு வீட்டுடன் காணி விற்பனைக்கு
அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு என்னுமிடத்தில் 2 வீட்டுடன் 11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு: 077 730 6162** (66948) (14,16)

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் கம வீதியில் 3பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
**076 921 5799** (66805) (14,16)

### நாய்க்குட்டி விற்பனைக்கு
60 நாள்கள் நிரம்பிய , பூச்சி நீக்கப்பட்ட, தடுப்பூசி ஏற்றப்பட்ட ஜேமன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **077 613 9307**

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் (ராசா கடை முன்வீதி ) A-9 வீதிக்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள 3 பரப்புக் காணியில் குழாய்க் கிணற்றுடன் கட்டி முடிக்கப்படாத வீடு விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். ராசன் - 072 922 9424
(66822)(11,15,17,18)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
நல்ல இன ஹாலிக்குயின் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
தொடர்பு:
**077 348 4932** (c 20772) (14,16)

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம்,ஆஸ்பத்திரி வீதி, இல. 625/5 இல் அமைந்துள்ள பழைய வீட்டுடனான ஒரு பரப்பு16.23 குளி நிலம் விற்பனைக்கு.
தொடர்பு:
ரவி: 077 727 0310
(66137)(12,15) வசந்தன்: 077 281 2796

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
இல.252, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் 7½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, கச்சேரி, புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கு அருகில் உள்ளது.
(66943) (11,17,18) **077 742 0240, 075 667 8527**

## தேவை

### தேவை
கொழும்பில் இயங்கிவரும் எமது நிறுவனத்துக்கு குழந்தை பராமரிப்பாளர்கள், நோயாளர் பராமரிப்பாளர்கள், வீட்டுப் பணிப்பெண்கள் தங்கி வேலை செய்யும் பெண்கள் தேவை. **077 114 1112**

### யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு வீடு தேவை
மானிப்பாய் வீதி, கே.கே.எஸ் வீதி, பலாலி வீதிகளுக்கு அருகாமையில் சந்தைகளுக்கு கிட்ட இருத்தல் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 0112504327, 0773873320

### மணமகன் தேவை
1983 லக்கினத்தில் செவ்வாய், புதன், சூரியன் உள்ள பரணி 4ஆம் பாதம் மணமகளுக்கு மணமகன் தேவை.
(66940) (11,15,18) **077 117 9905**

### இட வசதி தேவை
நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் நடத்துவதற்கு இடவசதி தேவை. இட வசதியும், ஆர்வமும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய கைத்தொலைபேசி இலக்கம்-
(62219)(11,15,18) **077 711 5876**

### விற்பனையாளர்கள் தேவை
கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை.
பழக விரும்புபவர்களுக்கு சம்பளம் 20,000/=
த.குமாரசாமி அன் சன்ஸ்
252, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(66815) (11,16,18)

### தேவை
யாழ் நகரில் இயங்கும் CIL உயர் கல்வி நிறுவனத்துக்கு Receptionist தேவை.
mail your cv:ciljaffna@gmail.com
Call/ Sms: 077 738 2108

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகர் /அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
(66978) (11,17,18) **077 626 3128**

### மணமகள் தேவை
யாழ் 1982 N.R.C P.H.D Australia Lecturer Engineering Ceylon மகனுக்கு உயர்கல்வித்தகைமை உடைய N.R.C / Hind பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 0715 961 911

### மணமகன் தேவை
1977 ஆம் ஆண்டு மூலம் நட்ஷத்திரம் 20 பாவம் செவ்வாய்க்குற்றமில்லை. அரச தொழில் பார்க்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை.
**தொடர்பு: 075 039 3610** (66946) (14,16)


### கணக்காளர் தேவை
புடைவைஸ்தாபனம் ஒன்றுக்கு கணக்காளர் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) கொம்பியூட்டர் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
த.குமாரசாமி அன் சன்ஸ்
252 கே.கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
(66814)(12,16,18)

### வீடு வாடகைக்கு தேவை
யாழ் நகரில் இருந்து 3Kmக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்கு தேவை.
(66811) (14,16)
**தொடர்பு: 075 511 6767**

### வாடகைக்கு வீடு தேவை
ஓய்வூதியரின் சிறு குடும்பத்திற்கு கே.கே.எஸ். வீதிக் அருகில் இணுவில், கோண்டாவில் மருதனார்மடம்,கொக்குவில் பகுதியில் தனி வீடு தேவை. (66830) (13,16,17)
தொ.பே. 077 559 4140

## ஏனையவை

### கார் வாடகைக்கு உண்டு
திருமண வைபவங்கள், சுற்றுலாத் தேவைகளுக்கு ஏற்ற புதிய Hybridht கார்கள் வாடகைக்கு உண்டு.
(66824)(11,15,17,18) **077 513 5315**



* பல் முக சீராக்கல்
  (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை
  (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

ராயல் மெடிக்கல் சென்ரர்

### தொடர்பு கொள்ளவும்
பிளாஸ்ரிக்/இறப்பர் பொருள்கள்/ ரயர் செய்யும் தொழிற்சாலைகளில் பல வருட அனுபவமுள்ள நான், வடகிழக்கு மாகாணங்களிலுள்ள அந்தத் தொழிற்சாலைகளுக்கு தொழில்நுட்ப ஆலோசகராக (Consultant) இருக்க விரும்புகின்றேன்.
(66819) (11,16,18) **072 438 2940**

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை 021 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

### சேவை
உங்களது மூத்த உறுப்பினர்களை (முதியோர்) தெஹிவளையில் மிக அமைதியான, பாதுகாப்பான சூழலில் 24X 7 நேர தாதியர் மருத்துவர் சேவையுடன் Professional இன் கண்காணிப்பின் கீழ் பராமரிக்க தொடர்பு கொள்ளவும். 076 8970707 (66728) (12,15)

### அறைகள் வாடகைக்கு உண்டு
படிக்கின்ற மாணவர்கள் அல்லது தொழிலுக்குச் செல்லும் இருவருக்கு சகல வசதிகளுடனும் 2 அறைகள் உண்டு.
20.12.2015இற்கு முன்னர் நேரில் வரவும்
தொடர்பு **077 500 6392**
147, ஆனந்தன் வடலி றோட், அரியாலை.

### A/L இணைந்த கணிதம், தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் தமிழ்/ ஆங்கில மொழிமூல வகுப்புகள்
மேற்படி வகுப்புகள் தனியாகவோ குழுவா கவோ கற்பிக்கப்படும்.
ஆசிரியர்- S.யூட்
B.Sc (Hons) (M.Sc)
தொடர்பு : இல- 03 சோமசுந்தரம் அவனியூ, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
TP: 077 9672059
076 768 5005

HOME GATE
www.homegate.lk
BUY / RENT
CHRISTMAS OFFER ADVERTISE NOW FOR LKR 999
Partners (P) Ltd:
Pearl Park Complex, Negambo Road, Wattala.
HOTLINE: 0777 860 400

### வீடு வாடகைக்கு
இல.68, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் அல்லது தொழில்புரிவோர் விரும்பத்தக்கது) (66499) (11,15)
**தொடர்பு: 077 839 3531**

### வேலை வாய்ப்பு
FR International கம்பனியில் புதிதாகத் திறக்கப் படவுள்ள கிளைகளுக்கான வேலை வெற்றிடங்கள் உள்ளன. ஆர்வமுள்ள இளைஞர்,யுவதிகள் விண்ணப்பிக்கலாம். கல்வித் தகைமை O/L அல்லது A/L எதிர்பார்க்கப்படு கின்றது.
நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டிய இடங்கள்- கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மூதூர்
077 280 3773, 077 354 8006,
076 843 3804,077 880 9695
(63588) (11,16,18) FR கம்பனி, கிளிநொச்சி

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் சகல வசதியும் உள்ள மூன்று அறைகள் உள்ள வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
831/34, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(66810) (11,16,18) 021 222 1781

### Tiles வேலை செய்து கொடுக்கப்படும்
அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களால் மலிவான விலையில் செய்து கொடுக்கப்படும்.
(1சதுர அடி - 50/=)
தொடர்பு:
(66816) (14,16) **077 329 1745**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.13

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான நடமாடும் சேவை எதிர் வரும் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (த-ஐ)


## இலவசம்! இலவசம்!

இல.341, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் (முட்டாசுகடைச் சந்தியில்)

சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும்

## Everpure Hi - Tec (Pvt) Ltd

இல் கொள்வனவு செய்யும் அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களுக்குமான பில்டர்கள் (Replacement Filters) ஒரு வருடத்திற்கு இலவசமாக வழங்கப்படும்



முந்துங்கள் இச்சலுகை December 31st 2015 வரை மட்டுமே!

**நிபந்தனைக்குட்பட்டது

வீடு, காரியாலயங்கள், தொழிற்சாலை, விருந்தினர் விடுதி மற்றும் அனைத்து இடங்களுக்கும் பொருத்தமான USA தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO), நீர் மென்மையாக்கி (Water Softener - Calcium நீக்கி). உதிரிப்பாகங்கள் மற்றும் அனைத்து சேவைகளையும் உத்தரவாதத்துடன் வழங்கும் தன்னிகரில்லா ஒரே நிறுவனம்.

தொடர்பு : 077 362 6230, 021 567 7567

#341, K.K.S. Road, Jaffna everpurehitec@gmail.com



## நேர்முகத் தேர்வு

18 ஆம் 19 ஆம் 20 ஆம் திகதி டிசெம்பர் 2015

# Jetwing Jaffna

நேரம்: முற்பகல் 9.00 - பிற்பகல் 5.00 மணிவரை

இடம்: இல.37, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

**நிறைவேற்று அதிகாரிகள்**

- தகவல் தொழில்நுட்ப நிர்வாக அலுவலர்.

**வரவேற்பு (பகுதி)**

- வரவேற்பு பகுதி மேற்பார்வையாளர்
- வரவேற்பாளர்

**மனித வளப்பகுதி**

- மனிதவள மேற்பார்வையாளர்

**கணக்குப் பகுதி**

- கிரயக் கட்டுப்பாட்டாளர்
- களஞ்சியக் காப்பாளர்
- களஞ்சிய உதவியாளர்
- கணக்கு உதவியாளர்.

**வீட்டுப்பராமரிப்பு**

- பராமரிப்பு மேற்பார்வையாளர்
- உதவியாளர்கள் (றூம் போய்)

**உணவு மற்றும் குடிவகை**

- கப்டன்
- மதுபான விற்பனையாளர்
- பரிமாறுபவர்

**மேற்பார்வைப்பகுதி**

- சமையலறை மேலாளர்

**பராமரிப்புப் பகுதி**

- பராமரிப்பு மேற்பார்வையாளர்
- பராமரிப்பு தொழிநுட்பவியலாளர்
- பராமரிப்பு உதவியாளர் (A/C)
- பெயின்ரர் /ஸ்பிறேபெயின்ரர்
- தச்சுத்தொழிலாளி
- குழாய் பொருத்துநர்

**சமையலறைப்பகுதி**

- தலைமைச் சமையலாளர் (பேஸ்ரி/பேக்கரி)
- தலைமைச் சமையலாளர் (சூடான/குளிரான சாப்பாடு)
- கொமி(சமையல் உதவியாளர்) பேஸ்ரி,பேக்கரி,
- கொமி (சமையல் உதயவியாளர்) (சூடான/குளிரான சிற்றுண்டி தயாரிப்பாளர்)
- சமையல் உதவியாளர் II (சூடான/குளிரான சிற்றுண்டி தயாரிப்பாளர்)
- சமையல் உதவியாளர் III (இறைச்சி வெட்டுபவர்)

Jetwing
JAFFNA
JAFFNA • SRI LANKA



## JOIN THE DIVERSIFIED INNOVATIVE AWARD WINNING GROUP

ISF Industrial Stainless Steel Fabrications (Pvt) Ltd.

ISF ISF Industries (Pvt) Ltd, India

HERITAGE Heritage Premier Foods (Pvt) Limited

J.H.S. Enterprises (Pvt) Ltd.

Iyakachchi Heritage Agri (Pvt) Ltd.

We are a bi-national Group of Companies involved in diversified activities including Engineering, Manufacture, Agriculture and industrial support services catering to multinationals and corporates in Sri Lanka and India.

Heritage Agri is a state of the art Cavendish banana farm in Iyakachchi with a modern export processing Centre.

We are looking for suitably qualified young people with a positive approach to be part of our farm in "IYAKACHCHI" for the following positions.

### BUSINESS MANAGER

- Holds a valid degree in Agriculture
- Working experience in a farm is desirable.
- Experience in a Junior Management position in any agriculture venture
- Able to write reports in English
- Under 35 years of age.
- Suitable transport will be provided

### JUNIOR MANAGER PROCESSING

- Holds a valid degree in Agriculture
- Working experience in a farm is desirable.
- Experience in a Junior Management position in any agriculture venture
- Able to write reports in English
- Under 35 years of age.
- Suitable transport will be provided

Both females and males can apply.
Your Bio-data must be sent within one week to damayanthi@isfindustries.com or post to -

Group Human Resources Manager
Heritage Agri (Pvt) Ltd, 3/4, Rockwood Place, Colombo 07.



# Seeking for a partner in Jaffna for a company providing Study Abroad programs

## Essential requisites for the partnership

- யாழ் நகர எல்லைக்குள் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் நல்ல உட்கட்டமைப்பு வசதிகளுடைய கல்வி நிலைய காரியாலயம்
- நன்கு படித்த வேலைகளை கையாளக்கூடிய கல்வித்துறையில் ஈடுபாடுடையவர்

Those who are interested please send basic details via

Email: jaffnastudy@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி சலோதிஸ்கா திவ்வியநேசன்
அவர்களது அன்பு மாமனார்
**செல்லர் பரமனாதன் ஜீவானந்தம்**
அவர்கள் 10.12.2015 வியாழக்கிழமை காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**
(C/20781) (10.17)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**டேவிட் தேவதயாளன்**
(லங்கா சீமெந்து நிறுவனம், K.K.S)
பாசமுள்ள அப்பாவே!
நாள்கள் உருண்டோடி
ஆண்டு நாலாகி விட்டது
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
இருந்தும் உங்கள் நினைவுடன்
உங்கள் ஆசைப்படி
வாழ்கின்றோம்
அப்பா உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிராத்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!

மண்ணில் 22.02.1950
விண்ணில் 13.12.2011

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

## வேலைவாய்ப்பு
(டோகா- கட்டார்)

| தொழில் | எண் | சம்பளம் |
|---|---|---|
| ஒபீஸ் போய் | 20 | 46,800 |
| மேசன் | 18 | 50,700 |
| பெயின்ரர் | 17 | 50,700 |
| சாரதி(GCC லைசன்ஸ்) | 15 | 70,200 |
| ரெயிலர் சாரதி | 10 | 78,000 |
| பிளம்பர் | 14 | 50,700 |
| எலக்ரீசியன் | 12 | 50,700 |
| தொழிலாளி | 31 | 42,900 |
| பொதுசுத்திகரிப்பாளர் | 44 | 42,900 |

நிபந்தனைகள்
1QR= 39ரூபா
* ஒப்பந்தம் 2 வருட காலம்
* ஒப்பந்த முடிவில் இருவழி விமான டிக்கட் இலவசம்
* ஒரு நாள் 8 மணித்தியாலம், வாரம் 6 நாள்கள் வேலை
* போக்குவரத்து, தங்குமிடம், மருத்துவம், காப்புறுதி கம்பனியால் இல வசமாக வழங்க்கப்படும்
* மற்றயவை அந்நாட்டு தொழிலாளர்களின் சட்டதிட்டங்களுக்கு அமையும்.

SILVERLINE OVERSEAS RECRUITMENT(PVT)Ltd
NO, 63 - 2/4 Rambukkana Road mawanella
TP: 077 6969119, 035 2248081
L/N 2595

மண்ணில் மலர்ந்து மடிந்த மலரின்
## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கணேசமூர்த்தி பார்த்தீபன்**
(தீபன்)
(வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்-சாரதி)
அஸ்தமித்த சூரியன் மீண்டும்
உதிப்பதுபோல
தேய்ந்த சந்திரன் மீண்டும்
வளர்வது போல
மறைந்து மடிந்த மகனே நீயும்
மீண்டும் எம்மிடம் வருவாயா?
காலமெல்லாம் வாழ்ந்திருப்பாய்
என்றிருக்க
கணப்பொழுதில் மறைந்த
மாயமென்ன?
பார்த்தீபா
உன் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி !
ஓம் சாந்தி !!
ஓம் சாந்தி !!!

மண்ணில் மலர்ந்தது 16.01.1990
விண்ணில் மறைந்தது 13.12.2011
தீதி: அாரங்க தீருகோவை

துன்னாலை வடக்கு, கரவெட்டி.
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு
அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள நிலப்பரப்பு 12 குளி 15விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :-
077 1671174, 0777 286061 (66648)

## விற்பனைக்கு
தச்சு வேலைக்கான 12'', பட்டறையும், கட்டர் றவ்டர், றில்லர், சேக்கிழர் சூ, பிளேனர், ஜிப்சோ ஆகியன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 886 5834

JV.... இல KIA கார்விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 6237956

## வாடகைக்கு
நல்லூர் பகுதியில் வீட்டின் முற்றிலும் பிரத்தியேகமான பகுதி (தனி அறை, இணைந்த குளியல் அறை, குசினி) வாடகைக்கு உண்டு. இரண்டு பெண்கள் மட்டும் அனுமதிக்கப் படுவர்.
தொடர்பு:- 072 677 4085

## தவறிவிட்டது
சாவகச்சேரி அம்பிகா மருந்தகம் முன் னால் விடத்தல்பளை உசனை வசிப்பிட மாக கொண்ட பண்டாடி சிதம்பரப்பிள்ளை ஆகிய எனது வங்கி அட்டைகள், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடனடியாக தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P: 077 968 8080

## வேலைவாய்ப்பு
பொதுக் காப்புறுதி துறையில் முன் அனுபவம் வாய்ந்த IBSL பொதுக் காப்புறுதி பரீட்சையில் சித்தி பெற்ற மற்றும் சித்தி பெறாத திறனாளர்களிடம் இருந்து இலங்கையில் உள்ள முன்னணி காப்புறுதி கம்பனி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு:-
077 6717 357, 076 7529 388


# தமிழ் – முஸ்லிம் இன ஐக்கியத்தை வலுப்படுத்தத் தயாராகவுள்ளோம்

*தமிழரசுக் கட்சி மூத்த உறுப்பினர் தெரிவிப்பு*

அம்பாறை, டிசெ.13
தமிழ் முஸ்லிம் இன ஐக்கியம் மேலோங்குவதற்காகவும் எத்த கைய தியாகங்களைச்செய்யத் தயாராகவுள்ளோம் எனக் கல் முனை மாநகர சபையின் புதிய உறுப்பினரும் தமிழரசுக் கட்சி யின் மூத்த உறுப்பினருமான கு.ஏகாம்பரம் தெரிவித்தார். கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தமிழர்களை முஸ் லிம்கள்புறந்தள்ளியும் முஸ்லிம் களைத் தமிழர்கள் புறந்தள்ளியும் ஒரு போதும் நிம்மதி யாக – சந்தோச மாக வாழமுடி யாது.

வரலாற்று ரீதியாக எமது மண்ணில் இன ஐக்கியத்தைப் பேணி வந்த தமிழ் முஸ்லிம் சமூகங் களுக் கிடையே சில கசப்பான சம் பவங்களையும் உணர்வுகளையும் தூண்டிவிட்டு சில சக்திகள் சுய அரசியல் இலாபங் களை ஈட்ட முனைந்த கடந்த கால வரலாறுகள் மீண்டும் தோற்று விக்கப்படக்கூடாது –என்றார்.

(த–ஐ–30)


## வீடு வாடகைக்கு தேவை
நான்கு பேர் கொண்ட அரச உத்தியோகத்தர் குடும்பத்திற்கு யாழ் நகரிலிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், கோண்டாவில் பகுதிகளும் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 636 1414

## தவறிவிட்டது
செல்வமலர் கந்தவேள் ஆகிய எனது தே.அ. அட்டை (637242431v) வங்கிப்புத் தகம், இரத்த வங்கிப்புத்தகம், தங்கநகை, பணம் (13000/=) என்பனஅடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணம் -இடைக்காட்டுக்கு இடையில் 10.12. 2015 வியாழக்கிழமை அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவவும்
தொடர்பு: 077 4114959

## வேலையாள் தேவை
கல்வி நிறுவனத்தின் யாழ்ப்பாணம், வவுனியா கிளைகளுக்கு, துண்டுப் பிரசுரம் விநியோகிக்க ஆள்கள் தேவை.
தொடர்பு:- 077 8927 639

உலகில் முதல் தடவையாக அழகுக் கலைக்கென கல்லூரி ஆரம்பித்துள்ளோம்
British College of Beauty Studies Olialakan Studio இணைந்து நடத்தும் பாடநெறிகள்
பெண்களுக்கு பொருத்தமான 20 பாடநெறிகளை வடிவமைத்துள்ளோம்.
கணினி, தையல் அழகுகலை ஐசிங், சமையல் ஆங்கிலம் இது போன்ற இன்னும் பல துறைகள எம்மிடம் உண்டு.
British College of Beauty Studies வழங்கும் 3 நாள் அழகுகலை பயிற்சி பட்டறை.
Advance makeup, Camical Treatment செய்வதற்கு முதல் செய்யும் Treatment பிறகு செய்யும்Treatment இன்னும் பல விடயங்கள் இடம்பெறும். Practical Notes வழங்கப்படும்.
Palaly Road, Thirunelvely Junction,
Thirunelvely , Jaffna.
076 701 1645

## தரம் 5 இல் 2016 ஆம் ஆண்டு கல்வி கற்கும் குழந்தைகளது
பெற்றோர்களே !
அவர்களது டிசெம்பர்
விடுமுறையை பயனுள்ளதாக
அமைவதற்கு
**'புலமைச் சுடர்'**
தொகுதி ஒன்றை இன்றே வாங்கிப்
பரிசளியுங்கள்.
தரம் 4இற்கான கலைத்திட்டத்தை
மீட்கும் அரிய முயற்சியாக ......
புலமை 01 தொடக்கம் 20 வரையான
20 புத்தகங்கள் அடங்கிய தொகுதி
ஒன்றின் விலை ரூபா
250/= மட்டுமே





* பாட அலகுப் பயிற்சிகள்
* பகுதி I பகுதி II மற்றும் விடைகள் உள்ளடங்கலாக....



பிரதிகளைப் பெற்றுக் கொள்ள உங்கள் அருகிலுள்ள
உதயன் முகவர்களிடம் பதிவை மேற்கொள்க.
தொடர்புகளுக்கு:
077 656 9617, 077 422 8102


## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிக்கு எதிரான வழக்கு நிராகரிப்பு

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி சுபைனோ நண்டி, இலங்கை மக்க ளிடம் மன்னிப்புக் கோரவேண்டும்என்று தெரிவித்துத்தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் நிராகரித்துள்ளது.

நாவலாசிரியரும், தேசப்பற்று அமைப் பின் பிரதானியு மானகுணதாஸஅம ரசேகர இந்த மனு வைத் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்திருந் தார்.

ஜெனிவா பிரேரணை யின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபை இலங் கையை ஏமாற்றி யுள்ளதாகவும், இத னால் ஐக்கிய நாடு களின் சார்பில் அவர் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் தனதுமனுவில்அவர் கோரியிருந்தார்.

எனினும்வதிவிடப்பிர திநிதி, ராஜதந்திர சலு கைகளைக் கொண் டிருப்பதனால் அவ ருக்கு எதிராக வழக்கு தொடரமுடியாது என்று தெரிவித்து அந்த மனுவை நிரா கரித்தது நீதிமன்று.

(த–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் தாய்க்காக வருந்தும் நாமலுக்கு எங்கள் வேதனை புரியவில்லையா?

## ஆணைக்குழுவிடம் பெண்ணொருவர் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ.13
அம்மாவை அடைத்து விடாதீர்கள் என்று கோரும் நாமல் ராஜபக்சவுக்கு இங்கே பல ஆயிரம் அம்மாக்கள் படுகின்ற வேதனை புரியவில்லையா எனக் காணமற்போன தேவதாசன் கிறிஸ்ரி பிரசன்னாவின் மனைவி யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில் கேள்வி எழுப்பினார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
எனது கணவர் 2007 மார்ச் 10 ஆம் திகதி காணாமற்போனார். அதன் பின்னர் 3 மாதங்கள் அவரின் கைத்தொலைபேசி இயங்கியது. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை நேரில் சந்தித்து எனது நிலைமையைத் தெரியப்படுத்தினேன். இந்த நல்லாட்சி அரசில் என்றாலும் எனது கணவர் விடுவிக்கப்படுவார் என எதிர் பார்த்தேன். தற்போது அந்த நம்பிக்கையும் அற்றுப்போகின்றது. இந்த நிலையில் எமக்கு நட்டஈடு வேண்டுமா எனக் கேட்கின்றனர். எமக்கு அரசின் நட்டஈடு தேவையில்லை. எமது உறவுகளின் உயிரே வேண்டும்–என்றார். (த-101)

> இந்த நல்லாட்சி அரசில் என்றாலும் எனது கணவர் விடுவிக்கப்படுவார் என எதிர் பார்த்தேன். தற்போது அந்த நம்பிக்கையும் அற்றுப்போகின்றது.

# என் மகனைப் பிடித்தோர் டக்ளஸின் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.13
மணியந்தோட்டத்தில்உள்ள எனது வீட்டுக்கு நள்ளிரவில்வந்துஎனதுமகன்மலரவனைப் பிடித்துச் சென்ற குழுவினரை இருவாரகாலத்தின் பின்னர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் நான் நேரில் கண்டேன் எனத் தாயார் கொலிஸ்ரிகா நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றகாணாமற்போனோரைக்கண்டறியும் விசாரணைஆணைக்குழுவின் முன்னால் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,
19 வயதுடைய எனது மகன் வீட்டில் படுத்துறங்கிக் கொண்டிருந்த சமயம் சுமார் 11மணியளவில்சிவில்உடையில் வந்த 10ற்கும் மேற்பட்டோர் எனது மகனைக் கொண்டு சென்றனர். கொண்டுசெல்வதைத்தடுக்க முயன்ற எமக்கு ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தினர்.
இவ்வாறு பிடித்துச் சென்ற எனது மகனை நீண்ட நாள்களாகியும் விடுவிக்காத நிலையில் இராணுவ முகாம்களில் போய் கேட்ட பிறகு யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈ.பி.டி.பி முகாமில் கேட்கச் சென்றேன். அப்போது அங்கு எனது வீட்டில் வந்து தொலைபேசியை எடுத்துச் சென்ற மூவரையும் எனது கண்ணால் கண்டேன். அவர்கள் அங்கு தமது பணியில் ஈடுபட்டிருந்தனர்.
எனவே இது தொடர்பில் ஆணைக்குழு ஆவன செய்து எனது மகனை மீட்டுத்தரவேண்டும் என கண்ணீர்மல்க வேண்டினார். (த-101)

# ஈ.என்.டீ.எல்.எவ் மகனைப் பிடித்தது

யாழ்ப்பாணம், டிசெ 13
1989ஆம் ஆண்டுயாழ்.நகரில் வைத்து ஈ.என்.டீ.எல்.எவ் பாபுஜி என்பவரால் பிடித்துச் செல்லப்பட்ட எனது மகன் மொகமட் லாசீர் தொடர்பில் பதில் கூறுங்கள் என தாயார் சரீபா ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக நேற்று வேண்டுகோள் விடுத்தார்.
அவர் மேலும் கூறுகையில்,
யாழ்.நகரில். வசித்த காலத்தில் 1989 ஆம் ஆண்டு வடக்கு–கிழக்கு இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த நேரம் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஈ.என்.டீ.எல். எவ் அமைப்பைச் சேர்ந்த பாபுஜி தலைமையிலான அணியினரால் எனது மகன் கட்டாயத்தின் பேரில் பிடித்து வைக்கப்பட்டார். அதன் பின்னர் 1989 ஆம் ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதி கிளிநொச்சியில் இருந்த இந்திய இராணுவத்துடன் இணைந்திருந்த ஈ.என்.டீ. எல்.எவ் முகாமுக்குச் சென்று எனது மகனைச் சந்தித்தேன். இருப்பினும் அவரை விடுவிக்க மறுத்துவிட்டனர்.
அதுவே அவரை நான் கண்ட இறுதிச் சந்தர்ப்பம். இதன் பின்னர் பல இடங்களிலும் பலருடன் தொடர்பு கொண்ட போதும் மகன் தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இதற்காக எந்த உதவிகளும் எனக்குக் கிடைக்கவில்லை – என்றார். (த-101)

# மகனை ராணுவம் பிடித்த கவலையில் கணவரும் காணாமற்போய்விட்டார்

## பெண்ணொருவர் கண்ணீருடன் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 13
இராணுவத்தினர் பிடித் துச் சென்ற எனது மகனைக் காணாதமையால் எனது கணவரும் மன அழுத்தத்துக்கு உள்ளாகி காணாமற்போய் விட்டார். இருவரையும் எப்படியாவது மீட்டுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார் தாய் ஒருவர்.
காணாமற்போனோர் தொடர்பில் நடைபெற்று வரும் விசாரணையின் முதல் நாள் அமர்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
18 வயதான எனது மகன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரம் படித்துக் கொண்டிருந்தார். 1996 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி, மீசாலை – புத்தூர் சந்தியில் வைத்து இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டார். எனது கணவரும் அப்போது உடன் இருந்தார். எனது மகனை விடுவிக்க கணவர் முயற்சி செய்த போதும் அது கைகூடவில்லை.

> மீசாலை – புத்தூர் சந்தியில் வைத்து இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டார். எனது கணவரும் அப்போது உடன் இருந்தார். எனது மகனை விடுவிக்க கணவர் முயற்சி செய்த போதும் அது கைகூடவில்லை.

இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட பின்னர் எனது மகன் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை. இதனால் எனது கணவர் மன அழுத்தத்துக்கு உள்ளாகினார். மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருந்த அவரும், 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அச்சுவேலியிலிருந்த எங்களது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று காணாமற்போய் விட்டார். எப்படியாவது இருவரையும் மீட்டுத் தாருங்கள்– என்றார். (த-5-ரி6)

# துமிந்தவின் சுற்றிவளைப்பில் தம்பியைப் பிடித்துச் சென்றனர்

## ஆணைக்குழு முன்னிலையில் சகோதரர் சாட்சியமளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13
நாவற்குழி இராணுவ கொமாண்டர் துமிந்த மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது எனது தம்பியைப் பிடித்துக் கொண்டு சென்றார்கள். 19 வருடங்களாகிவிட்டன. இன்னமும் எனது தம்பியைக் காணாமல் தேடிக் கொண்டிருக்கின்றேனென்று சகோதரான பி.ஆறுமுக சாமி சாட்சியமளித்துள்ளார்.
யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றஆணைக்குழு அமர்வில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி நாவற்குழி இராணுவ கொமாண்டர் துமிந்தவினால் சாவகச்சேரியில் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் முடிவில் மக்கள் எல்லோரையும் ஓரிடத்தில் இருத்தி, 24 பேரின் பெயரை அழைத்தனர். அதில் எனது தம்பியின் பெயரும் இருந்தது. அவரை பிக்கப்பில் ஏற்றிக் கொண்டு சென்றனர். அதன் பின்னர் அவரைக் காணவில்லை என்று தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். (த-5-ரி6)

# எனது மகனுடன் பல இளைஞர்கள் இராணுவத்தால் பிடிக்கப்பட்டனர்

## தந்தையார் நேற்று ஆணைக்குழுவிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13
மண்கும்பான் பள்ளிவாசலை முற்றுகையிட்டு கனரக ஆயுதங்களுடன் நின்ற இராணுவத்தினரே 24வயதான எனது மகனையும் இன்னும் பல இளைஞர்களையும் பிடித்துச் சென்றனர். அதன் பின் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது தான் எனக்குத் தெரியும் எனச் சாட்சியம் அளித்தார் தந்தை ஒருவர்.
நேற்று யாழ் மாவட்டச் செயலகத்தில் இரண்டாவது நாளாக நடைபெற்ற காணாமற்போனோர் தொடர்பான விசாரணையில் சாட்சியமளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற போரின்போது அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து பலர் மண்கும்பான் பள்ளிவாசலில் தஞ்சம் புகுந்திருந்தோம். அங்குள்ள கடற்கரைப் பக்கம் மலம் கழிக்கச் சென்று திரும்பி வந்தபோது அல்லைப்பிட்டி கோட்டையில் இருந்து கனரக ஆயுதங்களுடன வந்த இராணுவத்தினர் அல்லைப்பிட்டிப்பள்ளிவாசலைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டு நின்றனர். நாங்கள் அங்கே போகும் போது எனது மகனை [illegible] ரணை செய்தனர். [illegible] பின்னர் விடுவார்கள் என்று எதிர் பார்த்து நாங்கள் நின்றபோது எங்களை அங்கிருந்து கலைத்து பள்ளிவாசலுக்குள் வைத்துப் பூட்டி விட்டார்கள். அதுபோல் இன்னும் பல இளைஞர்களையும் அவர்கள் பிடித்து வைத்திருந்தார்கள். சிறிது நேரத்தின் பின் துப்பாக்கிச் சத்தங்கள் அதிகமாகக் கேட்டன. பின்னர் பள்ளிவாசல் கதவைத் திறந்தார்கள் நாங்கள் வெளியில் வந்து பார்த்தபோது அங்கு எனது மகன் இல்லை. நான் எங்கே எனது மகன் என்று கேட்ட போது எதுவும் கூறவில்லை. துப் பாக்கியைக் காட்டி என்னை மிரட்டினார்கள். அதன் பின்னர் நாங்கள் மகனைத் தேடி அலையாத இடம் இல்லை.
எல்லா இராணுவ முகாம்களுக்கும் சென்று கேட்டோம். ஆனால் தாங்கள் கடத்த வில்லை எனத் தெரிவித்தனர். எனது மகன் உயிருடன் தான் உள்ளார். [illegible] மகனைக் [illegible] –என்றார். (த-21)

> நான் எங்கே எனது மகன் என்று கேட்ட போது எதுவும் கூற வில்லை. துப்பாக்கியைக் காட்டி என்னை மிரட்டினார்கள்.

# மகளின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்துக் கணவரைக் கடத்தினர்

யாழ்ப்பாணம், டிசெ 13
எனது மகளின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்து விட்டு கண்ணுக்கு போக்கஸ் லைட் அடித்து எனது கணவரை இராணுவத்தினர் கடத்திச் சென்றார்கள் என மனைவி ஒருவர் சாட்சியமளித்தார்.
காணாமற்போனோர் விசாரணைஆணைக்குழுவின் இரண்டாம் நாள் அமர்வு நேற்றுச் சனிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில்நடைபெற்றது. அங்கு தனது கணவரை இராணுவத்தினர் கடத்திச் சென்றதாக மனைவி சாட்சியமளித்தார்.
எனது வீடு கொழும்புத்துறை எழுலூர். எனது கணவரின் பெயர் பாலையா பாலச்சந்திரன்.எனது கணவருக்கு 41வயது இருக்கும் போது, இராணுவத்தினர் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வீட்டுக்கு வந்து கடத்திச் சென்றார்கள்.
நள்ளிரவு 12.00 மணியளவில் இராணுவத்தினர் வெள்ளைவானில் சிவில் உடையில் துப்பாக்கியுடன் வந்து, வீட்டில் இருந்த எங்கள் கண்களுக்கு போக்கஸ் லைட் அடித்து விட்டுக் கணவரைக் கடத்திக் கொண்டு போனவர்கள்.
இராணுவத்தினர் எங்கள் கண்களுக்குப் போக்கஸ் லைட் அடித்ததால் அவர்களின் முகம் எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் கத்தினோம். அப்போது எனது மகளின் நெஞ்சில் துப்பாக்கியைவைத்துவிட்டு கத்தக் கூடாது என்று அச்சுறுத்தினார்கள்.
எனக்கு 6 பிள்ளைகள். எங்களுக்கு உதவிகள் இல்லாததால் பிள்ளைகளைப் படிப்பிக்க முடியாமல் போய் விட்டது. எனது கணவரைக் கண்டு பிடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றார். (த-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி, பிள்ளையுடன் மகன் வட்டுவாகலில் சரணடைந்தார்

## ஆணைக்குழுவின் முன் தந்தை உருக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

எனது மகனுடன் அவனது மனைவியும் ஒன்றரை வயதுப் பாலகனும் வட்டுவாகல் பாலத்தடியில் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். இன்று வரை அவர்களைப்பற்றி எதுவும் தெரியவில்லை. ஒன்றரை வயதுப் பாலகன் என்ன பாவம் செய்தான்? அவன் எங்கிருக்கின்றான்? எப்படியாவது கண்டுபிடித்துத் தாருங்கள் என்று கண்ணீருடன் ஆணைக்குழு முன் கோரிக்கை விடுத்தார் தந்தையான கதிரமலை.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்விகளை முன்வைத்தார்.

போரின் இறுதியில் அதாவது, 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தோம். அப்போது வட்டுவாகல் பாலத்தடியில் வைத்து இராணுவத்தினர் போராளிகளைச் சரணடையுமாறு அறிவித்தல் விடுத்தனர். எனது மகன் அரசியல்துறையில் இருந்தவர்.

ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவார், சரணடையுங்கள் என்று தொடர்ச்சியாக அறிவித்துக் கொண்டிருந்தனர். பொதுமன்னிப்பில் அவன் வருவான் என்பதை நம்பி அவனைச் சரணடையச் சொன்னோம். அவனும் அவனது மனைவி, ஒன்றரை வயது மகன் ஆகியோர் ஒன்றாகச் சரணடைந்தனர்.

இதன்போது எனது மகனுடன், தங்கன், இளம்பரிதி, யோகி, பாலமோகன் மற்றும் அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் ஆகியோர் இருந்தனர். சரணடைந்த போது மகனைக் கண்ட பின்னர் இன்று வரை அவனைக் காணவில்லை. அந்த ஒன்றரை வயதுப் பிள்ளை என்ன பாவம் செய்தது? என்று ஆணைக்குழுவினரை நோக்கிக் கேட்டார் கதிரமலை.

(த-5-ரி6)

# கடற்படை கடத்திய கணவன் இறந்ததாக மரணச் சான்றிதழ்

## ஆணைக்குழு முன்னால் மனைவி கண்ணீர்ச் சாட்சியம்



யாழ்ப்பாணம், டிசெ. 13

கடற்படையினர் கடத்திச் சென்ற எனது கணவர் இறந்து விட்டதாக நீதிமன்றில் மரணச் சான்றிதழ் தந்தார்கள் எனச் சாட்சியமளித்தார் பெண் ஒருவர்.

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த காந்தி யாழினி என்பவர் சாட்சியமளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அல்லைப்பிட்டிப் பகுதியில் இராணுவத் தினருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நடைபெற்ற போரின்போது, யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர், எனது கணவர் செல்வானந்தம் காந்தி 2006 ஓகஸ்ட் 15 ஆம் திகதி கடற்படையினரால் அல்லைப்பிட்டி பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டார்.

அவர் கடத்தப்பட்டவேளை அவருக்கு வயது 23. கடத்தப்பட்டு, காணாமற்போன எனது கணவர் லான்ட்மாஸ்டர் சாரதி. அவர் யாழ்ப்பாணத்துக்கு பொருள்கள் வாங்க வந்தவர். அல்லைப்பிட்டிக் கடற்படை முகாமில் வைத்து அவரைக் கடத்திச் சென்றார்கள். கடற்படை முகாமில் கணவரை வைத்திருந்தபோது அந்தப் பகுதியால் வந்தவர்கள் கண்டுவிட்டுச் சொன்னார்கள். கடற்படை முகாமில் கேட்டபோது அவர் வந்து போய்விட்டார் என்று சொன்னார்கள். பிறகு பொலிஸ் நிலையத்தில் முறையிட்டோம்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மரண சான்றிதழ் எடுக்கப்பட்டுள்ளது.

எனது கணவர் இறந்துவிட்டார் என்று மரணச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தாலும், அவர் உயிருடன் தான் இருக்கின்றார் என நினைக்கின்றேன். எனது கணவரை கண்டுபிடித்துத் தருமாறு கேட்கின்றேன்–என்றார்.

(த-106)

# இராணுவச் சீருடையில் கணவரை நல்லூரில் கண்டனர் உறவினர்கள்

## எப்படியாவது அவரை மீட்டுத் தாருங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்ட எனது கணவர் தற்போது இராணுவச் சீருடையில் அவர்களுடன்தான் உள்ளார். அவரை இந்த வருடம் ஜனவரி மாதம் நல்லூரில் எனது உறவினர்கள் கண்டுள்ளனர். அவரை எப்படியாவது என்னிடம் மீட்டுத் தாருங்கள் என்று, கடத்திச் செல்லப்பட்டவரின் மனைவி ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு, இரண்டாவது தடவையாக யாழ்.மாவட்டத்தில் தனது அமர்வை நேற்று முன் தினம் நடத்தியது. யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த அமர்வில், சாட்சியமளிக்கையிலேயே குறித்த பெண்மணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி அன்று எனது கணவர் அதிகாலை 3.30 மணிக்கு வீட்டில்வைத்து இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டார். அதன் பின்னர் தொடர்பு இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில், 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது, அவர்களுடன் இணைந்து எனது கணவரும் செல்வதைக் கண்டேன். உடனே அவர், தலைக் கவசத்தைக் கழற்றி எனக்குக் கைகாட்டி அடையாளப்படுத்தினார். அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் பலாலி வீதியில் இராணுவ உடையுடன் அவரைக் கண்டேன். அப்போது பிக்கப்பில் இருந்தவாறே கை காட்டினார்.

இதன் பின்னர் காணவில்லை. ஆனால் இந்த ஆண்டு ஜனவரி மாதம் நல்லூர் கோயில் பின் வீதியில் எனது கணவரைக் கண்டதாக, உறவினர்கள் தெரிவித்தனர். அவர் உயிருடன் இருக்கின்றார். இராணுவ முகாம்களில் சென்று தேடுதல் நடத்தினால் அவரைப் பிடிக்கலாம் – என்றார்.

(த-5-ரி6)

# 4 தலையாட்டிகள் வைத்தே என் மகனைப் பிடித்தார்கள்

## தந்தையொருவர் ஆணைக்குழுவிடம் முறையீடு



யாழ்ப்பாணம், டிசெ. 13

நான்கு தலையாட்டிகளை வைத்தே இராணுவத்தினர் எனது மகனை பிடித்தார்கள். கேட்டதற்கு அப்படித்தான் எனக் கூறினார்கள் என்று சாட்சியம் சொன்னார் காணாமற்போன சிவகுமாரின் தந்தையான சின்னத்தம்பி.

நேற்று முன் தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணரமற்போனோர் ஆணைக் குழு அமர்வில் சாட்சியம் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாவற்குழி கிழக்கு, கோவிலாக்கண்டிப் பகுதியில் கடந்த 1996 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் 19 ஆம் திகதி எமது பகுதியில் இராணுவத்தினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு பலரை அழைத்துச் சென்றனர். அங்குள்ள பிரதேச சபையில் 4 தலையாட்டிகளை நிறுத்தி வைத்திருந்தனர். அப்போது ஆண்களை ஒரு வரிசையாகவும் பெண்களை ஒரு வரிசையாகவும் நிற்க வைத்து குறித்த நான்கு தலையாட்டிகளையும் வைத்து அடையாளப் படுத்தினர். வரிசையில் எனக்கு முன்னால் நின்ற எனது மகனைத் தலையாட்டி முன் கொண்டு சென்றபோது அங்கு நின்ற தலையாட்டிகள் தலையை ஆட்டவில்லை. இதன்போது 4 ஆவது தலையாட்டியின் பின்னால் நின்ற இராணுவச் சிப்பாய் தலையாட்டியின் காலில் துவக்கால் குத்தினார். அப்போது அவர் நோவில் தனது தலையை ஆட்டினார். உடனே எனது மகனை பிடித்துச் சென்று விட்டார்கள்.

நான் சம்பவத்தைக் கூறி அவர் தலையாட்டவில்லை ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு அது அப்படித்தான் என்று கூறினார்கள். நாவற்குழிப் படைமுகாமின் இராணுவ அதிகாரியாக துமிந்த கப்பரிவெலான மற்றும் 2 ஆம் நிலை அதிகாரியாக சுனேன் ஆகியோர் பணி புரிந்தனர். அவர்களிடம் எனது மகனை விடுதலை செய்யும்படி ஆங்கிலத்தில் எழுதிக் கடிதம் கொடுத்தேன். அப்போதும் அவர்கள் எனது மகனை விடாது வாகனத்தில் ஏற்றி இராணுவ முகாமுக்குள் கொண்டுபோய் விட்டார்கள். அங்கு போய் கேட்டபோதும் அவரை விடவில்லை. இதுவரை எனது மகனைப் பற்றிய எந்தத் தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை– என்றார்.

(த-21)

# டக்ளஸின் ஆள்கள் மகனை வெள்ளைவானில் கடத்தினர்

யாழ்ப்பாணம், டிசெ. 13

சுண்டுக்குளியில் வீட்டில் படுத்துறங்கிக் கொண்டிருந்தவேளை, 2007 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி வெள்ளை வானில் வந்த டக்ளஸின் ஆள்களால் பிடித்துச் செல்லப்பட்ட எனது மகன் மத்தியூஸ் றோபேட்டை மீட்டுத் [illegible] வேண்டும் என அவரது தந்தையா[illegible] நேற்று முன் தினம் ஆணைக்குழு முன்னால் சாட்சியமளித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் காணாமற்போனோர் கண்டறியும் ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியமளித்த மத்தியூஸ்றோபேட்டின் தந்தை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று இரவு நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. சுமார் 10 பேர் எமது வீட்டு வளவுக்குள் முகத்தை மூடிக் கட்டியவாறு வந்தார்கள். முதலில் மின் விளக்குகளை அடித்து நொறுக்கிய பின்னர் வீட்டுக்குள் தலையாட்டி சகிதம் வந்தனர்.

இவ்வாறு வந்தவர்கள் நான் உட்பட வீட்டில் இருந்த அனைவரையும் முழங்காலில் இருத்தி வைத்துவிட்டுத் தலையாட்டியை அழைத்தபோது அவர் எம்மில் யாரையும் இல்லை என்றார். இதன்போது வீட்டில் இவ்வளவு பேரும்தானா என அவர்கள் வினாவியபோது முன் வீட்டில் படுத்திருந்த என மூத்த மகன் தொடர்பில் தெரியப்படுத்த அவரை அழைக்கச் சென்றேன். அப்போது அவர்கள் மகனை ஏற்கனவே அழைத்துச் சென்று கொண்டிருந்தனர். கூக்குரல் இட்டவாறு பின்னால் ஓடினோம். எமது திசை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் நாம் பின்தொடர்வதை நிறுத்தி விட்டோம் இவரைப் பிடித்துச் சென்றது டக்ளஸின் ஆள்கள்– என்றார்.

(த-101)

# திருமணமாகி 15 நாளில் எனது மகனை கடத்தினர்

யாழ்ப்பாணம், டிசெ. 13

திருமணமாகி 15 நாளில் எனது மகனைத் திருநெல்வேலியில் உள்ள வீட்டில் வைத்துக் கடத்திச்சென்றனர். அவரை 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொள்ளுப்பிட்டியில் ஈ.பி.டி.பி உறுப்பினர்களுடன் எனது உறவினர்கள் கண்டனர் எனத் தந்தையார் ஒருவர் சாட்சியமளித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வில் சாட்சியம் அளித்த தந்தை ஒருவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி இராமநாதன் வீதியில் உள்ள எனது வீட்டுக்கு அதிகாலை ஒரு ஹைஏஸ், 4 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் வந்த 15 வரையான ஆயுதம் தரித்தோர் எனது மகனைக் கடத்திச் சென்றனர்.

இதன் [illegible] மாதம் எனது மகனைக் கொழும்பு, கொள்ளுப் பிட்டியில் ஈ.பி.டி.பி உறுப்பினர்களுடன் எனது நெருங்கிய நண்பர் நேரில் கண்டுள்ளார். எனவே அவர் உயிருடன் உள்ளார். இதனால் கடத்தப்பட்ட எனது மகனை இந்த ஆணைக் குழு [illegible]டன் மீட்டுத்தரவேண்டும்–என்றார்.

(த-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மைய மழையை அடுத்து உள்ளூர் வீதிகள் பெரும் சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.13
அண்மையில்பெய்தகனத்தமழையால் நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில்உள்ள அநேகமான தாழ்ந்த வீதிகள் பெரும் சேதமடைந்துள்ளன. இந்த வீதிகளில் மழைவெள்ளம் அதிகளவு தேங்கி நின்றதால் வீதிகள் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

பூதர்மடம், அம்மன் வீதி, தபால் பெட்டி வீதி, பிரான்பற்று வீதி, கரந்தன் வீதி, நீர்வேலி–கோப்பாய் இணைப்பு வீதி உட்பட பல குறுக்கு வீதிகள், ஒழுங்கைகள் என்பவை பெரும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகள் தார் வீதிகளாகக் காணப்பட்டாலும் பல வருடங்களாக அவை புனரமைப்பு இன்றி இருப்பதால் அண்மையில் கொட்டித் தீர்த்த கனத்த மழையால் வீதிகள் சேதமுற்று மக்கள் பயணிக்க முடியாது குண்டும் குழியுமாக உள்ளன.

சேதமடைந்த வீதிகளைப் புனரமைப்பதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ஐ-17)

# ஜனநாயகத்தைப் பற்றி பேசுபவர்கள் குறைவு

யாழ்ப்பாணம்,டிசெ.13
ஜனநாயகத்தைப்பற்றியும், மனித உரிமைகளைப் பற்றியும் எழுதவும், பேசவும் விவாதிக்கவும் தக்க வல்லமை உடையவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் குறைவாகவே காணப்படுகின்றனர் என அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான நிலாந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சுதந்திரப் பயணம் எனும் இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு "தமிழ் மக்கள் உள்நோக்கி தங்களுடைய மனித உரிமைகளை வெளிப்படுத்துவது எப்படி" என்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக உள்ளடக்கம்எந்தளவுபலப்படுத்தப் படுகின்றதோ அந்த அளவுக்குத் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கான அனைத்துலக அங்கீகாரமும் ஆதரவும் அதிகரிக்கும்.

தமிழ் மக்கள் இறந்த காலத்தில் பெற்ற படிப்பினையின் அடிப்படையில் தமது ஜனநாயகச் சூழலைப் பலப்படுத்தவேண்டும். மனித உரிமை சூழலை மேம்படுத்தவேண்டும்.

கொழும்பை நோக்கியும், இந்தியாவை நோக்கியும் தமது கூட்டுரிமைகளையும், அரசியல் உரிமைகளையும் கோரிக் கொண்டிருக்கும்– போராடிக்கொண்டிருக்கும் ஒரு சமூகம் உள்நோக்கித் திரும்பித் தனக்குள்ளும் ஜனநாயகச் சூழலையும் மனித உரிமைச் சூழலையும் மேம்படுத்த விழையவேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் மனித உரிமைகள் தொடர்பில், ஜனநாயகம் தொடர்பில் போதியளவு விவாதங்கள் நடத்தப்படவில்லை. தமிழ் மக்கள் தங்களுடைய தேசிய ஜனநாயக உள்ளடக்கத்தைப் பலப்படுத்தத் தவறினால் தொடர்ந்தும் அவர்கள் வெற்றியில் இருந்து பின்னோக்கித் தள்ளப்படுவார்கள்–என்றார். (த-ஐ-21)

# மாமுனைப் பனம்தோட்டத்தை சேதமாக்கும் காட்டுப்பன்றிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.13
வடமராட்சிக் கிழக்கு மாமுனையில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனம் தோட்டத்தைக் காட்டுப் பன்றிகள் சேதப்படுத்தி வருகின்றன.

இந்தப் பனம் தோட்டத்தில் இந்த வருடம் சபையால் ஐம்பது ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

இந்த நிலையில் பனம் தோட்டத்துக்குள் அத்துமீறிச் செல்லும் பன்றிகள் அங்கு நடுகை செய்யப்பட்டுள்ள பனம் விதைகளைக் கிளறிச், சேதப்படுத்தி வருகின்றன.

இதேவேளை, பனம் தோட்டத்துக்குள் அத்துமீறிச் செல்லும் பன்றிக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தப் பனை அபிவிருத்தி சபை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. (த-ஐ-17)

# வடக்கு பட்ஜெட்டுக்கு டிசெ. 15 அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,டிசெ. 13
வடக்கு மாகாண சபையினால் அடுத்தாண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பாதீட்டுக்கான அங்கீகாரம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள அமர்வில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

8 ஆயிரம் மில்லியன் ரூபா அடுத்த ஆண்டுக்குத் தேவை என்று வடக்கு மாகாண சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும், மத்திய அரசினால் 3 ஆயிரத்து 199 மில்லியனே ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட 3 ஆயிரத்து 199 மில்லியனே பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் அமைச்சுக்கு 301 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், உள்ளூராட்சி அதிகார சபையின் வீதிகளுக்கு 100 மில்லியனும், உள்ளூராட்சி அதிகார சேவைகளுக்கு 20 மில்லியனும், கழிவு முகாமைத்துவத்துக்கு 45 மில்லியனும், கிராமிய மாற்றீட்டு சக்திக்கு 8 மில்லியனும், சன சமூக நீர்வழங்கலுக்கு 50 மில்லியனும், மாநகர சபைகளின் திறன் அபிவிருத்திக்கு ஒரு மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வீடமைப்புக்கு 9 மில்லியனும், சுற்றுலாத்துறைக்கு 50 மில்லியனும், கிராமிய தொழிற்துறைக்கு 15 மில்லியனும், காணி நிர்வாகத்துக்கு 3 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

> விவசாய அமைச்சுக்கு 410 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில், விவசாயத் துறைக்கு 240 மில்லியனும், கால்நடை அபிவிருத்திக்கு 111 மில்லியனும், நீர்ப்பாசனத்துக்கு 55 மில்லியனும், கூட்டுறவு அபிவிருத்திக்கு 4 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சுக்கு 410 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில், விவசாயத் துறைக்கு 240 மில்லியனும், கால்நடை அபிவிருத்திக்கு 111 மில்லியனும், நீர்ப்பாசனத்துக்கு 55 மில்லியனும், கூட்டுறவு அபிவிருத்திக்கு 4 மில்லியனும் ஒதுக்கப்பட் டுள்ளன.

கல்வி அமைச்சுக்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் கல்விக்கு 969 மில்லியனும், விளையாட்டுத் துறைக்கு 22 மில்லியனும், கலாசார அலுவல்களுக்கு 9 மில்லியனும் பங்கீடு செய்யப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சுக்கு 962 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் சுகாதாரத்துக்கு 801 மில்லியனும், சுதேச வைத்தியத்துக்கு 100 மில்லியனும், சமூக சேவைகளுக்கு 30 மில்லியனும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புக்கு 31 மில்லியனும் பங்கீடு செய்யப்பட்டுள்ளன.

மீன்பிடி அமைச்சுக்கு 408.3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளூர் மீன்பிடிக்கு 19 மில்லியனும், போக்குவரத்துக்கு 16 மில்லியனும், கிராமிய அபிவிருத்திக்கு 30 மில்லியனும், மாகாண வீதிகளுக்கு 343 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (த-5)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றுவரும் மூன்று மாணவிகளுக்குக் கனடாவில் உள்ள இ.விக்னேஸ்வரன் என்பவர் தனது தாயார் இராமலிங்கம் பராசக்தியின் நினைவாக உறவினர் மூலம் சைக் கிள்களைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார். (த-ஐ-9)

# குடும்ப நல சேவையாளர் விபத்தில் காயம்

சாவகச்சேரி,டிசெ.13
அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிய குடும்பநல சேவையாளர் சென்ற மோட் டார் சைக்கிள், ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அலுவலரின் காலில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி கோவிலுக்கு முன்பாக ஏ-9 வீதியில் நடைபெற்றுள்ளது.

வரணி பிரிவு குடும்ப நல சேவையாளர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு வீடு சென்ற வேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (த-ஐ-9)

# இடைநிறுத்திய முன்பள்ளிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.13
வடக்குமாகாணம் உட்பட அனைத்து மாகாணங்களிலும் உள்ளூராட்சிச் சபைகளால் நடத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த பாலர் பாடசாலைகளை மீண்டும் அந்தந்த உள்ளூராட்சிச்சபைகள் மூலம் நடத்துவதற்கு உள்ளூராட்சிச் சபைகள் மாகாண சபைகள் அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதப்பிரகாரம், வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே சேவையாற்றிவரும் 7 முன்பள்ளி ஆசிரியர்களுடன், மேலும் 44 முன்பள்ளி ஆசிரியர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் யாழ்.மாநகர சபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, மன்னார் நகரசபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, வேலணை பிரதேச சபை, வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, காரைநகர் பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, கரைச்சிப் பிரதேச சபை, பூநகரிப் பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலிப் பிரதேச சபை, மாந்தை மேற்குப் பிரதேச சபை, வவுனியா வடக்குப் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை, மாந்தை கிழக்குப் பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை ஆகியவற்றைச் சேர்ந்த 51 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (த-ஐ-9)

# நோய்கள் வருமுன் காக்கும் சுகாதார சேவை அவசியம்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13
வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தொற்று நோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தி மக்களைக் காப்பதே பிரதான நோக்கமாகும். நோய் வருமுன் காக்கும் சுகாதார சேவைகள் இன்றைய கால கட்டத்தில் மிகமுக்கியமாகவுள் ளன.

இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது:-

நோய்த் தடுப்பு சுகாதார சேவை வடக்கு மாகாணத்தில் சிறப்பாக இயங்கி வருகின்றபோதிலும் பல அடிப்படைத்தேவைகளைப்பூர்த்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேசத்தைப் பொறுத்தவரை சுகாதார சேவையைத் திறம்படச் செய்வதற்கு அடிப்படையாகத் தேவைப்பட்ட கட்டடம் கிடைத்துள் ளது.

கட்டடம் கிடைத்துள்ள போதிலும் பணிமனைக்குச் செல்லும் வீதி குறைபாடுகளுடன் காணப்படுவதால் இந்த வீதியைத் திருத்துவதற்கு வலி.தென்மேற்குப் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்– என்றார். (த-ஐ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகரப் பகுதியில் 5,312 வீடுகள் தரிசிப்பு

## நுளம்புக்கட்டுப்பாட்டு வாரத்தில் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ 13

யாழ்.மாநகரப் பகுதியில் கடந்த வாரம் இடம் பெற்ற நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது, 5ஆயிரத்து 312 குடியிருப்பாளர்களின் வீடுகள் தரிசிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தரிசிப்பு நடவடிக்கையின் போது நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகக் காணப்பட்ட 57 குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் நாவாந்துறையில் ஆயிரத்து 197 குடியிருப்பாளர்களின் சுற்றாடல் பார்வையிடப்பட்டதோடு, அதில் நுளம்பு பெருகுவதற்கு வழிசமைத்த 4 குடியிருப்பாளர்களுக்கு எதிராகவும், குருநகர் பிரதேசத்தில் 999 குடியிருப்பாளர்களின் சுற்றாடல் பார்வையிடப்பட்டு அதில் 7 பேருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் யாழ்.நகரில் ஆயிரத்து 132 குடியிருப்புக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, 9 பேருக்கு எதிராகவும், குருநகரில் 776 வீடுகளின் சுற்றாடல் சோதனையிடப்பட்டு 11பேருக்கு எதிராகவும், கொழும்புத்துறை, குருநகரில் 526 குடியிருப்புக்களின் சுற்றாடல் தரிசிக்கப்பட்டு 16 பேருக்கு எதிராகவும், அரியாலை மற்றும் யாழ்.நகரில் 682 குடியிருப்புச் சுற்றாடல் தரிசிக்கப்பட்டு 10 பேருக்கு எதிராகவும் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதேவேளை, டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் குருநகர் மற்றும் நாவாந்துறைப் பிரதேசங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் இடம் பெற்ற இந்த

> “டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் குருநகர் மற்றும் நாவாந்துறைப் பிரதேசங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படும்”

நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது குறிப்பாக மாநகரப் பகுதியில் உள்ள வடிகால், வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு , கால்வாய்களில் இருந்த சேற்றுக் கழிவுகள் அகற்றப்பட்டன.

அதனைவிட சில இடங்களில் தேங்கிக் கிடந்த கழிவுப் பொருள்களும் அகற்றப்பட்டன.

இதன்போது குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புச் சுற்றாடல்களில் கழிவுப் பொருள்களைத் தேக்கி வைக்கவேண்டாம்எனவும்மற்றும்மழை நீர் தேங்காதவாறு சுற்றாடலைப் பாதுகாக்குமாறும் சுகாதாரப் பகுதியினரால் அறிவுறுத்தப்பட்டது.

இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது, மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்தவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள், சுகாதார பாதுகாவலர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், தாதிகள், பரிசோதகர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார், பொது நிறுவனப் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் போன்றவற்றின் உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்என இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (த-ஐ-17)

# சீரற்ற காலநிலை காரணமாக கரைவலை மீன்பிடி பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 13

தற்போதைய சீரற்ற காலநிலை மற்றும் கடல் கொந்தளிப்பால் வடமராட்சி கிழக்கில் மீனவர்களின் கரை வலைத் தொழில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கரைவலைத் தொழில் பாதிப்பால் பெரும் எண்ணிக்கையான மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சில மீனவர்கள் தற்போது சிறு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேசமயம், அனேகமான மீனவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக மீன்பிடித் தொழில் இன்றி தமது குடும்ப வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களுக்கான இடர் நிவாரண உதவியைப் பெற்றுத் தருமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் இதுவரை எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-ஐ-17)

# விவசாயிகளுக்கு உரமானியம்; பட்ஜெட்டில் சில திருத்தங்கள்

கொழும்பு,டிசெ 13

விவசாயிகளுக்கான உரமானியம் வழங்குவது தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த வாரம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக, நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உரமானியத்தை அதிகரிப்பதற்கும், பழவகைகள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம், சோளம், மிளகாய்,சோயா போன்ற செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் அதிக உர மானியத்தை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


மேலும் சிறிய அளவுகளில் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் அதிக உரமானியங்கள் வழங்குவதற்கும், அவற்றைப் பணமாக வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-22)

ஒளிப் படச் செய்தி



# இனியாவது கவனிப்பார்களா?

வட்டுக்கோட்டையில் 1.5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இத்தியடி கோவிலூடாகச் செல்லும் ஞானசம்பந்தர்-முதலி கோவில் வீதியானது பகுதியளவில் 2013 ஆம் ஆண்டு புனரமைப்புச்செய்யப்பட்டு மிகுதியான 700 மீற்றர் தூரம் இன்னும் புனரமைப்புச் செய்யப்படாதுள்ளது. இவ்வீதியானது மழை காரணமாகப் பெரும் சேதமடைந்து மக்களின் வீதிப் போக்குவரத்துக்குப் பெருஞ் சிரமாக இருக்கின்றது.



இந்தக் கிராம எல்லைக்குட்பட்ட மக்கள் அதிகம் பயன்படுத்தும் வீதியாக இது விளங்குவதால் இந்த 700 மீற்றர் தூரத்தை முன்னுரிமை அடிப்படையில் மிக விரைவாகப் புனரமைப்புச்செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதிச் சேதம் காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்கள், அரச ஊழியர்கள் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக முன்னர் பலதடவைகள் சுட்டிக் காட்டப்பட்டபோதும் வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (து)

# கடையில் நின்ற பெண்ணின் தங்கச்சங்கிலி அறுத்தெடுப்பு

சாவகச்சேரி,டிசெ 13

கடையில் பொருள்கள் வாங்குவது போல பாசாங்கு செய்து கடையில் நின்ற பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு திருடர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கடையில் நின்ற பெண்ணிடம் சிகரெட் கேட்ட போது, அதனைக் குறித்த பெண் மேசை லாச்சிக்குள்ளிருந்து எடுப்பதற்குக் குனிந்துள்ளார். அப்போது கழுத்தில் இருந்த சங்கிலியை இழுத்து அறுத்துக் கொண்டு திருடர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர்.

சங்கிலியைத் திருடர்கள் அறுத்தபோது அதனைக் குறித்த பெண் பிடித்தபோதிலும் அதன் ஒரு பகுதி அவரது கைக்குள் மாட்டிக் கொள்ள, மிகுதியுடன் அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

குறித்த பெண் சுதாகரித்துச் சத்தமிடுவதற்கு முன்னர் திருடர்கள் தயாராக நின்ற மோட்டார் சைக்கிளில் ஏறி ஓடித் தப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக் கிளைகளில் சீருடைத்துணி வழங்க ஏற்பாடு

சாவகச்சேரி,டிசெ.13
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மாண வர்களின் நலன்கருதி அந்தந்தக் கிளைகளில் வைத்துச் சீருடைத்துணிகள் வழங்கவுள்ளனர்.
சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சீருடைக்கான துணிகள் வழங்கப்பட்டபோது பெரும் எண்ணிக்கையான பெற்றோர் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இதனையடுத்து பெற்றோர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டின் பிரகாரம், சங்கத்தின் 23 கிளைகளிலும் சீருடைத் துணிகள் வழங்கப்படவுள்ளதாகச் சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (த-ஜ-9)

# வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.13
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடை பெறவுள்ளன.
இடம்பெறும் திருவிழாக் கள் வரிசையில் எதிர் வரும் 21 ஆம் திகதி தி ங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்தி ருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திரு விழாவும் நடைபெறும்.(த-ஜ-ரி5)

# ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு 5 தினங்கள் விடுமுறை

யாழ்ப்பாணம்,டிசெ.13
ஜெய்ப்பூர் நிறுவனத்தின் நடப்பு வருடத்துக்கான விடுமுறை யாக எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரையான ஐந்துதினங்கள் நிறுவனம் மூடப்பட்டிருக்கும் என நிறுவனத்தின் தலைவர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (த-ஜ-ரி5)

## ஒளிவிழா நிகழ்வுகள்

வரணி,டிசெ.13
வரணி தென்னிந்தியத் திருச்சபை பாலர் பகல் பராமரிப்புநிலையத்தின் 33 ஆவது வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை ஆலய வளாகத்தில்இம்பெற்றன.
இந்த நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் செயலாளரும், காந்திஜிகிராமத்தின் குருவுமான அருட்திரு. ரீ.எச். வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரைவழங்கினார்.
இதன் போது பாலர் பகல் பராமரிப்புநிலைய மாணவர்களின்பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றன.
(த-ஜ-122)

## இலவச கண் பரிசோதனை முகாம் இன்று

சாவகச்சேரி, டிசெ.12
கைதடி லயன்ஸ் கழகம், சாவகச்சேரி லயன்ஸ் கழகம், சாவகச்சேரி சிற்றி லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் உடுப்பிட்டி கிழக்கு இமையாணன் சரஸ்வதிசனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கண் பரிசோதனையின் போது, பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளதாக கழகத்தலைவர்லயன்துமகேந்திரன் அறிவித்துள்ளார். (த-ஜ-9)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
16 . 09 . 1940

மறைவு
13 . 11 . 2015



அமரர்
இராசையா நவரட்ணம்
(இளைப்பாறிய வ.பி.போ.ச.சாரதி)

கடந்த 13.11.2015 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடையார்கட்டு. பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### பரராஜசிங்கம் மணாளன்(கரன்)



பிறப்பு: 27.03.1969
இறப்பு: 27.11.2015

யாழ். சரவணை கிழக்கைப் பிறப்பிட மாகவும் இத்தாலி Rapallo ஐ வதிவிட மாகவும் கொண்ட பரராஜ சிங்கம் மணாளன் 27.11. 2015 வெள்ளிக் கிழமை கால மானார்.
அன்னார் காலஞ் சென்ற பரராஜ சிங்கம், தங்க லஷ்சுமி (கண்மணிப் பிள்ளை) தம்பதி யரின் அன்பு மகனும் காலஞ் சென்ற குமார சிங்கம், பூபதி யம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பிரசாந்தி (யசோ) அவர்களின் அன்புக் கணவரும் துவாரகன் , துவாரகா, திரேஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாளன், குணாளன் (இத்தாலி), சீராளன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுசித்ரா(இத்தாலி), சுஜித்ரா கலைராதக் (கந்தபுரம் வாணி வித்தியாலயம் வவுனியா), தயாகணேஷ், கோகுலன், நேர்த்திகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரட்ணகுமார், தினேஷ், தீப்திகா, ஆருஷன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் நிவேதன் அவர்களின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (14.12.2015) திங்கட்கிழமை பி.ப 2.00 -2.45 மணிக்கு Via Don Giovanni Battista Bobbio, 25, 16033 Lavagna GE, Italy இல் பார்வைக்கு வைக்கப்பட்டு திங்கட்கிழமை 14.12.2015 பி.ப.02.45 மணிக்கு Via dei Cogorno,41, 16033 Lavagna GE. Italy இல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குணாளன்- இத்தாலி
தொலைபேசி: +390185262732
செல்லிடப்பேசி: + 393899233206
சீராளன்- பிரித்தானியா
செல்லிடப்பேசி: +447475130113
கண்மணிப்பிள்ளை- இலங்கை
செல்லிடப்பேசி: +94750408358
பிரசாந்தி(யசோ)- +393664000249

வீட்டு முகவரி:
27B/6 Via Sant Anna,
16035 Rapallo,
Italy.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லமுத்து வைத்திலிங்கம்



குப்பிழான் வடக்கைப் பிறப்பிடமாகவும் சைவமங்கையர் கழகம் பம்பலப்பிட்டி கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து வைத்திலிங்கம் 12.12.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - இலச்சுமிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட மகளும் காலம் சென்றவர்களான சின்னையா - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னையா வைத்திலிங்கத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், பாலசிங்கம் (லண்டன்), காலஞ் சென்ற கனகரத்தினம் மற்றும் சிவசுப்பிரமணியம் (வன்கூவர் கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சாந்தமலர் மற்றும் சிவகங்கை ஆகியோரின் அன்பு மாமியாரும், சோபனா, அமிர்தா, பாமினி, வலந்துஜா, சிந்துஜா, சாருஜா, செங்கமலம், சந்திரசேகரம், ஞானசேகரம்,பவிதா, சிவலோகநாதன், சிவகரன், சிவயோகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சச்சின், கிருஷ்ணா ஆகியோரின் பூட்டியும், காலஞ் சென்ற வர்களான நாகலிங்கம்,ஆச்சிமுத்து,கந்தையா, நல்லையா,செல்லையா ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், சிவலிங்கம் - கணேசம்மாவின் சிறிய தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரபத்திரர் கோயிலடி குப்பிழான் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிழான் காடாகடம்பை மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வை. சிவசுப்பிரமணியம்
(மகன்)
குப்பிளான் வடக்கு.
(66852). (11,16,17,18)

### திருமதி சாரதாம்பிகை மகேந்திரன்



வேலணை மேற்கை பிறப்பிடமாகவும்,யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாம்பிகை மகேந்திரன் நேற்று (12.12.2015) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் வேலணை மேற்கு காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மகளும்,காலஞ் சென்றவர்களான முத்துத்தம்பி - சிவயோகம் தம்பதியரின் அன்பு மருமகளும், மகேந்திரன் (ஓய்வுநிலை அதிபர் - யா/வைத்தீஸ்வராக்கல்லூரி) அவர் களின் அன்பு மனைவியும், Dr. தனுஜா (யாழ். போதனா வைத்தியசாலை), அபிநயா (ஸ்ரீலங்கா - ரெலிகொம் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், கருணாகரன் (பிரான்ஸ்), கருணாவதி (ஜேர்மனி), தயாபரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), பற்குணன் (கனடா),பற்பரா (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், ரஞ்சிதமாலா, சிவநேசபிள்ளை, சந்திரவதனி, காலஞ் சென்ற நளாயினி மற்றும் மணிமாலா, ஸ்ரீமத்நடராசன் ஆகியோரின் மைத்துனியும், இராஜேஸ்வரி- காலஞ்சென்ற இரத்தினம் (ஓய்வுநிலை பிரதேச செயலர் - பிரதேச செயலகம், வேலணை, சங்கானை), சண்முகராஜா (Home needs - காலி)- திருமுறைச்செல்வி, மகேஸ்வரி - திருச்செல்வம் (ஓய்வுநிலை பீடாதிபதி - விவசாயபீடம், பேராதனை), செல்வராஜா (கோகுல் ரேடர்ஸ் - கொழும்பு), சந்திரவதனி, நாகேஸ்வரி-மகேந்திரலிங்கம் (றுகுணாஸ் ரேடிங் - யாழ்ப் பாணம்),யோகராஜா (அம்பாள் ரேடர்ஸ் - யாழ்ப்பாணம்),பவானி ஆகியோரின் மைத் துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேலணை மேற்கு அம்பலவி மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

130, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:இல.021 222 6754
(6682) (13.15)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின்போதும் வடக்கில் தடுப்பூசி ஏற்ற அனுமதியளித்தார் பிரபாகரன்

## சபையில் கூறினார் அமைச்சர் ராஜித

கொழும்பு, டிசெ. 13

30 வருட போர்க்காலத்தில் வடக்கில் தடுப்பூசி ஏற்றுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் இரண்டு நாள்கள் அனுமதி வழங்கியிருந்தார் எனத் தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரட்ன, இன்று வடக்கில் தடுப்பூசி ஏற்றுவது முழுமையாக நிறை வேற்றப்பட்டுள்ளது என்று குறிப் பிட்டார்.



நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருந்துவ அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடங்களுக்கு மேலாகப் போர்ச் சூழ்நிலை காணப்பட்டாலும் வடக்கில் நோய்த் தடுப்பூசி வழங்குவதில் எந்த விதமான தடையும் இருக்கவில்லை. தடுப்பூசி வழங்குவதற்காக பிரபாகரனால் இரண்டு தினங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எனவே, தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை வடக்கில் முழுமையாக மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் ஒவ்வொரு வருடமும் எச்.ஐ.வி. தொற்று அதிகரிக்கின்றது. இது பெரிய பிரச்சினையாகும். எனவே, எச்.ஐ.வி. பரிசோதனைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு டெங்குநோய்த் தொற்று கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. உயிரிழப்புக்களும் குறைந்துள்ளன. டெங்குநோய் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (த-5-சி)

# தாஜுதீன் கொலையின் சி.சி.ரி.வி. அறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, டிசெ. 13

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பிலான சி.சி.ரி.வி. கமெராவின் காட்சிகள் தொடர்பில், 14 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதிவான் நிசாந்த பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

அந்தக் காட்சிகள் அடங்கிய இறுவட்டுக்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய ஆய்வு அறிக்கையையே 14 நாள்களுக்குள் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான காட்சிகள் அடங்கிய 4 இறுவட்டுகள் (சீடி) பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன, சம்பவத்துடன் தொடர்புடைய தாகக் கூறப்படும் வாகனம், அங்குமிங்கும் பயணம் செய்வது போன்ற காட்சிகளும் அதில் இருக்கின்றன என்று இரகசியப் பொலிஸார், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கொலை தொடர்பாக, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரை விசாரணை செய்யுமாறு நீதிமன்றம், குற்றப்புலனாய்வு அதிகாரிகளை பணித்துள்ளது. விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்குப் போதியளவான அதிகாரிகள் இல்லாவிடின், தேவையான அதிகாரிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

ஆரம்ப பிரேத பரிசோதனை அறிக்கை, இரண்டரை வருடங்கள் காலதாமதமாகியமை சிக்கலான விடயமாகும் என்று சுட்டிக்காட்டிய நீதிவான், தாஜுதீனின் உடற் பாகங்கள் காணாமல் போனமை தொடர்பில், விசாரணைகளை நடத்துமாறு வைத்திய சபைக்குக் கட்டளையிட்டுள்ளார். (த-4)

## அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ஆனைக்கோட்டை உபஅலுவலக எல்லைக் குட்பட்ட அனைத்துஆதனங்களும் 2015. 12.14 ஆம் திகதி தொடக்கம் மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதால் அனைத்து வரியிறுப்பாளர்களையும் மீள்மதிப்பீடு செய்ய வருகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பினை நல்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி ஜெ.சோமராஜ்
செயலாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## சர்வதேச தொலைக்காட்சிக் கலைஞர்கள் தேர்வு 2016

சர்வதேசம் எங்கும் ஒளிபரப்பாகும் தமிழ் தொலைக்காட்சி நிலையத்திற்கான மாபெரும் தொலைக்காட்சித் தொடர் நாடகத்திற்குத் தேவையான சகல துறைக்குமான தேர்வுக்கு நீங்களும் விண்ணப்பிக்கலாம்.

"இந்த மூங்கில் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்" என யாருக்குத் தெரியும்.

உங்களுக்குள்ளும் ஓர் கலைஞர் ஒளிந்திருக்கலாம் அல்லவா? உங்களுக்குள் ஒளிந்திருக்கும் கலைஞரை உலகளவில் வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம்.

வித்தியாசமான ஐடியாக்காரர்கள், மாறுபட்ட சிந்தனை உள்ளவர்கள் உங்களை உலகளவில் வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம். (அரைத்த மாவையே அரைக்க நினைப்பவர்கள் தயவு செய்து விண்ணப்பிக்காதீர்கள்)

நடிகர்கள், நடிகைகள், துணை நடிகர்கள், துணை நடிகைகள், குழந்தை நட்சத்திரங்கள், வயது முதிர்ந்த நடிகர்கள், நடிகைகள், நகைச்சுவையாளர்கள், வசனகர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள், படப்பிடிப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், துணை ஒளிப்பதிவாளர்கள், ஒளித்தொகுப்பாளர்கள், முகாமையாளர், தொடர்பாளர், ஒப்பனைக் கலைஞர்கள் (மேக்கப்) குரல் கொடுக்க குரல் நடிப்புடையவர்கள் இன்னும் பிற இத்துறையாளர்கள்.

அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் உங்கள் புகைப்படங்களுடன் கூடிய சுயவிபரத்தினை

ibceylon@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 31.12.2015 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

## AKI BEAUTY CARE



அகி அழகுக் கலை நிலையத்தினால் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்



- All type of Facial
- Eyebrow thereading
- Hair Cutting
- Re-bonding and relaxing
- Hair colouring and Hair treatments.
- Perming, manicure and pedicure.
- All Bridal dressing
- All Cake Decorating and Sugar Flowering
- making wedding and Rich Cake.
- Party Cake, Fondant icing, Structures.



இவை அனைத்தும் குறுகிய காலத்தில் கற்பித்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு:

No: 214, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்
No: 55/35, சிவகுருநாதர் லேன், யாழ்ப்பாணம்.

077 358 4622, 077 155 9113, 075 267 7351

## மலேசியாவில் வேலை

2.வருட பணியாளர் விசா அனுமதியுடன்

| | |
|---|---|
| சுப்பமார்கட் | Mechanics |
| கெமிக்கல் கம்பனி | Auto Electrician |
| அரிசி பக்கிங் கம்பனி | Electrician |
| பொலித்தீன் கம்பனி | Welder |
| | Accountant |
| சிறுவர் பூங்கா | Kitchen Equip. Tech. |

## கட்டார் நாட்டிற்கு

SLBF LICENCE NO : 2632

பாரவூர்தி வாகன சாரதிகள் (GCC LICENCE)
சாதாரண வாகன சாரதிகள் (இலங்கை லைசென்ஸ்)
வீட்டுவாகன சாரதிகள் (இலங்கை லைசென்ஸ்)
சவள் ஒப்பிரெற்றர் (GCC LICENCE)
கிளிர்னேஸ் ஆண்கள் மட்டும்

## சைபிரஸ் நாட்டிற்கு

★ கட்டிட நிர்மாணவேலைக்கு Rs. 80,000

வங்கிக்கடன் வசதி ஒழுங்கு செய்துதரப்படும்
எமது அலுவலகத்திற்கு சப்ஏஜன்ட்கள் தேவை

பிளஸ் ஜொப்ஸ்
32A 2/1 2வது மாடி,
ராஜ வீதி, மாத்தளை
plusjobsmp@gmail.com

066 5 678675
076 8 587475
ஆங்கிலம் / சிங்களம் 0777-160300



காரைநகர் - ஈழத்துச் சிதம்பரம் (திண்ணபுரம் சிவன்கோயில்)
மாணிக்கவாசக மடாலயத்துடன் இணைந்த புதிய மண்டபம்

## மங்களகரமான திறப்பு விழா - 13.12.2015

13.12.2015 ஞாயிற்றுக்கிழமை (இன்று)

**சிவனடியார்களே,**

நிகழும் மன்மத ஆண்டு கார்த்திகைத் திங்கள் 27 ஆம் நாள் (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள துதியை திதியும் பூராட நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபயோக சுபகரண சுபமுகூர்த்தத்தில்

"அறக்கொடைச்செம்மல்" "கலைமாடக் கோன்"

**சிவத்திரு சண்முகம் சிவஞானம்**

அவர்களின் பூரணஅனுசரணையுடன் அமைக்கப்பட்ட இப்புதிய மண்டபத்தினை குடை, கொடி, ஆலவட்டம், தீபங்கள், மாங்களவாத்தியங்கள், முழங்க மங்களகரமாக திறந்து வைக்கப்படும். இப் பெருவிழாவில் அன்பர்கள் ஆவதரவாளர்கள், அடியார்கள் மற்றும் யாவரும் திரளாக வந்து இப்புண்ணிய கைங்கரியத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மகேஸ்வர பூசை நடைபெறும்**

**குறிப்பு:** அன்றைய தினம் ஆலயம் வரை பிரயாண ஒழுங்குகள் தனியார் பேருந்து சபை ஊடாக காலை 7.00 மணி தொடக்கம் விழா நிறைவடையும் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**ஆதீனகர்த்தாக்கள்.**
சிவத்திரு ஆ. அம்பலவிமுருகன்
சிவத்திரு மு. சுந்தரலிங்கம்

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை

## சிறுநீரகம் தேவை

சிறுநீரகம் செயலிழந்த நிலையில் உள்ள ஒரு நோயாளிக்கு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக சிறுநீரகம் தேவை. தானமாகக் கொடுக்கக் கூடியவர்கள் 50 வயதுக்குட்பட்டவராகவும் ($B^+$) குருதி வகை உடையவராகவும் இருக்க வேண்டும். இச் சிகிச்சைக்கான சகல செலவுகளும் நோயாளியால் ஏற்றுக் கொள்ளப்படும். தானம் செய்பவருக்கு சன்மானமும் வழங்கப்படும்.

(f/20249)
(11,16,18)

தொடர்பு:- 071 275 5070

## VACANCIES

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு **யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி** பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- ஆங்கில பாட ஆசிரியர் (To teach Spoken English and Grammar to school leavers and workers)
- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
  G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம்

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம். 5082
உதயன் பப்ளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

Yarl Beauty Academy நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானோர் நேரில் சமூகமளிக்கவும்.

* தையல் பயிற்சி ஆசிரியர்.
* வெளிக்கள உத்தியோகத்தர்.
* அலுவலக உதவியாளர் மற்றும் சுத்திகரிப்பாளர்.

வயது: 18 வயதிற்கு மேல் பெண் தகைமை: O/L காலம்: 16.12.2015 நேரம்: 10.00 am

மிகக் குறைந்த கட்டணத்தில் ஒரு மாதகால அழகுக் கலை. மூன்று மாதகால டிப்ளோமா அழகுக்கலை. கேக் ஐசிங் மற்றும் தையல் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பிக்கப் படவுள்ளன.

Yarl Beauty Academy
இல. 616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
## SALES EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

**SALES EXECUTIVE**

**Requirements**

- GCE (A/L) Qualified
- Below 35 years old (School leavers may apply for traince position)
- Good communication skill in English & Tamil

**Benifits**

- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

**If you believe that you are the right cantidate,**
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com

(50895)(12.3.6)

# வெளிநாட்டில் வருவாயுடன் கல்வி
## *Hotel Management-in Malaysia*



**O/L உடன்......**

தரமான கல்வியும் நிறைந்த வருவாயும் பெற மலேசியாவில்

**Hotel Management**

மிகக்குறைந்த கற்கைநெறி கட்டணத்துடன்
கவர்ச்சிகரமான மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

*Limited seats only*

**iCS** Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
077-3013060, 021-4926222
107, B 1/1, Galle Rd, Wellawatte, Colombo 6

## யாழ்ப்பாணத்தில் உதயமாகிறது...!

**Greentag**
www.greentag.lk
GREENTAG (PVT.) LTD.
**LED SHOW ROOM**

# பிரமாண்ட காட்சியறை

125D,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
(இலுப்பையடிச் சந்திக்கு அருகில்)

14.12.2015
திங்கட்கிழமை
மதியம் 12.30

கட்டிட நிர்மாண மற்றும் வாகனங்களுக்கு தேவையான
அனைத்து வகையான LED விளக்குகளும்
மொத்த மற்றும் சில்லறை விற்பனை..!

## GREENTAG (PVT.) LTD. இன் சேவைகள்.....

### Engineers & Contractors


- ✓ உங்கள் கனவு இல்லங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களுக்கான தனித்துவமான வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்.
- ✓ தேவையான வரைபடங்கள் மற்றும் BOQ.
- ✓ பொறியியல் நிர்மாண மற்றும் வடிவமைப்பு சேவைகள்.

### Importers of LED & CCTV Cameras

- ✓ வீடுகள் , அலுவலகங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களுக்கான அனைத்து வகையான LED விளக்குகள்.
- ✓ வாகனங்களுக்கான அனைத்து வகையான LED விளக்குகள்.
- ✓ CCTV Cameras விற்பனை மற்றும் பொருத்துதல் சேவைகள்.

Tel/Fax 021 221 2200
Email info@greentag.lk
greentagpvtltd

Hotline 077 077 0003




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமுர்த்திக் கொடுப்பனவு விவரங்கள் மீளாய்வுக்கு

அச்சுவேலி,டிசெ.13
வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் சமுர்த்திக் கொடுப்பனவு பெறும் பயனாளிக் குடும்பங்களின் விவரங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

இதனடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டுக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரிய வருமான நிலைக்கு மேற்பட்ட குடும்பங்கள் நீக்கப்படுவதோடு, புதிய பயனாளிக் குடும்பங்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்குவதில் குடும்பங்களுக்கான அடிப்டைச் சுட்டிகள் உரிய முறையில் பின்பற்றப்படவில்லை என மேற்கொள்ளப்பட்ட முறையீடுகளை அடுத்து, முழுமையாக இந்த வருடம் மீள்பரிசீலனை செய்யப்படுவதோடு, புதிய பயனாளிகளின் குடும்பங்கள் உரிய பரிசீலனை மூலம் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

புதிய பயனாளிகளைச் சேர்த்துக் கொள்வதற்குக் குறித்த குடும்பங்களின் சுயவிவரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தித் தமது பிரிவு சமுர்த்தி அலுவலரிடம் அல்லது பிரதேச செயலகத்தில் கையளிக்க வேண்டும். அவர்கள் சமர்ப்பித்த விவரங்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் இருப்பின் அவர்களுக்கு இரண்டாவது விண்ணப்பப்படிவம் வழங்கப்படவுள்ளது. அந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் புதிய பயனாளிகள் தெரிவுகள் நடைபெறவுள்ளன.

பழைய பயனாளிகளை மீள்பரிசீலனை செய்தல், புதிய பயனாளிகளைச் சேர்த்துக் கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் நிறைவடையும் நிலையில் அடுத்த வருடத் தொடக்கத்தில் இருந்து புதிய நடைமுறையின் கீழ் சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-ஐ-11)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தனலட்சுமி கேசவன்



நல்லூரைப் பிறப்பிடமாகவும், இருபாலை, சுன்னாகம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி கேசவன் 10.12.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை பழைய பொலிஸ் நிலைய வீதி சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலையவீதி,
சுன்னாகம்.

(66828),
(11,16,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா இரத்தினேஸ்வரன் (லண்டன்)



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், செல்லமாக லண்டன் என அழைக்கப்பட்டவருமான கந்தையா இரத்தினேஸ்வரன் கடந்த (10.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- பூமணி தம்பதியரின் மருமகனும், இரத்தினமாலா (லண்டன்), கவிதாசன் (லண்டன்), ராஜி (லண்டன்), மங்களசுதன் (ஆஸ்திரேலியா), உமாசுதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பகாந்தன் (லண்டன்), ரம்யா (லண்டன்), சிவஅருள் (லண்டன்), கஜேந்தினி (ஆஸ்திரேலியா), பவானி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், நிருசன், பதுசா, நிதீஸ், கனுசியா, சுமன், பூஜா, சதுஷன், ஜதீசன், நிசாயினி, நிசான், திகாயனி ஆகியோரின் அன்புப் பேரனும், துரைசிங்கம், சரோஜினிதேவி, செல்வராசா, காலஞ்சென்றவர்களான மாசிலாமணி, தவராசா, தங்கரத்தினம், புஷ்பதேவி, அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ,இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்குவேலி சங்கம்புலவு இந்துமயானத்துக்கு எடுத்தச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு
மானிப்பாய்,
021 224 2448, 021 300 7522

(66916)
(14,16)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளிநாயகி மயில்வாகனம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிநாயகி மயில்வாகனம் அவர்கள் கடந்த (11.12.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான ஆறுமுகம், கண்மணி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருக்குமாரன் (காங்கேசன்துறை, வலிவடக்குப் பிரதேசசபை), கமலலோஜினி ஆகியோரின் அன்புத் தாயும் சிவராசா, பரஞ்சோதி (ஆசிரியை - யா/ மல்லாகம் குளமங்கால் R.C ) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வர்களான கந்தையா, இராசதுரை, நடராசா, விசுவலிங்கம், தர்மலிங்கம், பொன்னையா மற்றும் சிவலிங்கம், சவுந்தரி, தங்கநாயகி, சிவம்மா, சிவனேஸ்வரி, சோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கோபிநாத், ராம்நாத், கபிலா, பிரணவநாத், ஹாருணியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதன்வளவு, மல்லாகம்
021 221 5807,
077 981 1745

(66817)
(14,16)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரகாந்தா துரைலிங்கம்



பருத்தித்துறை, மாதனையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரகாந்தா துரைலிங்கம் 10.12.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் சந்திரா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அண்ணாச்சாமி நேசரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் துரைலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் பிரதீபன்(சுவிஸ்), சுகந்தினி, ஜீவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வசோதி, மதியழகன், வளர்மதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுந்தரலிங்கம், சிவலிங்கம், செல்வரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரகலாதன், சுகன்யா ஆகியோரின் மாமியாரும் ஷாழினியின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோயிலடி,
மாதனை, பருத்தித்துறை.

(66818)
(14,16)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி கமலாம்பிகை பாலச்சந்திரன்

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை பாலச்சந்திரன் 10.12.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடேசன் மற்றும் பத்தினிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேல்முருகு கந்தையா, மனோன்மணி ஆகியோரின் அன்பு மருமகளும், வேல்முருகு கந்தையா பாலச்சந்திரனின் (நில அளவையாளர்) அன்பு மனைவியும், கணேசன் (கனடா), முருகவேள் (ஆஸ்திரேலியா), பிரதீபன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வினிதா (கனடா), லக்சுமி (ஆஸ்திரேலியா), கோபிகா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும், சந்தோஷ், சாருகேஷ், திருவருன் ஆகியோரின் பாட்டியும், கனகாம்பிகை (நெல்லியடி),மகேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதாஸ், செல்வதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.12.2015 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நெல்லியடி ம.ம.வி.வீதி,
நெல்லியடி.
077 346 8546


(62220)(11,16,18)

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் பெருக்கும் துரித அபிவிருத்தியும்

சந்திரசேகர ஆசாத்



தமிழக விவசாயிகளும், அரசும் விவசாயத் தேவைகளுக்குப் போதியளவு நீரைத் திறந்து விடும்படி காவிரி நீர்ப்பிரச்சினையில் கர்நாடகாவுடனும், பெரியாறு அணை விவகாரத்தில் கேரளாவுடனும் முரண்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் தமிழ் நாட்டில் எதிர்பாராத விதமாகக் கொட்டிய மழை அங்கு பெரும் அவலத்தை ஏற்படுத்தியுள்ளது.

சராசரியாக ஒரு வருடத்தில் பெய்யும் மழையைவிட மூன்று மடங்கு மழை 10 நாள்களில் பெய்து தள்ளிவிட்டது. கடலூர், அடையாறு, கூவம் போன்ற நதிகள் பெருக்கெடுத்து நகரங்களுக்குள் புகுந்ததால் பல பிரதேசங்களை விட்டு மக்கள் வெளியேற வேண்டிய நிலை உருவாகியது. சிலர் வீட்டு மாடிகளில் ஏறி உயிர் தப்பியிருந்ததாகவும் அப்படியான இடங்கள் தனித்தீவுகள் போல் தனிமைப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது.

இதுவரை வெள்ளப் பாதிப்பால் இறந்தவர்கள் 270 பேர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவித்தபோதும் 500க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. வெள்ளத்தால் 50 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. இது தமிழ் நாட்டின் சனத்தொகையில் எட்டிலொரு பங்காகும்.

மீட்புப் பணிகளில் இராணுவத்தினர், தொண்டு நிறுவனங்கள், மாணவ, மாணவியர், தீயணைப்புப் படையினர் எனப் பல தரப்பினரும் இறங்கியுள்ளனர். உணவுகளை வழங்குவதிலும், வெள்ள நீரால் சூழப்பட்ட இடங்களில் சிக்குப்பட்டிருப்பவர்களை மீட்பதிலும் தீவிரம் காட்டிச் செயற்பட்டுள்ளனர்.

அவ்வளவு அர்ப்பணிப்புடன் பணியாற்றியபோதும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளைத் தேவையாக, நிறைவாக மேற்கொள்வது இன்னமும் திருப்தியளிக்கும் வகையில் இல்லையெனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

அடிப்படையில் இப்படியான பேரழிவுகளைத் தடுத்திருக்க முடியும் என சூழலியலாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர். இந்தப் பேரழிவுக்குத் துரிதமான நகரமயமாக்கலும், அதை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முறையற்ற வழிகளுமே காரணமென அவர்கள் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே இப்படியான நடவடிக்கைகளுக்கு எதிராக அவர்கள் நடத்திய போராட்டங்கள் கடந்த காலங்களில் கணக்கில் எடுக்கப்படவில்லை.

சென்னையில் 600 ஏரிகள் இருந்ததாகவும் அவற்றில் அதிகமானவை மூடப்பட்டு அந்த இடங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். இந்த ஏரிகள் மழை நீரைத் தேக்கி வைப்பதிலும் நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்கை வகித்தன. மேலும் நீரை உறிஞ்சிப் பாதுகாக்கும் சதுப்பு நிலங்களிலும்கூடக் கட்டடங்கள் கட்டப்பட்டு விட்டன. இன்னொருபுறம் சரியான திட்டமிடலின்றி மேற்கொள்ளப்படும் மண் அகழ்வு காரணமாக ஆற்று முகத்துவாரங்களில் மண் குவிந்து மேடாக்கப்பட்டன. அதன் காரணமாகக் கடலை அடையவேண்டிய நீர் ஊர்களுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கூவம் போன்ற ஆறுகளின் கழிவு நீர்கூட நகரங்களுக்குள் புகுந்துவிட்டது.

இவை திட்டமிடப்படாத நகரமயமாக்கல் மூலமே இடம்பெற்றுள்ளன. ஏரிகள், ஆறுகளைச் சரியான முறையில் பராமரித்து, சதுப்பு நிலங்களையும் பாதுகாத்து வந்திருந்தால் தற்சமயம் ஏற்பட்ட பேரழிவைக் கணிசமான அளவு குறைத்திருக்க முடியும். ஆனால் இந்தியாவில் நிலவும் இலஞ்ச, ஊழல் மோசடிகள் மத்தியில் இது சாத்தியமாகுமென எதிர்பார்க்க முடியாது.

## இங்கும் பாதிப்பு

இந்தியாவில் இப்படியான பேரழிவு ஏற்பட்ட அதேவேளையில் இலங்கையிலும் இந்தப் பெருமழை கணிசமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. பராக்கிரம சமுத்திரம், சேனநாயக்க சமுத்திரம், மின்னேரியா, ராஜாங்கனை போன்ற 9 பெரிய குளங்களின் வான் கதவுகள் முற்றாகத் திறக்கப்பட்டுவிட்டன.

ஹபரணை–மட்டக்களப்பு வீதியில் ஓர் இடத்தில் 4 அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்கிறது. புத்தளம்–எலுவங்குளம் பகுதியில் 40 கிலோ மீற்றர் நீளமான பகுதியில் பயணம் செய்ய முடியாமல் வெள்ளம் பாய்கிறது. அங்கு மூன்று பாலங்களுக்கு மேலாகவும் மன்னார்–சங்குப்பிட்டி வீதியில் பாலியாறும் பெருக்கெடுத்து வீதிகள் தடைப்பட்டுள்ளன.

இவ்வாறே கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்து பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட்டு இயல்பு வாழ்வு சீர்குலைந்துள்ளது. இரத்தினபுரியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன் மலையகத்தில் பல மாவட்டங்களிலும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் வெள்ளம், புயல், பூகம்பம், மண்சரிவு என்பவை பல வருடங்களுக்கு ஒரு முறை ஏற்படும் அபூர்வமான சம்பவங்களாக விளங்கின. இப்போதோ இவை அடிக்கடி நிகழும் சம்பவங்களாகி விட்டன. உயிரிழப்புக்கள்கூடச் சர்வசாதாரண விடயங்களாகி விட்டன.

தமிழகத்தில் திட்டமிடப்படாத நகரமயமாக்கல் மூலம் எப்படி இயற்கைச் சமநிலை குலைக்கப்பட்டதோ அவ்வாறே 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் இலங்கையின் இயற்கைச் சமநிலை சீரழிக்கப்பட்டது.

இலங்கையின் மத்திய பகுதி, மலைகளைக் கொண்ட உயரமான பகுதியாகவும், சுற்றிவர சமவெளிப் பிரதேசங்களைக் கொண்டதுமான அற்புதமான புவியமைப்பைக் கொண்டு விளங்கியது. மலையகத்தில் உற்பத்தியாகும் ஆறுகள் நாலா பக்கமும் பாய்ந்து ஏனைய பிரதேசங்களை வளப்படுத்தின. சிங்கள மன்னர்களும் பெரும் ஆறுகளை அணைகட்டிப் பெரும் குளங்களாகத் தேக்கி விவசாயத்தை அபிவிருத்தி செய்தனர்.

இவ்வாறே வன்னியிலும் காட்டாறுகளில் பாயும் நீர், அணைகள் அமைக்கப்பட்டு மறிக்கப்பட்டது. அத்துடன் ஊருக்கு ஒரு குளம் என்ற அடிப்படையில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் ஒவ்வொரு கோயில் அருகிலும் ஒவ்வொரு கேணியும், குளமும் அமைக்கப்பட்டு அதில் மழை நீர் தேக்கப்பட்டது. அதேபோல் வயல்கள் நடுவிலும் குளங்கள் அமைக்கப்பட்டன. அதன் காரணமாக நிலத்தடி நீர்வளம் பாதுகாக்கப்பட்டுக் கிணறுகள் மூலம் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் ஐக்கிய முதலீட்டாளர்களைக் கவர மின்சாரம் உட்பட அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்யவேண்டியிருந்தது. அந்த அடிப்படையில் மகாவலி ஆறு மறிக்கப்பட்டு

> முன்பெல்லாம் வெள்ளம், புயல், பூகம்பம், மண்சரிவு என்பவை பல வருடங்களுக்கு ஒரு முறை ஏற்படும் அபூர்வமான சம்பவங்களாக விளங்கின. இப்போதோ, இவை அடிக்கடி நிகழும் சம்பவங்களாகி விட்டன.

ரன்தெனிய நீர் மின் நிலையம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டம் காரணமாக பெருமளவு மலையக மழைக்காடுகள் அழிக்கப்பட்டன. மேலும் மாதுறுஓயா, மகாவலி எச்.எல். வலயங்கள் போன்ற குளங்கள், குடியேற்றங்களை அமைக்க வடக்கு, கிழக்கில் பெருமளவு மழைக்காடுகள் அழிக்கப்பட்டன. இதேபோல் மகிந்த ஆட்சியில் மேல் கொத்மலை நீர் மின்சாரத்திட்டத்துக்கென பெருமளவு மழைக்காடுகள் அழிக்கப்பட்டன.

இந்தக் காடுகள் அழிக்கப்பட்டமையால் மண்சரிவுகள் ஏற்படும் அபாயம் தோன்றி விட்டது. மேலும், மலைகளில் பெய்யும் மழை நேரடியாகவே ஓடிவந்து ஆறுகளில் விழுவதால் மண்ணரிப்புக் காரணமாக ஆறுகளின் ஆழங்கள் குறைகின்றன. இதனால் அடிக்கடி வெள்ளப் பெருக்குகளும் ஏற்படுகின்றன.

நீர் வழிந்தோடும் பாதைகள் பற்றிய சரியான ஆய்வு இன்றி அதிவேகச் சாலைகள் அமைக்கப்பட்டமையால் அங்கும் வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன.

## தூரநோக்கற்ற திட்டங்களால் ஆபத்து

இவ்வாறே வடக்கிலும் நீரோட்டத்தைத் தடைசெய்யா வகையில் பாலங்கள் அமைத்து நெடுஞ்சாலைகள் போடப்படாமையினால் இங்கும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

ஏ – 9 வீதியும், வடக்கு ரயில் பாதையும் முன்பிருந்ததைவிட உயரமாக அமைக்கப்பட்டன. ஏ – 9 வீதி மேலும் அகலிக்கப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர் அமைத்த அதே பாலங்கள் வழியாகவே மழை நீர் ஓடவேண்டியுள்ளது. வீதிகள் உயர்த்தப்பட முன்பு வெள்ளம் வீதிக்கு மேலால் வீதியைக் கடந்து செல்லும் நிலை இருந்தது. வீதி உயர்த்தப்பட்ட பின்பு பாலங்கள் அதற்கேற்றவாறு சீர் செய்யப்படாத நிலையில் வெள்ளநீர் ஓட முடியாமல் வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலையே உருவாகியுள்ளது.

இங்கு நெடுஞ்சாலைகள் அகலிக்கப்பட்டு உயர்த்தப்படும்போதோ, அதிவேக நெடுஞ்சாலைகள் உருவாக்கப்படும்போதோ புவியியல் அமைப்புக்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை. மாறாக உல்லாசப் பிரயாணிகளின் வசதிகள், அந்நிய முதலீட்டாளர்களின் போக்குவரத்துத் தேவைகளின் அடிப்படையிலேயே அவை மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறே நீர் மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப்படும்போதும், ஆறுகள் அந்தத் தேவைக்களுக்காகத் திசை திருப்பப்படும்போதும், காடுகள் அழிக்கப்படும் போதும் எமது பாரம்பரிய விவசாயத்துக்கு ஏற்படும் பாதிப்புக்கள், மழைவளம் குறை வடைதல், புதிய சிங்களக்குடியேற்றங்கள் அமைக்கப்படும்போது பெரிய மழைக்காடுகள் அழிவடைதல் போன்ற எதிர் மறைகள் பற்றி எவருமே அக்கறைப்படவில்லை. அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அபிவிருத்திகளை மேற்கொள்வது தொடர்பாக எவரும் கவனம் செலுத்தவில்லை.

அதன் காரணமாகவே மழை வீழ்ச்சி குறைவடைந்துவிட்டது மட்டுமன்றி பருவ நிலையிலும் மாற்றம் ஏற்பட்டு விட்டது. இன்னொருபுறம் எதிர்பாராத நேரத்தில் ஏற்படும் தாழமுக்கங்கள் காரணமாக அதிக மழை பெய்கிறது. அப்போது வெள்ளம் ஓடும் வசதிகள் இல்லாமல் போய் விட்ட நிலையில் வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டு பேரழிவை ஏற்படுத்துகின்றன.

எப்படியிருப்பினும் இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி துரித அபிவிருத்தி என்ற பேரில் அந்நிய முதலீட்டாளர்களின் தேவைகளுக்கேற்ப எமது சுற்றுச் சூழலை மாற்றியமைப்பது, உல்லாசப் பயணிகளைக் கவரும்பொருட்டு சில அலங்கார அபிவிருத்திகளை மேற்கொள்ளல் என்பனவே இயற்கைப் பேரழிவுகளின் மூல காரணமாகிறது.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் துரித அபிவிருத்திகள் நீண்டகால அடிப்படையில் நாட்டுக்குத் தீமையையே விளைவிக்கும் என்பது உணரப்படாத வரை இயற்கைப் பேரிடர்கள் தவிர்க்கப்படுவது சாத்தியமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மங்களவின் வாய் வேதாந்தம் செயலுருவம் பெறுமா...?

மக்களைப் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்வதில் இருந்து பாதுகாப்பது தொடர்பான, ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் இலங்கையும் கைச்சாத்திட உள்ளது. இந்தத் தகவலை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 94 நாடுகள் அந்த சாசனத்தில் ஒப்பமிட்டுள்ளன. மேலும், ஐம்பத்தொரு நாடுகள் ஒப்பமிட ஒப்புதல் வழங்கி உள்ளன. ஏனைய பல நாடுகளும் குறிப்பிட்ட சாசனத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்வந்துள்ளன.

மோதல் மற்றும் அமைதி இன்மை ஆகிய-வற்றில் தொடர்பு எதுவும் இல்லாதவர்கள், முந்திய அரசின் ஆட்சியில் காணாமற் போகச் செய்யப்பட்டனர் என்பது கல்மேல் எழுத்துப் போன்று இப்போது ஆழமாகப் பதிந்துள்ளது.

காணாமற் போகச் செய்யப்படுதலால் ஏற்பட்ட வலியால்,எமது பிரதேசங்களில்-வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள், மிகக் குறிப்பாக இளைஞர்கள் வாழ்வா, சாவா என்ற அந்தரித்த நிலையில் நாள்களைக் கழிக்கும் அபத்தம் தொடர்கிறது!

கடந்த பல ஆண்டுகளாக, குட்டிமணி, தங்கத்துரை காலத்தில் இருந்து, முதற்கொண்டு கொழும்பு அரசுகளின் பல்வகை சார்ந்த அசுரத்தனமான சட்டங்களாலும்--

தமிழர் எதிர்ப்பு மற்றும் அவர்களை நசுக்கி அழிக்கும் போக்கைத் தமது நிரந்தரச் செயற்பாடுகளாக, உயர்த்திப் பருத்துக் கட்டவிழ்த்து விட்டன. அவை, இந்த நாட்டின் கரிபூசப் பட்ட, கொடுங்கோன்மையின் குறியீடுகள் எனலாம்.

மனித உரிமைகளைப் பேணுதலை, நடுப்புள்ளியாக வைத்து உருவான, நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை ஆறு தசாப்தங்களை, 67 ஆண்டுகளைக் கடந்த நிலையிலாவது--

இப்போதைய அரசேனும் புதிய பாதையில் கால்பதிக்க முனைந்திருப்பது கருத்தில்கொள்ளப்படத்தக்க ஒன்றே.

கணிதம் சார் நிலையிலிருந்து நோக்கின், இப்போது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் புதிய அரசு, சுமார் இருபத்தைந்து சதவீதம் மக்கள் நலன் நாடிச் செயற்பட முனைந்துள்ளது எனக் கருதலாம்.

பலவந்தமாக, காணாமற் போகச் செய்தலைக் குற்றமாக்குவதன் ஊடாக, நாட்டின் ஒவ்வொரு பிரசையினதும் பாதுகாப்பு உறுதிப் படுத் தப்படும் என்றும், வெள்ளை வான் கலாசாரம், பயங்கரவாதம் மேலெழுதல் போன்றவை மீண்டும் கோலோச்ச முடியாது- என்றும் அமைச்சர் மங்கள சமரவீர கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரது வாய்மொழிக் கருத்து செயல் வடிவம் கொள்ள எத்தனை ஆண்டுகள் ஆகும் (செல்லும்) என்பதை நிறுதிட்டமாகக் கூறமுடியாதே! அதற்கென ஒரு காலஅவகாசம் வகுத்து செயற்படும் உத்தேசம் எதுவும் அரசுக்கு உண்டா?

வெறும் வாய் வேதாந்தம் பயன் விளைப்பதில்லையே. இந்த (மனிதநேய) செயற்பாட்டுக்கு, அது கடுகளவும் பொருந்தாது! தமிழ் மக்கள் காத்திருந்துதான் பார்க்க வேண்டுமா? கடல் வற்றும் வற்றும் என்று காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்கின் நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்களோ...!

# நிலத்தடிநீர் எம்மை அகதிகளாக்குமா?

## தகுந்த பொறிமுறையின்றேல் சாத்தியமே!

-ஸுடோ ஸ்வாமி



வடமாகாண சபைக்கு தண்ணீரில் கண்டம் இருக்கிறதோ இல்லையோ, வடமாகாணத்துக்கு தெளிவான கண்டம் இருக்கிறது. அதிலும் யாழ்ப்பாணத்துக்கு விசேட கண்டம் இருக்கிறது. அந்தக் கண்டம் தொடர்பிலான அபாய சமிக்ஞைகள் ஆங்காங்கே துறைசார் வல்லுநர்களால் அறிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும், வலுவான தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் வேகம் வெறுமனே ஏட்டுச்சுரைக் காய்களையே ஒத்திருக்கிறது.

கடைசியாக கடந்த திங்கட்கிழமை வடமாகாண சபையால் அமைக்கப்பட்ட சுன்னாகம் நிலத்தடிநீர், நீர்-கழிவெண்ணெய் மாசாக்கம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை, வடமாகாண சபை முதல்வரிடமும் மாகாண சபையின் விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடமும் கையளிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின்படி ஆய்வு நடத்தப்பட்ட பிரதேசங்களில் பெறப்பட்ட நீர் மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இரசாயன பகுப்பாய்வுச் சோதனைகளின் பிரகாரம், குறித்த நிலத்தடி நீர், கழிவு எண்ணெய் காரணமாக மாசடைந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்குப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் த.ஜெயசிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்ட மேற்படி நிபுணர்குழு, நடத்தி முடித்திருக்கும் பல்வகைப் பகுப்பாய்வுகளின் முடிவில் கழிவெண்ணெய் மாசு பற்றிய சந்தேகத்தை நிவர்த்தித்திருக்கும் அதேவேளை குடிதண்ணீர் பற்றிய சஞ்சலத்தைத் தொய்யவிடாத வகையிலான அறிவிப்பையும் விடுத்திருக்கிறது.

குடாநாட்டின் நிலத்தடிநீரில், அளவுக்கு அதிகமாக நைத்திரைற்று என்னும் வேதிப் பொருளும் மலக் கிருமிகளும் செறிவடைந்து மாசடைந்து காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருக்கிறது.

சூழலியல் சார்ந்தும், சுகாதாரத் துறை சார்ந்தும் இயங்குபவர்களுக்குக் குடாநாட்டு நிலத்தடிநீர் மாசாக்கம் பற்றிய நிபுணர் குழுவின் அறிவிப்பு ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமல்ல. நைத்திரேற்று மாசாக்கம் மாத்திரமன்றி, குடாநாட்டுநீர் வன்மைகூடிய ஒன்றுஎன்பதும் ஏலவே அறியப்பட்ட ஒன்று.

கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினரின் பல ஆய்வுகளில் இந்த வகையான பட்டறிவுத் தரவுகள் பெறப்பட்டே வந்தன. அதன் குறுகிய மற்றும் நீண்டகால பாதிப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்கள் வருவது இதுவொன்றும் முதற்தடவையுமல்ல.

### இயற்கையின் வஞ்சகம்!

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் குடாநாடு என்று சொல்லப்படுகின்ற தரைத்தோற்ற அமைப்பைக் கொண்டிருக்கின்ற பகுதி நீர் வழங்கலுக்கான மூலமாக ஆறுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை. பிரதான நீர் மூலமாக விளங்குவது நிலத்தடி நீரே. குடாநாட்டின் தரையமைப்பு மயோசின் எனப்படும் சுண்ணாம்புப் பாறைகளால் ஆனது. இந்தச் சுண்ணாம்புப் பாறைகள், நிலத்திலிருந்து வடியும் நீரைச் சேமித்து நிலத்தடி நீர் தேங்குவதற்கு உதவி புரிகின்றன. அதிர்ஷ்டவசமாக இந்த சுண்ணாம்புப் பாறைகள் மழை நீர் கடலுக்குள் சென்று கலந்து விடாமல் தடுப்பதுடன் சேமிக்கவும் உதவுகின்றன. அதேவேளை, துரதிர்ஷ்டவசமாக நச்சுகள் மற்றும் மாசுக்கள் என்பவை நிலத்தடிநீரில் செறிவடையவும் வழி வகுத்து விடுகின்றன.

> “குடாநாட்டின் நிலத்தடி நீரில், அளவுக்கு அதிகமாக நைத்திரைற்று என்னும் வேதிப் பொருளும் மலக் கிருமிகளும் செறிவடைந்து மாசடைந்து காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருக்கிறது.”

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரே நீர் மார்க்கமான நிலத்தடிநீரை நம்பியிருக்காமல், மற்றைய நீர் மூலங்களுக்கான தேடல்களை துரிதப்படுத்துவதற்கான தேவையை தற்போதைய நிபுணர்குழு அறிக்கை வெளிப்படுத்தி நிற்கிறது. காலப்போக்கில் நிலத்தடிநீர் பாவனைக்கு உதவாததாக வரும்போது சூழலியல் அகதிகளாக குடாநாட்டு மக்கள் இடம் பெயரும் அவலம் தவிர்க்க முடியாததாகிவிடும்.

### புற்றுநோய்களுக்கு பின்னால்

வடமத்திய மாகாணத்தில் பூதாகரமாக உருவெடுத்திருக்கும் நாட்பட்ட சிறுநீரகநோய்நிலையை ஒத்த பேரிடர் ஒன்றை வட பிரதேசத்தில் தோற்றுவிக்கத் தக்க வல்லமையை இந்த நிலத்தடிநீர் விவகாரம் கொண்டிருக்கிறது. வடபிரதேசத்திலிருந்து அறிக்கையிடப்படும் புற்றுநோய்களுக்குப்பின்னால் உள்ள சூத்திரதாரி இந்த மாசடைந்த நிலத்தடி நீர்தான் என நம்பப்படுகிறது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் கூட புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நல்லூரில் நிறுவுவதற்கான முன்மொழிவு செய்யப்பட்டிருந்தது.

நைத்திரேற்று மாசாக்கத்துக்குப் பின்னால் குடாநாட்டு விவசாயிகளின் அதீத உர மற்றும் பீடை கொல்லிப் பாவனை இருப்பது பல ஆய்வுகளிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அதேவேளை, அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் நிலத்தடிநீரை முறையான வகையில் முகாமைசெய்வதற்குமான பொறி முறையை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்த வேண்டியது கட்டாயமாகிறது.

### குடிப்பதற்கு உதவாத தண்ணீர்!

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களில் எண்ணெய் மாசு இல்லை என்று கண்டறியப்பட்டிருக்கின்ற அல்லது அறிவிக்கப்பட்டிருக்கிற போதிலும், குடிப்பதற்கு உகந்தது என்று அறிவிப்பதில் தயக்கம் அல்லது பின்னடிப்புக் காட்டப்பட்டிருக்கின்றது. கொதித்தாறிய நீரை அருந்தலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் மக்கள் பின்பற்றக்கூடிய தகுந்த பரிகரிப்பு முறை ஆலோசனையாகக்கூடத் தரப்படவில்லை.

மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் நீர்மூலங்களை அண்டியே குடியிருப்புகள் முதலில் தோற்றுவிக்கப்பட்டன. குடாநாட்டு நிலத்தடி நீர் பற்றிய சரியான முகாமைத்துவத்தைச் சரியாகக் கையாளத் தவறுமிடத்து, சிலகாலங்களுக்கு முன் பகிரங்கமாகவும் தற்போதைய சூழ்நிலையில் மனன முறையிலும் பாடும் இந்த மண் எங்களின் சொந்த மண் என்னும் மண்பற்றுப் பாடலை, அதில் வரும் நீர்வளம் உண்டு நிலவளம் உண்டு நிம்மதி ஒன்றுதான் இல்லை என்னும் வரிகளை மாற்றி, நீர்வளமும் இல்லை நிலவளமும் இல்லை நிம்மதியும் கூடத்தான் இல்லை என்று முணுமுணுக்க வேண்டிய துர்ப்பாக்கியம் நேரலாம்.

துரதிர்ஷ்டவசமாக அத்தகைய அவலத்தைத் தோற்றுவித்ததும் தோற்றுவித்துக் கொண்டிருப்பதும் நாம்தான் என்பது உணரப்பட வேண்டியிருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வகைச் சாவிலிருந்து தப்ப இன்னொரு வகைச் சாவை தேர்ந்தெடுக்கிறோம்



## தொடரும் அகதிகளின் அவலம்

மூலம் ; தி நியூயோர்க் டைம்ஸ்
நன்றி ; தி ஹிந்து

ஒருவகை உள்நாட்டுப் போரால் அலைக்கழிக்கப்படும் சிரியாவின் அலிப்போ நகரைச் சேர்ந்த அகமது அப்துல் ஹமீத் (21) என்ற பாலஸ்தீனர் எப்படியாவது கடல் கடந்து ஐரோப்பாவுக்குத் தப்பிவிட வேண்டும் என்று மாதக்கணக்காக முயற்சி செய்தார். எல்லாம் தோல்வியில் முடிந்தது. ஆள்கடத்தும் தரகர்கள் அவரை ஏமாற்றிவிட்டனர். அவர் சென்ற படகு மேற்கொண்டு நகர முடியாமல் கடலில் தத்தளித்தது. எனவே, கரைக்கு நீந்தி வந்தார். பிறகு, பொலிஸாரிடம் சிக்கினார். கையில் உள்ள எல்லாவற்றையும் இழந்து தவித்தார்.

இந்த ஆண்டு கோடைப் பருவத்தில் நிலைமை மாறியது. துருக்கியைச் சேர்ந்த ஆள் கடத்தும் தரகர், ஹமீதை வேலைக்கு அமர்த்திக்கொண்டு, தப்பிக்க நினைக்கும் அகதிகளையும் வெளிநாட்டவர்களையும் பிடித்துவரும் முகவராக அவரை நியமித்தார். இப்போது ஹமீது அந்த வட்டாரத்தில் பிரபலமாகிவிட்டார். அவருடைய போனில் ஓயாமல் மணி அடிக்கிறது. எங்கே வர வேண்டும், கடலில் போவதற்கு எவ்வளவு கட்டணம் என்ற விவரத்தையெல்லாம் ஒவ்வொருவருக்கும் சொல்லிக்கொண்டே இருக்கிறார். இப்போது ஒரு நாளைக்குத் தரகாக மட்டும் 4,000 டொலர்கள் சம்பாதிக்கிறார். சில வாரங்கள் யாரும் வர மாட்டார்கள், பிறகு ஓய்வே இருக்காது என்கிறார்.

### பணம் புரளும் தொழில்

துருக்கி வழியாக பிற ஐரோப்பிய நாடுகளுக்குப் போகத் துடிக்கும் லட்சக்கணக்கான அகதிகளால் கோடிக்கணக்கான பணம் புரளும் தொழிலாகிவிட்டது ஆள் கடத்தல். துருக்கியின் மூன்றாவது பெரிய நகரமான இஸ்மிர், இப்போது மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. வீதிகளில் அகதிகளிடம் இடைத்தரகர்கள் ஓயாது பேரம் பேசுகின்றனர். கடைவீதிகளில், துணிக்கடை வாசல்களில் கடல் பயணத்தின்போது நீரில் மூழ்காமலிருக்க அணிந்துகொள்ளும் உயிர் காக்கும் பெல்ட்டுகள் நூற்றுக்கணக்கில் தொங்கவிடப்பட்டுள்ளன. தரகர்கள் மட்டுமல்ல; நகரவாசிகளுக்கும் பணம் பல வழிகளிலும் கொட்டுகிறது. சிவில் அதிகாரிகள், பொலிஸ்காரர்கள் என்று பலரும் சம்பாதிக்கின்றனர். உள்ளூர் அரசியல்வாதிகளின் செல்வாக்குக் காரணமாக கடற்படை, ராணுவத்தினரும்கூட இதையெல்லாம் கண்டும் காணாததுபோலச் செல்கின்றனர்.

### தற்காலிகப் பயணக் காப்பீடு

மக்கள் தங்களை நம்பி வர வேண்டும் என்பதற்காகக் கடத்தல்காரர்கள், தற்காலிகப் பயணக் காப்பீடு அலுவலகத்தைக்கூட நடத்துகின்றனர். படகில் செல்ல விரும்புவோர் பணத்தை இந்தக் காப்பீட்டு அலுவலகங்களில் அளித்து, ரகசிய எண்ணைப் பெற்றுக்கொள்ளவேண்டும். போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்த பிறகு, தங்களை ஏற்றிவந்த முகவரிடம் அந்த ரகசிய எண்ணைத் தருவார்கள். அதை அவர் அங்குள்ள கிளை அலுவலகத்தில் கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்வார். பயணம் பாதியில் நின்றால், மீண்டும் பணம் வாங்காமல் ஏற்றிச் செல்வார்கள். விபத்தில் இறந்துவிட்டால் நஷ்டஈடு கிடையாது. அவர்கள் சொல்லும் காப்பீடு என்பது வாங்கிய பணத்துக்கு நிச்சயம் உங்களை வேற்று நாட்டில் கொண்டுபோய்ச் சேர்ப்போம் என்பதுதான்.

ஒரு ஆளுக்கு 1,200 டொலர்கள் வாங்குகிறார்கள். ஒவ்வொரு படகுக்கும் ஒரு பயணி பைலட் ஆகத் தேர்வு செய்யப்படுகிறார். அவர் அகதிகளில் ஒருவர். அவருக்கு மட்டும் கட்டணம் கிடையாது. (அவர்தான் மற்றவர்களை அழைத்துவர உதவுவார்). குழந்தைகளுக்குப் பாதிக் கட்டணம், சிறு குழந்தைகளுக்கு இல்லை. ஒரு பயணி இந்தப் படகிலேயே 3 நாள்களுக்கு மேல் பயணித்தும் கரை சேர முடியாவிட்டாலும்கூட அவர் கொடுத்த தொகை திருப்பித் தரப்படமாட்டாது. அதே சமயம், பயணம் பாதியில் தடைப்பட்டுவிட்டது என்றால், 50 டொலரைக் கழித்துக்கொண்டு மிச்சத் தொகையைத் தந்துவிடுகிறார்கள். ஆனால், போலிகள் தலைமறைவாகி விடுகிறார்கள்.

உயிர் காக்கும் பெல்ட்டுகள் என்று கடைகளில் விற்கப்படும் சாதனங்கள் தரம்குறைவானவை. நுரை ரப்பரால் உள்ளூரிலேயே தயாரிக்கப்படுபவை. நீரில் மிதப்பதற்காக வாங்கும் இவையோ நீரை உறிஞ்சி உப்புகின்றன. இவற்றை அணிந்தும் பயனில்லை. விலை 13 டொலர்கள். ஆனால், துரும்பையாவது பற்றிக்கொண்டு கடலைக் கடந்துவிடத் துடிக்கும் மக்களுக்கு இதையெல்லாம் கவனித்துப் பார்க்க நேரமும் மனமும் இல்லை.

படகுகள் ரப்பரால் செய்யப்பட்டவை. காற்றடித்துப் பெரிதாக்குகின்றனர். பெரிய கப்பல்களில் நெருக்கடி நேரத்தில் பயணிகளைச் சிறிது தொலைவு வரை அழைத்துச் செல்லப் பயன்படுத்தப்படுபவை. கடல் கொந்தளிப்புகளை இவற்றால் சமாளிக்க முடியாது. சில வேளைகளில் தலைகீழாகக்கூடக் கவிழ்ந்துவிடும் அல்லது நிலைகுத்தி நின்றுவிடும். சுமார் 30 அடி நீளமுள்ள இந்தப் படகுகளில் சராசரியாக 45 பேரை ஏற்றுகின்றனர். மொத்தமாக 60,000 டொலர்கள் வசூலாகிறது. இதில் அதிகாரிகள் லஞ்சம், கடற்படை லஞ்சம், பொலிஸ் லஞ்சம், டீசல் செலவு, படகோட்டிகளின் சம்பளம் என்று எல்லா செலவுகளும் போக 30,000 டொலர்கள் நிகர லாபமாக நிற்கிறது.

### பொலிஸும் இராணுவமும் துணை

பயணமெல்லாம் இரவு நேரங்களில்தான். துருக்கியிலிருந்து கிரேக்க நாட்டுக்குக் கடலில் செல்ல ஒரு மணி நேரப் பயணம்தான். வானிலை சரியாக இருக்க வேண்டும். முகவர்கள் தங்களிடம் பணம் கொடுத்தவர்களை பஸ் அல்லது வாடகைக் கார்களில் ஏற்றிக்கொண்டு ஊருக்கு வெளியே கடலோரத்தில் படகு வரக்கூடிய இடத்துக்கு இருட்டில் அழைத்துச் செல்கிறார்கள். அங்கேயுள்ள படகுத் துறையில் ஆள்கள் ஏற்றப்படுகிறார்கள். பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்தப் பக்கம் நடமாடுவதில்லை.

இந்த ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக வந்தவர்களில் சுமார் 5 லட்சம் பேர் துருக்கி வழியாகத்தான் சென்றனர். இந்தத் தொழிலில் நல்ல வருமானம் கிடைப்பதால் துருக்கியர்கள் இதை நிறுத்துவதாக இல்லை. அகதிகளும் தங்களுடைய நாட்டில் இருந்தால் உயிருக்கு ஆபத்து என்று அஞ்சி வெளியேறுவதால், இத்தொழில் இப்போதைக்கு ஓய்வதாகத் தெரியவில்லை.

இஸ்மிர் நகர் வழியாக வெளியேற அன்றாடம் நூற்றுக்கணக்கான அகதிகள் வந்த வண்ணம் உள்ளனர். அவர்களால் கிடைக்கும் வருவாய், வேலைவாய்ப்பு ஆகியவற்றை இழக்க விரும்பாமல் அரசே ஆதரிப்பதைப் போலத் தெரிகிறது. மிகப்பெரிய அளவில் ஆள்களை வைத்துக் கடத்தல் தொழில் செய்யும் கும்பல், இதை வைத்துக் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறது. சொந்த நாட்டில் இருக்கும் வீடு, கடைகள், நிலம், நகைகள், வாகனங்கள், கால்நடைகள் போன்றவற்றை விற்றுவிட்டுப் பணத்துடன் குடும்பம் குடும்பமாக இங்கே வருகின்றனர். ஐரோப்பிய நாடு எதிலாவது அகதியாகிவிட்டால், இந்தப் பணத்தை அங்கே சம்பாதித்துவிடலாம் என்கின்றனர்.

### விலைபோகாத சிறுநீரகம்

அகதிகளை ஏற்றிவர துருக்கிக்கு ஜெர்மனி கப்பல்களை அனுப்புகிறது என்று யாரோ வதந்தியைப் பரப்ப, சிரியாவில் நல்ல வேலையிலிருந்த இப்ராஹிம் அலிபா அதை நம்பி வேலையை விட்டுவிட்டுத் தன் நண்பருடன் அவருடைய குடும்பத்தாரையும் தன் குடும்பத்தாரையும் அழைத்துக்கொண்டு இஸ்மிர் கடற்கரைக்கே வந்துவிட்டார். இங்கிருந்து ஐரோப்பா போக 11,000 டாலர்கள் தேவை. ஆனால், அவ்வளவு பணம் இல்லை என்று கவலையோடு கடற்கரையில் முகாமிட்டிருக்கிறார். தன்னுடைய சிறுநீரகத்தை விற்கக்கூடத் தயார் என்று அறிவித்திருக்கிறார். ஆனால், யாரும் வாங்க முன்வரவில்லை.

குடியேறுவோர்களுக்கான சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த லடோ விலவா, துருக்கியில் நடைபெறும் இந்தக் கொடுமைகளைக் கண்டு மனம் கொதிக்கிறார். அவர்கள் மக்களுடைய உயிர்களுடன் விளையாடுகின்றனர். இரவில் கூட்டிச் செல்லும் அவர்கள், நிலம் வந்துவிட்டது என்று கூறி கடலிலேயே இறக்கி விட்டுவிடுகின்றனர். இந்தப் படகுகள் பயணத்துக்கோ, மீன்பிடிக்கவோ, உல்லாசமாகச் சென்றுவருவதற்கோ தகுதியற்றவை. கடத்தல் தொழிலுக்குத்தான் பயன்படுத்த முடியும் என்று வருத்தப்படுகிறார்.

காலையில் கிழக்கு வெளுத்து சூரியன் உதிக்கும் நேரத்தில், இந்தப் படகுகளில் ஒன்று, கிரேக்க நாட்டின் லெஸ்போஸ் என்ற தீவை நெருங்குகிறது. இஸ்மிர் நகரிலிருந்து முதல் நாள் இரவு புறப்பட்ட மாலிக் அல் சாலே (வயது 21) என்ற இளைஞர் படகிலிருந்து குதித்து தரையை முத்தமிட்டு இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறார். தன்னுடைய முயற்சி வெற்றி பெற்ற நிறைவு அவருக்கு. கிழக்கு சிரியாவைச் சேர்ந்த அவர் தங்கள் ஊரை ஐ.எஸ். படைகள் நெருங்கிவிட்டன என்று கேள்விப் பட்டதும் சகோதரர், 2 சகோதரிகள் அவர்களுடைய 2 குழந் தைகளுடன் வெளியேறி துருக்கி வந்தார். இப்போது கிரேக்கம் வந்து சேர்ந்துவிட்டார்.

அய்லான் குர்தி என்ற குழந்தை கடற்கரை மணலில் முகம் புதைந்து இறந்து கிடந்ததைப் பார்த்த பிறகும் இப்படி வருகிறீர்களே என்று கேட்டபோது, என்ன செய்வது, உள்நாட்டில் இருந்தால் இதைவிட மோசமான வகையில் சாவு ஏற்பட்டிருக்கும்.

அந்தப் புகைப்படங்களைப் பார்த்தோம். ஒருவிதமான சாவிலிருந்து தப்பிக்க இன்னொரு வகை சாவை நாங்கள் பொருட்படுத்தவில்லை என்று பதில் அளித்தார். அகதிகளாக வருவோரின் இந்த மனநிலையால்தான் இந்த அலை ஓயாமல் அடித்துக்கொண்டிருக்கிறது.




Digitized by [illegible] Foundation
noolaham[illegible]



# நெருப்பை விழுங்கியவள்! 13

தொடர்கதை

கண. மகேஸ்வரன்

அப்பாவின் தங்கை மகன் ஆனந், அரச பதவியொன்று கிடைத்து, இங்கே ரவுணுக்கு வருகிறானாம். கிராமத்திலிருந்து இங்கு தினசரி வந்து போக முடியாதென்றும், இளம் பையனாக இருப்பதால் கண்ட கண்ட இடங்களிலும் விடமுடியாதென்றும், சொந்தத் தாய் மாமனின் நேரடிக் கண்காணிப்பில் இருப்பது தான் தனக்கு உசிதமாகப்படுகிறதென்றும், அதனால் அவனுக்கு இங்கே எமது வீட்டில் தங்க வசதியிருக்குமா என்றும் மாமி எழுதிக் கேட்டிருக்கிறாளாம்.

அம்மா, அப்பா சார்பில் என்னிடம் அபிப்பிராயம் கேட்டாள் எனக்குப் பற்றிக்கொண்டு உறவுக்காரர் மீதெல்லாம் எரிச்சல் வந்தது. இந்த உறவுகளெல்லாம் இதுவரை எங்கு போய் ஒளிந்துகொண்டன? இப்போது புதிதாக ஒட்டிக் கொள்ள என்ன அவசியம் வந்தது? எல்லாமே சுயநலத்தின் பிரதிபிம்பங்கள்தான்.

"என்னைக் கேட்டால், நான் உடனடியாகச் சம்மதிக்கமாட்டன். அதற்கு நீண்டகால அவகாசம் தேவைப்படலாம். அதுகூட சாதகமாயிருக்குமென்று சொல்ல முடியாது. நீங்களாகவே முடிவெடுத்தால் அதற்கு நான் குறுக்கே நிற்கப்போவதுமில்லை. அவசரப்பட்டு ரிஸ்க் எடுக்காமலிருக்கிறது நல்லது" என்று, அவர்கள் தலையிலேயே பாரத்தைப்போட்டு ஒதுங்கிக் கொண்டேன்.

என்னைவிட சரியா பத்து வயது இளையவனாம். அவனால் எனக்குப் பிரச்சினை வராது என்று அம்மா உறுதியளித்தாள்.

அதற்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால், ஒரு வயது வந்த பெண்ணை இவ்வளவுகாலம் குமராய் வைத்துக்கொண்டு அவர்கள் காலத்தைக் கடத்துவது சரியா? என்றொரு கேள்வி அவசியமில்லாமலே மனதில் தோன்றியது.

இருபத்தெட்டு வயதென்றால் ஒரு பெண்பிள்ளைக்குக் குறைந்த வயதா என்ன?

இந்த வயதில் இன்னும் தாமதித்தால், முதிர் கன்னியாக.... அதற்கப்பால் வரும் நிகழ்வுகளுக்கெல்லாம் தாக்குப் பிடிக்க முடியுமா? என்ற சந்தேகம் இயல்பாகவே எழுந்ததனால் வந்த ஆத்திரமாகவும் இருக்கலாம்.

அப்பா அது பற்றி என்னிடம் ஒரு வார்த்தைக்கூடக் கேட்கவில்லை. அம்மாவே எல்லாம் என்று இருந்துவிட்டார் போலும்.

இப்போதெல்லாம் அப்பா முன்போலில்லை. வெகுவாகவே மாறிவிட்டிருந்தார். ஒரேயொரு அட்டாக் வந்து அவரை முற்றாகவே மாற்றிவிட்டிருந்தது.

பாவம்! அப்பா மனது புண்படக்கூடாதென்று, நானே அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

"அப்பா, என்னயோசிக்கிறியள்? மாமியும்கூட வாறாவோ...?" அவரைச் சமாதானப்படுத்து முகமாக, முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டேன்.

அதுவரை அமைதியாக இருந்தவர், அது குலைந்துபோக, முன்போல் வாய் திறந்தார்.

"சின்ன வயதிலை தொடர்பறுந்து போச்சு. கடிதத் தொடர்பு மட்டும்தான் நிலைச்சிருந்தது. அவள் வாறாளோ இல்லையோ? யாரோ கூட்டிவருவினம்தானே. ஆனால் அவனைக் கண்டிக்கிற அதிகாரம் உனக்குத்தான். உன்ர தோல் மேலே வளர்ந்த பிள்ளைதானே..." என்றவர், சிறிது நேரம் தாழ்த்தி, "ம்..." என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டார். அதன் அர்த்தம் புரிவதாயில்லை.

அதற்குள் அப்பா என்னமாய்க் களைத்துவிட்டார்.

"அப்பா, நீங்கள் கொஞ்சம் படுத்து ஓய்வெடுங்கோ. நான் சித்திரா வீடு வரைக்கும் போய்வாறன்" என்று விடை பெற்றபோது, அம்மா வந்து குறுக்கிட்டாள்.

"இப்பேன் பிள்ளை? பொழுதுபடப்போகுது... நாளைக்கு ஸ்கூலுக்குப் போகையுக்கே கதைக்கலாம்தானே... உளுந்து ஊறவைச்சனான். ஒருக்கால் ஆட்டிவிடு பிள்ளை" என்று எனக்குத் தடைபோட்டாள்.

மௌனமாகச் சம்மதிப்பதைத் தவிர எனக்கு வேறுவழி தெரியவில்லை.

அம்மாவும் இப்பிடியே எத்தனை நாளைக்குத்தான் குத்தி முறிவாள் என்று நினைக்க, பாவமாயிருந்தது.

திடுதிப்பென்று ஒரு சனிக்கிழமை மாமாவுடன் வந்திறங்கிய ஆனந்தைக் கண்டபோது அதிர்ச்சியாகத்தானிருந்தது.

நான் கற்பனை பண்ணிய உருவம் வேறு. அவன் தோற்றமோ வேறுவிதமாக இருந்தது. கிராமப்புறத்தான் என்று சொல்லமுடியாத எடுப்பு.

பின்புறம் மேவிப் படியவைத்த தலைவாறல். அகன்ற நெற்றி. பாரதியின் கண்ணம்மாவில் வரும் வட்டக் கருவிழிகள் பெண்களுக்கு மட்டுமே சொந்தமில்லை என்பதுபோல், துறுதுறுவென்று அலையும் அகன்ற கண்கள். இரட்டை நாடிச் சரீரம். கருரோமங்களால் போர்த்திய அழகான எலுமிச்சம்பழ நிறமான மேனி.

> 'சின்ன வயதிலை தொடர்பறுந்து போச்சு. கடிதத் தொடர்பு மட்டும்தான் நிலைச்சிருந்தது. அவள் வாறாளோ இல்லையோ? யாரோ கூட்டிவருவினம் தானே.



இருபத்திரெண்டுவயதென்றாலும் மதிக்கக்கூடிய எடுப்பான தோற்றமும், வயதுக்கு மீறிய வளர்ச்சியுமாய்காளைமாடுமாதிரிப் பொலிந்திருந்தான். என் கண்ணே திருஷ்டிபட்டு விடும் போலிருந்தது.

அம்மா, அவன் முகத்தில் கைசொடுக்கிவரவேற்றாள். இவனை ஏன் எங்கள் வீட்டில் தங்க வைக்க வேண்டும்? ஓ...! எவளாவது கொத்திக்கொண்டு போய்விடுவாளோ என்ற பயம் காரணமாயிருக்கலாம்... பணம் கொத்திப் பறவைகளைத் தொலைப்பதா? அப்பாவின் கறாரான கண்டிப்பான குணம் பற்றி மாமி எடுத்துச் சொல்லியிருப்பாள். இவர் இங்கே இப்போது பெட்டிப்பாம்பாய் அடங்கிக் கிடப்பது, அவர்களுக்குத் தெரிய நியாயமில்லையே?

நீண்ட நாள்களாகத் திருமணத்துக்காகக் காத்திருக்கும்முதிர் கன்னியாகப் போய்விடுவேனோ, என்ற அச்சமடைந்திருக்கும் எனக்கு, என்னை விடவும் இளையவனான பதினெட்டு வயதேயான அந்த இளைஞனைக் கண்டதும் ஏற்பட்டது கவலையா? ஆசையா? அசூசையா? ஒருவித பொறாமையா? என்று இனங்காண முடியவில்லை. நிச்சயமாக ஆசையென்று சொல்வதற்கில்லை, அப்படியானால்? ஏனோ, என்மீதே எனக்கு வெறுப்பாக வந்தது.

கிராமத்தில் இருந்திருந்தால் அளவோடு செலவழித்து, ஆடம்பரமின்றி பொருளாதார வளத்தைப் பெருக்கியிருக்கலாமே என்று மனது அங்கலாய்த்தது. நகரத்து வாழ்வின் செலவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாததால்தான், எனதுதிருமண வயதும்தள்ளிப் போகிறதோ? ஏனடா, பெண்ணாய்ப் பிறந்தோமென்றிருந்தது.

கதைகளிலும் காவியங்களிலும் இலட்சியப் பெண்ணாய் தியாகியாய் சிறந்ததொரு நிர்வாகியாய் ஒருபெண் எப்படியும் சித்திரிக்கப்படலாம். ஆனால், உண்மையில்? பெண்ணாகப் பிறந்தவளெல்லாம், ஆணாதிக்கச் சமுதாயத்தின் அடக்குமுறைகளுக்குப் பலிக்கடாவாகவும், போதைக்குரிய வஸ்துவாகவும், மற்ற நேரங்களில் வீட்டுக் காரியங்களையெல்லாம் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டு மாரடிக்கும் சுமைதாங்கியாகவும் தானிருக்க முடியுமா?

அவளுக்கென்று ஆசைகள் ஆசாபாசங்கள் பொழுதுபோக்குகள் தேவைகள் என்று எதுவுமே இருக்கக்கூடாதா?

அழகை ஆராதிக்கவும், கற்பனைக்குத் திறவுகோலாகவும், விளம்பரத்துக்காக மாடலிங்காகவும் பெண்களை ஆணாதிக்க சமுதாயம் பயன்படுத்துவதைக் கண்டித்து, கல்லூரி நாள்களில் மேடைகள் தோறும் ஏறி முழங்கி, அவற்றுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கிய அனித்தாவுக்கு, ஆனந்தின் வருகை அறவே பிடிக்காமல் போனதில் வியப்பில்லை.

அவனின் வசீகரம் கொண்டுவந்த மலைப்பு, ஏனோ வயிற்றில் புளியைக் கரைத்து வார்த்தது போலிருந்தது.

கேசவனை வெட்டி விட்டாயிற்று. இவனது வரவு, வெளியுலகப் பார்வையில் என்னென்ன கொண்டு வருமோ என்று பயமாயிருந்தது.

ஒரு சமயம் கவிஞர் கண்ணதாசன், வாலி போன்றோரையே அவள் மேடையில் சாடியிருக்கிறாள், பெண்களை ஆராதித்துப் பாடியதற்காக.

அடுக்களைப் பொருள்களையே பெண்ணுக்கு உவமையாக்கி கவிதை சமைக்கும் இந்தக் கவிஞர்களையெல்லாம் தூக்கி வீசவேண்டுமென்று ஆர்ப்பரித்தவள், அவள்.

இப்போது அந்த வேகம், நெருப்பென அனல் வீசிய வீராவேசம் எல்லாம் எங்க போயொளிந்து போயிற்று?

நல்ல உருவகங்களோடு பெண்ணை உவமித்த நல்ல கவிதைகளைக்கூட, அவற்றை நயந்து ரசித்து மனதுக்குள் சிலிர்த்தாலும், வெளியே காட்டிக் கொள்ளாத சுபாவம் அவளுடையது.

பழைய நினைவுகளை மீட்டிக் கொண்டிருக்கையில், குபீரென்று அடிமனத்தின் ஆழத்திலிருந்து அவள் முதற் காதலின் நினைவுகளும் புரண்டு மேலெழுந்து வந்தன.

*(நெருப்பு உமிழும்....)*

## அந்தரத்தில் ஓர் அஞ்சலி!



இத்தாலியின் மோன்டே பியானா பகுதியில் அமைதி மற்றும் முதல் உலகப் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக வானவில் ஊஞ்சல் என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 164 அடி உயரமுள்ள 2 மலைகளை இணைத்து ஒரு கம்பி [illegible] இதில் 28 பேர் நடை பயின்றனர். [illegible] இந்தக் கம்பியில் 17 வண்ணங்களில் ஊஞ்சல்கள் அடுத்தடுத்துக் கட்டப்பட்டன.

ஒவ்வோர் ஊஞ்சலிலும் வீரர்கள் அமர்ந்திருந்தனர். இந்த ஊஞ்சல்களுக்குள் ஒரு செய்தித்தாள், விளையாட்டுப் பொருள், சிப்ஸ், குளிர்பானம் போன்றவை வைக்கப்பட்டிருந்தன. அவரவருக்குப் பிடித்த செயல்களைச் செய்தபடி வீரர்கள் அவற்றில் அமர்ந்திருந்தனர். இந்த இடம் இயற்கை எழில் மிக்க இடம் இல்லை. வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம். 18 ஆயிரம் வீரர்களின் நினைவாக நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியை, 2 மணி நேரம் நின்று மக்கள் ரசித்தனர். நோக்கம் நல்லதுதான் என்றாலும் ஆபத்தானதாக இருக்கிறதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அடிக்கடி ஊரடங்கு உத்தரவு நடை முறையில் இருக்கும் ஒரு கிராமத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தங்கத்துக்காகப் போராடும் உள்ளூர், வெளியூர் மக்களின் முயற்சிதான் நகைச்சுவை 144.

பக்கத்துக் கிராமத்துடன் சண்டையிடுவதால் வருடத்தில் பல நாள்களை ஊரடங்கு உத்தரவிலேயே கழிக்கிறது எரிமலைக் குண்டு கிராமம். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெரிய மனிதர் ராயப்பன், அவரிடம் சாரதியாக வேலை செய்யும் மதன், அவன் காதலிக்கும் ராயப்பனின் மகள் திவ்யா ஒரு பக்கம். அதே கிராமத்தைச் சேர்ந்த தேசு, எந்தப் பூட்டாக இருந்தாலும் திருடும் பலே திருடன். அவனும் அவனுடைய காதலி பாலியல் தொழிலாளி கல்யாணியும் ஒரு பக்கம்.

இவர்களுக்கு நடுவில் தனது எதிரிகளை வித்தியாசமாகத் துன்புறுத்தும் ஃபீலிங்க்ஸ் ரவி. ராயப்பனின் தங்கப் பதுக்கலைத் தற்செயலாகத் தெரிந்து கொண்டுவிடும் வாய் பேச முடியாத ஒருவர். இவர்கள் அனைவரும் ஒரு தங்கக் கடத்தலில் சம்பந்தப்பட்டிருக்க, கடைசியில் அது யாருக்குக் கிடைத்தது என்பதே 144.

கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட்ட பிரம்மாண்டமான விநாயகர் சிலையை ஒட்டி இரு கிராமங்களுக்கிடையே பிரச்சினையுடன் ஆரம்பிக்கும் கதை தங்கக் கடத்தலை நோக்கி நகர்கிறது. படத்தில் எதையுமே கனதியாக எடுத்துக்கொள்ள முடியாது. எல்லாமே நக்கலும் நையாண்டியும்தான். அந்த அளவுக்கு எல்லாமே பகிடி செய்யப்படுகின்றன. வழக்கத்தில் இருந்து மாறுபட்ட நகைச்சுவைப் படமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் திரைக்கதை அமைத்து, வழக்கத்துக்கு மாறான பாத்திரங்கள் மூலம் படத்தைப் புதியதொரு பாதையில் நகர்த்திச் செல்கிறார் இயக்குநர் மணிகண்டன்.

பாலியல் தொழிலாளி பாத்திரத்தை விரசமோ, கழிவிரக்கமோ இல்லாமல் சித்திரித்த விதத்தில் இயக்குநர் மணிகண்டன் தனித்துத் தெரிகிறார். திரைப்படத்தில் இடம்பெற்ற வசனங்களை நடைமுறை வாழ்க்கையில் சந்தர்ப்பத்துக்கேற்ப மனிதர்கள் பயன்படுத்துவது வழக்கம். இந்த உத்தியை அப்படியே திரைக் கதாபாத்திரங்களுக்குப் பயன்படுத்தியிருக்கிறார் மணிகண்டன். அம் முயற்சியில் பல இடங்களில் வெற்றியும் பெற்றுள்ளார்.

கண்ணாடியில் விநாயகர் சிலை, 144 உத்தரவை கிராமத்தினர் எதிர்கொள்ளும் விதம், பெண்கள் தலைவிரி கோலமாக நடமாடும் ரகசியம், கள்ளச் சாராய விற்பனை, தங்கத்தைப் பதுக்கிவைக்கும் விதம் என அட போட்டு சிரிக்கவைக்கும் சமாச்சாரங்கள் பல படத்தில் உள்ளன.

குருதேவின் ஒளிப்பதிவு, சான் ரால்டனின் பின்னணி இசை, லியோ ஜான் பாலின் படத்தொகுப்பு ஆகியவையும் படத்தின் ஓட்டத்துக்கு உதவியிருக்கின்றன.

திருடன் தேசுவாக வரும் மிர்ச்சி சிவா, தனது வழக்கமான நடிப்பைத் தந்துள்ளார். பல இடங்களில் தனது நடிப்பால், வசனங்களால் சிரிக்க வைக்கிறார். ஓவியா, வித்தியாசமான பாலியல் தொழிலாளி பாத்திரத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நடித்துள்ளார். மற்றொரு நாயகனாக அசோக் செல்வன். தன்னால் முடிந்தவரை கிராமத்து இளைஞன் பாத்திரத்துக்கு உயிர் கொடுக்க முயல்கிறார். ஆனால் அவருக்குக் கிராமத்து பாணி வசன உச்சரிப்பு கை கொடுக்க மறுக்கிறது. அவரது ஜோடியான ஸ்ருதி ராமகிருஷ்ணன் கொடுத்த வேலையைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார். ஃபீலிங்ஸ் ரவியாக உதயபானு மகேஸ்வரன். வில்லனாக இருந்தாலும் அவர் வரும் காட்சிகள் அனைத்தும் நகைச் சுவையாகவே கையாளப் பட்டுள்ளன. ஜிம் பாய்ஸை அவர் துன்புறுத்தும் விதம் தமிழ் சினிமா நகைச் சுவைக்கே புதுசு. ராயப் பனாக மதுசூதனன், வழக்கமான தமிழ் சினிமா கிராமத்து வில்லன்களை நினைவு படுத்துகிறார். வாய் பேச முடியாத பாத்திரத்தில் முனீஸ்காந்த் தனிக் கவனம் பெறுகிறார். கலை ஆர்வத்தோடு திரிவது, ஓவியாவின் மேல் ஈர்ப்பு ஏற்பட்டு அவரது சிலையை ஆர்வத்துடன் வடிப்பது எனப் பல காட்சிகளில் ஈர்க்கிறார். அடிக்கடி கண்டிப்பா எனச் சொல்லும் இன்ஸ்பெக்டராக வரும் ரத்தினம் சுந்தரம் கலகலக்க வைக்கிறார். கடைசி வரை ஒரே மாதிரியான தொனியில் அவர் சொல்லும் கண்டிப்பா, திரையில் வரும்போதெல்லாம் ரசிகர்களிடம் சிரிப்பை அள்ளுகிறது.

வழக்கமான நகைச்சுவைப் படங்களில் உள்ளதைப் போன்ற காட்சிகள்தான் இதிலும் உள்ளன என்றாலும் அவற்றை மாறுபட்ட வகையில் திரையில் தந்திருக்கும் முயற்சி என்ற அளவில் இந்தப் படத்தை வர வேற்கலாம். எல்லாப் பாத்திரங்களும் எல்லாச் சம்பவங்களும் பகிடி செய்யப்படுவது சுவாரஸ்யமாக உள்ளது. சில காட்சிகள் தமிழ் சினிமாவையே கிண்டலடிக்கின்றன.

பகிடி என்னும் அற்புதமான சாதனத்தைக் கொண்டு சமகால அபத்தங்களைச் சுட்டிக்காட்ட வாய்ப்பு இருந்தும் அதைப் பயன்படுத்த இந்தப் படம் தவறிவிட்டது. பல்வேறு நுட்பங்களுடன் வலுவாக வெளிப்படும் வாய்ப்பை வீணடித்திருப்பதால் சாதாரண நகைச்சுவைப் படமாக மட்டுமே 144 அமைந்துவிட் டது. ஆனாலும் பொழுது போக்காகப் பார்க்கலாம்.

# பாதுகாப்புக் கடவை


மின்னல் வேகத்தில்
மினக்கட நேரமின்றி
பார்த்தும் பாராமல்
பறக்கின்ற மக்க(ள்)ளே!
அவசரம்தான் இருந்தாலும்
நின்றங்கு நிதானித்து
சென்றால் குறைந்திடுமா?
ஓரிரு நிமிடங்கள்
உங்களைப் பாதுகாக்கும்

அருமந்த உயிர்களை
அநியாயமாய்ப் பறிகொடுத்து
தாரத்தை விதவையாக்கி
தந்தையில்லாப் பிள்ளையாக்கி
தாய் தந்தை சோதரரைச்
சோகத்தில் ஆழ்த்திடும்
கோர விபத்துக்கள்
நேராமல் விழிப்படைவோம்!

அறிவிப்புப் பலகைகள்
அடையாள நிறங்கள்
அபாய ஒலிகள்
சமிக்ஞை விளக்குகள்
வேகத் தணிக்கைகள்
குறியீட்டு விளக்கங்கள்
குறிக்கும் அர்த்தங்களை
மதித்து நடந்தால்
விபத்தைத் தடுக்கலாம்

பாதுகாப்பு எமக்கன்றி
கடவைகளுக்கு அல்ல
பிழையான செயல்கள்
பலபேரை இரையாக்கும்
உயிருக்காகவே வாழ்க்கை!
உணராத வரையில்
உபத்திரவம் தொடரும்

அபீர்ராஜன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இந்த வாரம் 13.12.2015 முதல் 19.12.2015 வரை உங்களுக்கு எப்படி?

## மேடம்

குரு, ராகு, செவ்வாய் நற்பலன் தருவர். மனதில் உற்சாகமும் செயல்களில் பொறுப்புணர்வும் ஏற்படும். திட்டமிட்டுச் செயலாற்றுவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். பணவரவு சீராகும். சேமிக்கவும் செய்வீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். புத்திரர்களின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் நல்ல ஆலோசனை சொல்வர். மனைவியுடன் கருத்து வேறுபாடு வரலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் வரும்.பணியாளர்கள் பணி இலக்கைப் பூர்த்தி செய்வர். பெண்கள் குடும்ப நலன் சிறக்க மாற்றுத்திட்டம் உருவாக்குவர். மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்த வேண்டும்.ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும்.

## இடபம்

சந்திரன், புதன், கேது ஓரளவு நன்மை தருவர். மனதில் உறுதி நிறைந்திருக்கும்; பணியில் வரும் குறுக்கீடுகளை மாற்று உபாயத்தால் சரி செய்யலாம். சகோதரர் விலகுதல் மனப்பாங்கு கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் அறிவு, செயற்திறனில் மேம்படுவர். ஆடம்பர பொருள் வாங்குவதைத் தவிர்ப்பதால் செலவு குறையும். மனைவியின் செயல்களைக் குறை சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராகஇருக்கும்.பணியாளர்கள்கூடுதல்வேலைவாய்ப்பை ஏற்றுக்கொள்வர். மாணவர்கள் லட்சிய மனதுடன் படிப்பில் கவனம் கொள்வர். துர்க்கை வழிபாடு தைரியத்தை வளர்க்கும்.

## மிதுனம்

சுக்கிரன், சனி, சூரியன் ராஜயோக பலன் தருவர். மனதில் சில குழப்பங்கள் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நன்மை தரும். வாகன பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள்; உடல்நலம் ஆரோக்கியம் பெறும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வாா். தொழில், வியாபாரம் வளர புதியவர்கள் ஆதரவு தருவர். பணியாளர்கள் பணித்திறனில் மேம்படுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

மாணவர்கள் பெற்றோரின் வழிகாட்டுதலின்படி செயற்பட்டால் மதிப்பெண் உயரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு மங்கள வாழ்வு தரும்.

## கடகம்

சூரியன், சனி, கேது தவிர மற்ற கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். எதிர் காலத் தேவைகளுக்காகத் திட்டமிடுவீர்கள். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினர் உதவுவர். புத்திரர்களின் குறையைச் சரி செய்வதில் நிதானம் வேண்டும். மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மனைவி உங்களுடன் வரவுசெலவுவிடயத்தில்ஒத்துழைப்புத் தருவாா். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழிக்கும். சேமிப்புக் கூடும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்; பெண்கள் நிம்மதி நிறைந்த வாழ்வு பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து அதிக மதிப் பெண் வாங்குவர். சிவன் வழிபாடு சகல நன்மைகளும் தரும்.

## சிங்கம்

சுக்கிரன், சந்திரன் ஓரளவு நன்மை தருவர். அதிக முயற்சியால் பணி ஓரளவு நிறைவேறும். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்கள் பிடிவாத குணத்துடன் செயற்படுவர். உடல்நிலைக்குச் சிகிச்சை தேவைப்படலாம். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் இடையூறு இருக்கலாம். பொறுமை தேவை. பணியாளர்களுக்கு நிர்வாகத்தால் சில பிரச்சினைகள் வரலாம். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்கக்கூடாது. மாணவர்கள் நண்பர்களுடன் சுற்றுவதைத் தவிர்த்தால் மதிப்பெண் உயரும். முருகன் வழிபாடு நம்பிக்கையை வளர்க்கும்.

## கன்னி

சனி, சூரியன், சுக்கிரன் புதனால் நன்மை உண்டு. பணிகளில் திறமை பளிச்சிடும்.எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்கும். புத்திரர்கள் பெற்றோர் சிந்தும் பாசத்தில் மனம் நெகிழ்வர். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவியின் செயல்களைப் புகழ்ந்து பேசிக் காரியம் சாதிப்பீர்கள் தொழில், வியாபாரம் செழித்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடித்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் வீட் டுச்செலவுக்குத் திண்டாட நேரிடும். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். வைரவர் வழிபாடு சங்கடம் தீர்க்கும்.

## துலாம்

குரு, சுக்கிரன், கேது நற்பலன் தருவர். ஆடம்பரச் செலவுகளால் கடன் வாங்கும் சூழ்நிலை வரும். தாய்வழி உறவினர்களிடம்கருத்துப்பேதம்ஏற்படலாம். புத்திரர்களின் நற்செயல் பெருமை தேடித் தரும். உடல்நிலையில் சிறு பாதிப்பு வரலாம். மனைவியின் ஆதரவால் மனதில் தைரியம் கூடும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல சூழல் உருவாகும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை மதித்து செயற்படுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் லட்சிய மனதுடன் படிப்பில் கவனம் கொள்வர். சனீஸ்வரர் வழிபாடு சங்கடம் தீர்க்கும்.

## விருச்சிகம்

சுக்கிரன், செவ்வாய், ராகு நற்பலன் தருவர். உங்கள் மீதான மற்றவர்களின் பார்வை மதிப்பு மிக்கதாக இருக்கும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலைத்திறனில் மேம்படுவர். பூர்வ சொத்தில் பணவரவு கூடும். நோய் தொந்தரவு குறையும். மனைவி உங்கள் எண்ணங்களைச் செயற்படுத்துவாா். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணிகளை முடித்து சலுகை பெறுவர். பெண்களுக்குத்தாராள பணவசதி இருக்கும். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் படிப்பில் முன்னேறுவர். பெருமாள் வழிபாடு செல்வ வளம் தரும்.

## தனுசு

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. வாழ்வில் மிகப்பெரிய மாற்றம் உருவாகும். அதிக பணவரவால் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். சிலர் வீடு இடம் மாறுவர். வாகன பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்களின் வளர்ச்சிக்காகத் திட்டமிடுவீர்கள். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவியின் சிந்தனையும் செயலும் நல்ல பலன் தரும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் கடந்த வார நிலை தொடரும். பணியாளர்களுக்கு அதிக சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்ப எதிர்கால நலனில் கவனம் கொள்வர். மாணவர்கள் பெற்றோர் சொல் கேட்டு செயற்படவும்.விநாயகர் வழிபாடு வினை தீர்க்கும்.

## மகரம்

சனி, சூரியனின் சேர்க்கை அதிர்ஷ்ட பலன்களைத் தரும். குடும்பத்தின் தேவையைத் தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். புத்திரர்களின் அறிவாற்றல் வளரும். படிப்பு, வேலையில் முன்னேறுவர். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். கடன்களை அடைத்து விடுவீர்கள். மனைவி உங்களின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு தருவாா். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால் செழிக்கும்; பணியாளர்களுக்கு சக பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பெண்கள் உறவினர்களுக்கு உதவி செய்து நற்பெயர் பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை இருக்கும். சாஸ்தா வழிபாடு இடர் நீக்கும்.

## கும்பம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன் வியத்தகு அளவில் நன்மை தருவர். பயணங்கள் புதிய அனுபவம் தரும். புத்திரர்கள் உங்களின் வழிகாட்டுதலின்படி நடந்து கொள்வர். பூர்வ சொத்தில் வளர்ச்சி, வருமானம் கூடும். பகைவர் மனதிலும் உங்கள் மீது நல் எண்ணம் ஏற்படும். மனைவியின் தியாகம் நிறைந்த மனதைப் புரிந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டுப் பெறுவர். ஆஞ்சநேயர் வழிபாடு வெற்றியளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனம்

சந்திரன், புதன், சுக்கிரனால் நன்மை உண்டாகும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர்; பகைவர்களிடம் விலகுவது நல்லது. உடல்நலத்தில் சிறு தொந்தரவு வந்து நீங்கும். மனைவி உங்கள் மீது பாசம் கொள்வாா். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணி உதவும். பணியாளர்கள் அலுவலகத்தில் கேட்ட கடன் தாமதமாகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். அம்பிகை வழிபாடு மங்கள வாழ்வு தரும்.

# இஸ்ரேல் - ஐரோப்பிய உறவில் விரிசல் ஏற்படும் சாத்தியம்

காஸாவின் மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேல் பலவந்தமாகக் கைப்பற்றி வைத்திருக்கும் நிலப்பகுதிகளில் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் போது அவை மீது அதற்கான அடையாளம் (லேபல்) இடப்பட்டிருக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் குழு அறிவித்திருப்பதைத் தொடர்ந்து இந்த இரு தரப்புக்களுக்கும் இடையிலான உறவுகளில் பெரும் விரிசல் ஏற்படும் சாத்தியம் உருவாகியுள்ளது.




இஸ்ரேலியகுடியிருப்புக்களில் தயாரிக்கப்படும் பண்ணைப் பொருள்கள் மற்றும் வேறு பொருள்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விற்கப்பட வேண்டுமானால் அவை குறித்த விவரம் பொருள்களின் மீது அடையாளமாக இடப்பட்டிருக்க வேண்டும் என்று - ஐரோப்பிய ஆணையம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து பலஸ்தீனத்துக்கும் - இஸ்ரேலுக்கும் இடையில் அமைதியைத் தோற்றுவிப்பதில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய குழுக்களுடனான தொடர்புகளை உடனடியாகத் துண்டித்துக் கொள்வதாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

1967ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய கிழக்குப் போரை அடுத்து இஸ்ரேலியர் மேற்குக் கரையிலும் கிழக்கு ஜெருசலேம் மற்றும் கோலான் மலைப்பகுதியிலும் பலவந்தமான குடியிருப்புக்களை உருவாக்கி, பாலஸ்தீனத்துக்குரிய அந்தப் பகுதியை ஆக்கிரமித்தனர். எனவே, இந்தப் பகுதி சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இஸ்ரேலின் எல்லைகள் அல்ல என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. அதனாலேயே அங்கு தயாரிக்கப்படும்பொருள்கள் தனியாக அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்று அது விரும்புகிறது.



இதன்மூலம்அந்தப்பொருள்களுக்கான கிராக்கி மேற்குலகச் சந்தையில் குறையும் என்கிறார்கள் பலஸ்தீன ஆதரவாளர்கள். இத்தகைய பொருளாதார நெருக்கடி, மேற்குக் கரையில் - மேலும் புதிய குடியிருப்புக்களை உருவாக்கும் இஸ்ரேலின் முன் முயற்சிகளுக்குக் கடிவாளம் இடுவதாக இருக்கக்கூடும் என்றும் அவர்கள் எதிர் பார்க்கிறார்கள்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 398

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | | 5 |
| 6 | | | 7 | | | 8 | |
| 9 | | 10 | | | 11 | | |
| | | | | 12 | | | |
| | 13 | | 14 | | | 15 | 16 |
| 17 | | | 18 | | 19 | | |
| 20 | | 21 | | | 22 | 23 | |
| 24 | | | | 25 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இவரது படுகொலையால் பரபரப்பு ஏற்பட்டது.
6. ஒரு குறியீடு
7. உயர வளரும் கிளைகளற்ற மரம்
8. மரம்
9. திருடன்
11. (சீர்) கெட்டது
12. உயிரின் மிகச் சிறிய அலகு
13. இவன் ஒரு மகாகவி
15. பூகோளம்
17. எல்லையில் இருப்பது
18. ஒரு வாசனைத் திரவியம்
20. (நல்ல) உபதேசம் செய்பவர்
22. எல்லா/அனைத்து
24. சிதம்பரம்
25. உலோக வேலை செய்பவர்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நாட்டிய வகை
2. ஒன்று சேர்ந்தமையால் வருவது
3. ஒரு மூலகம்
4. வீடு
5. ஒருவருக்கு இதை வழங்கிக் கௌரவிப்பர்
8. அடையாளம்
10. காடு
11. சில என்பதையும் தாண்டியது
12. பசு, மரை, மான், எருமை போன்றவற்றின் குட்டி
13. திண்மப் பொருள் திரவத்துள் ஒன்றிப் போதல்
14. தெரிவி
16. கதா நாயகனின் எதிரி
17. கண் தெரியாதவன்
19. கதவு இருப்பது இங்கே
21. இது அறுபத்தி நான்கு
23. ஒன்று சேர்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 396 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1)அனுமதி (4)தும்பு (6)கனவான் (7)சாகரம் (9)பசளி (11)மையம் (12) அம்மி (13)செடி (14)பாசி (16) அன்பன் (18) கடும் (19) கனிதல் (21) புயல் (22) காவியம்

### மேலிருந்து கீழ்

(1)அஞ்சாமை (2)மகரம் (3)தினம் (4)துன்பம் (5)புரளி (8)கயவன் (10)சமிபாடு (12)அடி (13)சென்னி (15) சிம்மம் (16) அம்பு (17)பகல் (18) கல்வி (20)தகா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 396 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
மங்களராஜேஸ்வரி பரமேஸ்வர ஐயர்
இல.270 (652) பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
கு.ஆன் சுஸ்மிதா,
காத்தான் குளம், நானாட்டான், மன்னார்.

**3 ஆம் பரிசு**
க.சரோஜினி,
கிந்துசிட்டி, புலோலி தெற்கு, புலோலி.

**4 ஆம் பரிசு**
அ.இந்துஜா
இல.364/8 சாந்தசோலை வீதி, தம்பனைச்சோலை, வவுனியா.

**5 ஆம் பரிசு**
சீ.கனிஸ்ரெலா,
இல.27, உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

ச.லக்ஷ்மிகரன்,
இல.13, அண்ணாநகர் பிரதான வீதி, வவுனியா.

சிவம் டர்சிகா,
இல. 10/2, நடுத்தெரு லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.

கா.சத்தியகுமார்,
வாமாஸ் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

சொற்சிலம்பம் போட்டி இல.398 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (23.12.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.398 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.12.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.


சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 396 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச.அருணா,
யா/ அராலி சரஸ்வதி மகா வித்தி.



சிவகுகன் பிருத்வி
வளர்மதி முன்பள்ளி கொக்குவில்.



ச.கார்த்திகன்
யா/ அராலி சரஸ்வதி முன்பள்ளி



செ.தீர்க்கஜன்,
தரம் 8 சி,
கனகரட்ணம் மத்திய மகா வித்தி.

## வரலாற்றில் இன்றைய தினம்

1758 - இங்கிலாந்தின் போக்குவரத்துக் கப்பலான டியூக் வில்லியம் வட அத்லாந்திக் கடலில் மூழ்கியது. 360 பேர் சாவு.

1944 - ஜப்பானின் கமிக்காஷ் அமெரிக்காவின் நிஷாவில் பொலிஸார் மீது மோதல். 138 பேர் சாவு.

1988 - பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் ஐ.நா. பொதுச் சபையில் உரை. ஜெனிவா சுவிற்சர்லாந்தில் உரையாற்றிய நிலையில் ஐ.நா. தலைமையகம் நியூயோர்க் அமெரிக்கா செல்ல அமெரிக்க அதிகாரிகள் நுழைவிசைவு அனுமதி மறுப்பு.

1993 - பொய்த் தகவல்களை வெளியிடும் பத்திரிகைகளுக்கு எதிராக நடவடிக்கையென அரசு அறிவிப்பு.

- காஸா பிரதேசத்திலிருந்து வெளியேற இஸ்ரேலுக்கான காலக்கெடு நிறைவு வெளியேறவில்லை.

- கார்ட்டுக்கான 2 லீற்றர் மண்ணெண்ணெய் மார்க்கோ கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளது.

- சுப்பர் சொனிக் விமானக் குண்டு வீச்சால் சேதமடைந்த குருநகர் ஜேம்ஸ் தேவாலயத்தின் தோற்றம் கொண்ட நத்தார் வாழ்த்து மடல் விற்பனையில்.

1996 - கோபி அனான் ஐ.நாடுகள் சபை செயலாளராகத் தேர்வு.

2001 - இந்திய நாடாளுமன்றத்திலுள்ள சன்சாட் பவன் கட்டடம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல். பயங்கரவாதிகள் உட்பட 12 பேர் சாவு.

2002 - பிரதமர் ரணிலின் சமாதான முயற்சிக்கு கருணாநிதி பாராட்டுக் கடிதம்

- அமைச்சர் ரவூப் ஹக்கீமே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என மேன் முறையீட்டு நீதிமன்றம் தெரிவிப்பு.

- யாழ்ப்பாணத்தில் ஊடக அடக்குமுறை உண்மைகளை வெளியிட்டால் ஆபத்து என நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு.

2003 - ஈராக் போர், சிவப்பு உதயம் நடவடிக்கையில் முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் திகிரிய நகரிலுள்ள அவரது வீட்டுக்கு அண்மையில் கைது.

2006 - இலங்கையில் மனித உரிமை மீறல் மிகவும் பாரதூரமான அளவில்; சர்வதேச மன்னிப்புச் சபை சாடுகிறது.

- மாற்று வலுவுள்ளோர் உரிமை மீதான சாசனம் பின்பற்றப்படல்.

2008 - முல்லைத்தீவு நகரை படைகள் அண்மித்துவிட்டதாக அரசு அறிவிப்பு.

2014 - தெல்லிப்பழையிலும் கழிவு ஒயில் தாக்கம் இன்று இனங்காணப்பட்டது.

- ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றால் எந்தத் தயக்கமுமின்றி அதிகாரத்தை ஒப்படைத்து விடுவேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கத்தோலிக்க திருச்சபைக்கு வாக்குறுதி.

- ஜாவா இந்தோனேஷியாவில் மண் சரிவு. 56 பேர் வரை உயிரிழப்பு.

## உன்னால் எதுவும் முடியும்

- நீ எதை நினைக்கிறாயோ நீ அதுவாகவே ஆகிறாய். நீ வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்!
- உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே!
- நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விசம்கூட சக்தியற்றது ஆகிவிடும்.
- பலமே வாழ்வு; பலவீனமே சாவு
- கீழ்ப்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.
- உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான், வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.
- அடிமைகளின் குணமாகிய பொறாமையை முதலில் அழித்துவிடு.
- மிருக பலத்தால் அன்றி ஆன்மிக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறமுடியும்.
- சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.
- நீ செய்த தவறுகளை வாழ்த்து. அவைகள், நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.
- அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டுவந்து தந்தே தீரும்.
- உங்களால் எவருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்.
- உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

*பு.சந்தோஸ், தரம் 2,*
*மல்லாகம் விசாலாட்சி வித்தி.*

## மனம் திரும்பிய பரஞ்சோதி

ஆர்.பிரேமா.

நாவல்நகர்என்னும் என்னும்ஊரிலே பரஞ்சோதி என்னும் கருமி ஒருவன் வசித்து வந்தான். அவனிடம் நிறையப் பணம் இருந்தது. ஏராளமான வயல் நிலங்கள், தோப்புக்கள் ஆகியனவும் அவனுக்குச் சொந்தமாக இருந்தன. அத்துடன் வர்த்தக நிலையங்கள் சிலவற்றையும் அவன் நடத்தி வந்தான். இவற்றின் மூலமாக ஆண்டுதோறும் பெரிய அளவில் அவனுக்கு வருமானம் கிடைத்து வந்தது. ஆனால் தனது செல்வத்தில் சிறிய பகுதியையாவது ஏழைகளுக்கு வழங்குவதற்கு அவன் ஒரு போதுமே முன் வருவதில்லை. வீட்டுச் செலவுகளில் கூட அவன் கருமித்தனமாகவே நடந்து கொள்வான். அன்றாடம் உணவு சமைப்பதற்குத் தேவையான பொருள்களை அவன் கண்காணித்துக் கொள்வான். ஒரு சோற்றுப் பருக்கை கூட அதிகமாகச் சமைக்கப் படுவதை அவன் விரும்பியதில்லை.


ஆனால் அவனது மனைவியான குணவதி கணவனுக்கு எதிர்மாறான குணத்தைக் கொண்டிருந்தாள். ஏழைகளுக்கு உதவ வேண்டுமென அவள் எப்போதுமே எண்ணிக் கொண்டிருப்பாள். கணவன் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து உதவி என்று கேட்டு வருபவர்களுக்கு அவள் உதவிகளைச்செய்வாள். சில வேளைகளில் தனக்கென வைத்திருந்த உணவைக் கூட பசி யென்று வருபவர்களுக்கு அவள் எடுத்துக் கொடுத்து விடுவாள். இதனால் சில நாள்களில் அவள் பட்டினியாக இருந்ததும் உண்டு. பரஞ்சோதி மேலும் மேலும் செல்வத்தைக் குவிப்பதிலேயே குறியாக இருந்தான். தன்னை மிஞ்சுவதற்கு அந்த ஊரிலே எவருமே இருக்கக் கூடாது என்ற எண்ணம் அவனிடம் குடி கொண்டிருந்தது.

ஒருநாள் சந்நியாசி ஒருவர் அவரின் வீட்டுக்கு வந்தார். அப்போது பரஞ்சோதியும் வீட்டில் இருந்தான். சந்நியாசி வந்தது அவனுக்குப் பிடிக்[illegible] இந்தச் சந்நியா[illegible] இருந்து கொள்வதற்காக வந்ததாக அவன் எண்ணினான். சந்நியாசியைக் கண்டதும் குணவதி ஓடோடிச் சென்று அவரை வரவேற்று ஆசனத்தில் அமரச்செய்தாள். சுவாமி தங்களுக்கு அருந்துவதற்கு நான் எதைக்கொண்டு வருவது எனப் பவ்வியமாக அந்தச் சந்நியாசியைப் பார்த்துக் கேட்டாள். ஆனால் அவர் தனக்கு எதுவும் வேண்டாமெனக் கூறி விட்டார். இதனால் குணவதி மிகுந்த மனக்கவலை அடைந்தாள். பின்னர் அந்தச் சந்நியாசியைப் பார்த்து "சுவாமி தாங்கள் ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்"? என்று கேட்டாள். சந்நியாசி அவளைப்பார்த்து, "மகளே! உனது கணவன் எவருக்குமே உதவாத கருமியாக இருக்கிறான். ஏழைகளுக்கு உதவாத அவனது செல்வம் பாவச் சொத்து என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தப் பாவம் அவனை மட்டுமல்ல உன்னையும் உனது குழந்தைகளையும் கூடப் பாதித்துவிடும் உனது கணவன் தொடர்ந்து இப்படியே இருந்தால் அவன் சேர்த்து வைத்த செல்வம் முழுவதும் விரைவிலேயே அழிந்து போய் விடும். இது உறுதி" எனக் கூறிவிட்டு அவர் திடீரென எழுந்து சென்றுவிட்டார்.



சந்நியாசி கூறியதையெல்லாம் பக்கத்து அறையில் அமர்ந்திருந்த பரஞ்சோதி கேட்டுக்கொண்டிருந்தான். அவனை ஒரு வித பயம் தொற்றிக்கொண்டு விட்டது. உடனே அவன் எழுந்து அந்தச் சந்நியாசி யாரைத் தேடிச் சென்றான். அவர் அந்த ஊரிலுள்ள ஆலயத்தின் மண்டபத்தில் தங்கியிருந்தது தெரிந்தது. பரஞ்சோதி சந்நியாசியின் காலைப் பற்றிக் கொண்டு அழத்தொடங்கினான். சுவாமி நான் அறியாமை காரணமாக இதுவரை தவறு செய்துவிட்டேன். இனி மேல் எனது செல்வத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு வழங்குவேன் எனக் கூறி அவன் அழுவதைக் கண்ட சந்நியாசியார் மகனே இதுவரை நீ செய்ததை மறந்து விடு. இனி மேல் மற்றவர்களுக்கு உதவு கின்ற நல்லவனாக வாழ்ந்து விடு அதுவே உன்னையும் உனது குடும்பத்தையும் உயர்த்திவிடும்." எனக் கூறி அவனை ஆசீர்வதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மச்சத்தை விரட்டுவது எப்படி

ஒரு சிலருக்கு மச்சங்கள் பிறப்பிலேயே இருக்கும். அதனை அதிர்ஷ்டம் என்று சொல்வர். சிலருக்கு தேவையில்லாமல் ஏகப்பட்ட இடங்களில் மச்சம் இருக்கும். அழகைக் கெடுக்கும் வகையில் கூட அவை இருக்கும். ஆனால் மச்சத்தை விரட்டுவது சாதாரண காரியமன்று. இருப்பினும் முறையான மருத்துவ நடைமுறைகளைப் பின்பற்றினால் மச்சத்தையும் கூட அகற்ற முடியும்.

நமது தோலில் உள்ள மெலனோசைட் எனப்படும் நிறச் செல்கள் ஓர் இடத்தில் அதிகமாகச் சுரந்தால் வருவது தான் மச்சம். அதே சமயம், அதிக அளவில் சேர்ந்தால் அதாவது மச்சம் வளர்வது போலத் தெரிந்தால் அதை உடனே கவனிக்க வேண்டும். காரணம் அது தோல் புற்றுநோயாக இருக்கலாம். இத்தகைய மச்சங்களை எளிமையான வீட்டுப் பொருள்களைப் பயன்படுத்தி ஈஸியாக நீக்கலாம்.

1. கொத்தமல்லி இலையை நன்கு அரைத்து, அதில் சிறிது தண்ணீர் ஊற்றி, பேஸ்ட் போல் செய்து, மச்சம் உள்ள இடத்தில் தடவி அரை மணி நேரம் ஊற வைத்து, பின்பு கழுவலாம். இதனைத் தினமும் செய்து வந்தால் ஒரு நல்ல பயன் கிடைக்கும்.

2. பூண்டு மற்றும் கராம்பைச் சற்று அரைத்து மச்சம் உள்ள இடத்தில் வைத்து 30 நிமிடம் கட்டி விட வேண்டும். இவ்வாறு தினமும் செய்தால் மச்சமானது மறையலாம்.

3. வெள்ளை எருக்குச் செடியின் சாற்றை மச்சம் இருக்கும் இடத்தில், இரவில் படுக்கும் முன் பூச வேண்டும். பின் காலையில் எழுந்து அதனை மறக்காமல் கழுவ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் பருக்களானது நாளடைவில் மறையும்.


4. பேக்கிங் சோடாவுடன் சிறிது ஆமணக்கெண்ணெயை ஊற்றி பேஸ்ட் போல் செய்து, படுக்கும் போது தடவி, காலையில் கழுவ வேண்டும்.

5. மச்சம் உள்ள இடத்தில் ஆமணக்கெண்ணெயை வைத்து தினமும் இரண்டு முறை மசாஜ் செய்ய வேண்டும்.

இதனால் மச்சமானது மென்மையடைந்து, சருமத்தில் இருந்து போய்விடும். மேலும் இது அரிப்பையும் தடுக்கும்.

6. முருங்கையின் சதைப்பகுதியை எடுத்து அத்துடன் சிறிது எலுமிச்சை சாற்றை விட்டு பேஸ்ட் செய்து, மச்சத்தின் மீது தடவ வேண்டும். முக்கியமாக அந்தக் கலவையைத் தேய்க்கக் கூடாது.

7. மச்சத்தை வெதுவெதுப்பான நீரில் நன்கு கழுவ வேண்டும். பிறகு அப்பிள் சாற்றைக் காட்டன் கொண்டு பூச வேண்டும். பிறகு அதனைக் காய வைத்து, குளிர்ந்த நீரில் கழுவி வந்தால், மச்சம் காணாமல் போய்விடும்.



# வெங்காயத்தாள் பச்சடி

**தேவையான பொருள்கள்:**

வெங்காயத்தாள் (பொடியாக நறுக்கியது) - அரை கப்
தயிர் - 1 கப்
இஞ்சி - சிறிது
சாலட் கீரை - 1 கொத்து
தக்காளி சோஸ் - அரை கப்
பச்சை மிளகாய் - 3
உப்பு - தேவையான அளவு

செய்முறை:

வெங்காயத்தாள், சாலட் கீரை,பச்சை மிளகாய் ஆகியவற்றை கழுவி நீரை உலர்த்தி விட்டு பொடியாக நறுக்கவும். இஞ்சியைத் தட்டி வைத்துக் கொள்ளவும். தயிரைக் கடைந்து உப்பு சேர்த்து, தக்காளி சாஸ், கீரைகள், பச்சை மிளகாய் மற்றும் தட்டி வைத்த இஞ்சியை போட்டு நன்கு கலக்கவும். சுவையான வெங்காயத்தாள் பச்சடி தயார்.

# கூந்தல் நன்கு வளர



கூந்தல வளர வேண்டும், அழகாக இருக்க வேண்டும் என்று நினைத்தால் மட்டும் போதாது, அதனைச் சரியான முறையில் பராமரிக்க வேண்டும். அதிலும் இன்றைய காலத்தில் நிறையப் பேருக்கு எப்போது, எந்த நேரத்தில் கூந்தலை வெட்ட வேண்டும் என்று தெரியவில்லை. ஆகவே கூந்தலை வெட்ட வேண்டும் என்று நினைப்பவர்கள் கூந்தலின் வளர்ச்சி மற்றும் தற்போது கூந்தலானது எப்படி உள்ளது என்பதை நன்கு அறிந்து வெட்ட வேண்டும். மேலும் அவ்வப்போதும் கூந்தலை வெட்ட வேண்டும். அப்போது தான் கூந்தலும் நன்கு வளர்ச்சி அடையும். அதிலும் கூந்தலை வெட்டுவதற்கு முன்னால் கூந்தலின் நிலையை அறிந்து சரியான நேரத்தில் வெட்ட வேண்டும். எப்போது கூந்தலானது அதிகம் உதிர்ந்து, அடர்த்தி குறைந்து காணப்படுகிறதோ, அப்போது கூந்தல் வளர நிறைய கூந்தலை வளர்க்கும் சிகிச்சை முறைகளை பின்பற்ற வேண்டும். அதே சமயம் கூந்தலை வெட்டினாலும் கூந்தலானது வளர உதவும். ஏனெனில் கூந்தலின் முனைகள் ஆரோக்கியமற்று இருப்பதாலே கூந்தலானது உதிர்ந்து அடர்த்தி குறைந்து காணப்படுகிறது.

கூந்தலானது அழகான வடிவம் இல்லாத போது கூந்தலை வெட்டலாம். ஏனெனில் கூந்தலை அழகு நிலையங்களுக்குச் சென்று கடந்த மாதம் வெட்டியிருப்போம். ஆனால் இப்போது அந்த வெட்டிய முடிகளானது ஒழுங்கற்று வளர்ந்திருக்கும். அவ்வாறு வெட்டிய முடிகள் அனைத்தும் எப்போதும் ஒரே அளவில் வளராது. ஆகவே கூந்தலானது அழகாக இருக்க கூந்தலை வெட்ட வேண்டும். ஆகவே கூந்தலை கண்டிப்பாக குறைந்தது 45 நாட்களுக்கு ஒரு முறையாவது வெட்ட வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைச் சாப்பாடு



ஜோ.ஜெஸ்ரின்

> கடைச்சாப்பாடு எண்டு கட்டுறம் காசுதானே வீணாகுது. வீட்டில சமைச்சா எவ்வளவு பணம் மிச்சம் ஆகும். நான் வீட்டில மச்சத்தை காச்ச வேண்டாம் எண்டு றூல்ஸ் போட்ட தால தான் இவ்வளவு நாசமும் என்ன நாச மறுப்போ போகட்டும்! சிவலிங்கம் இஞ்ச வாடாப்பா... இனி நான் உங்களுக் குத் தடையா இருக்கேல்ல மேனே? என்ர கிழக்கு வாசல் வீட்டில நீங்கள் இனி மச் சம் ம ாமிசம் எதுவெண்டாலும் உங்கட விருப்பம் போல சமைச்சு சாப்பிடுங்கோ...

இஞ்சாருங்கோ இண்டைக்கு கடையில பாசலைக்கட்டி சாப்பிடுங்கோ என்னால முடியல இன்று... ஏனப்பா இப்படித்தானே தினமும் சொல்லுறீர்! ஒவ்வொரு நாளும் கடையில சாப்பிடுங்கோ என்று சொன்னா என்ன குறைஞ்சே போயிடுவியள்... இல்லயப்பா நீங்கள் கடையில சாப்பிட்டால்தானே எனக்கும் பிள்ளைகளுக்கும் சாப்பாடு கட்டிக்கொண்டு வருவியள்; ரீ.வி. நாடகங்கள் யாவும் மிஸ் பண்ணாமல் பார்க்க வசதியா இருக்குது.

ஓமப்பா உழைக்கிற காசெல்லாம் கடைச் சாப்பாட்டுக்கும் வைத்தியருக்கும் கரண்டு பில்லுக்கும்தான் வேற என்னத்தை மிச்சம் பிடிக்கிறது. இப்படி சிவலிங்கமும் மகேசரும் உரையாடிக் கொண்டிருக்கும்போது சந்தைக்குப் போன சுப்பையா மாமா மரக்கறியோட வாறார்....

என்ன சுப்பையா மாமா இண்டைக்கும் மரக்கறியோட வாறியள் மீன்கீன் கிடைக்கேல்லேயோ... மகேஸ் கேட்டார்.

இண்டைக்கு மரக்கறி மலிவுள்ள கையில காசிருக்கேக்க கூடவா வாங்கி பிறிச்சில வைக்கலாமல்லே எண்டுதான் வாங்கினான். அங்கால பால்சுறா வித்தவங்கள் வாங்குவம் எண்டு போனன் பிடிபட்டு ஆறு ஏழு நாளான சுறாமீனுக்கு திருக்கை இரத்தம் பூசிப்போட்டு விக்கினம். அதுதான் நான் மீன் ஒண்டும் வாங்கேல்லப்புள்ளை சுகாதாரப் பகுதியினரும் அதுக்கால இதுக்கால திரிஞ்சவை அவயின்ர கண்ணுக்கு இது தெரியேல்லப்போல கிடக்கு.

... அப்ப நீங்கள் புறொய்லரை வாங்கி வந்திருக்கலாமே.... உமக்கப்பா மச்சம்தான் வேணுமே முப்பத்தைந்துநாளிலமாசையும்தண்ணியையும் போட்டு தயாரிச்ச மாமிசம்தான் வேணும் எண்டு எல்லாரும் மூண்டியடிக்கினம்.

சும்மா இருங்கோப்பா பைத்தங்காயை திண்டு திண்டு கால் கை எல்லாம் இழுத்தமாதிரிக் கிடக்கு நீங்கள் எல்லாத்துக்கும் நூதனம் பாக்கிறியள்... மகேஸ் நீர் ஒன்றை மறந்திட்டீரே அண்டைக்கு பேரீச்சம்பழம் வேண்டிவரச் சொன்னீர்! நானும் ஆஸ்பத்திரி ரோட்டில இருக்கிற பலசரக்குக் கடையில வாங்கிக் கொண்டுவந்து தந்தன். அதுக்குள்ள நிறையப் புழு டான்ஸ் ஆடுறதை நீர்தானே காட்டித்தந்தனீர்.

நீங்கள் பாமசிப்பக்கம் ஏன் போனனீங்கள்? ஓமப்பா ஒரு கடையில நோயிருக்குது. பக்கத்துக் கடையில மருந்திருக்குது. என்ர வீட்டுக் காசெல்லாம்செலவழிஞ்சதுதான்மிச்சம். சரி சரி இண்டைக்கு வெள்ளிக்கிழமைதானே..... வாங்கின மரக்கறியை காய்ச்சும் இரவுக்கு கொத்துறொட்டியைக் கட்டுவம். சுப்பையா மாமாவுக்கு கடும் கோபம் வந்திட்டுது கண்டியளே? எடிபுள்ள மகேசு இண்டைக்கு ஒருநாள் எண்டாலும் மச்சம் சாப்பிடாமல் இருக்க மாட்டியளே... கத்தினார்... சிவலிங்கம் கலப்புத்திருமணம் செய்த நாளில இருந்து மகேசுக்கு மசிஞ்சு போனார்.

வீட்டில பாருங்கோ மச்சம் காச்ச சுப்பையா மாமா தடை போடுற தாலதான் சிவலிங்கம் கடைச் சாப்பாடு கட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டார். எங்கட ஊரில நிறைய உடுப்புக்கடையும் சாப்பாட்டுக் கடையும்தான் இருக்குது வீடுகளெல்லாம் கிட்டத்தட்ட லொட்ஜ் மாதிரி மாறீட்டுது.

அடிப்படை வசதிகள் யாவும் இப்ப நகர்வுக் கலாசாரத்துக்கு மூழ்கி நாவுக்கு ருசி உடம்புக்கு குசி... எண்டு மாறிப்போச்சு. முந்தி எண்டா என்ர மனுசி மெசினில உடுப்புத்தைக்கும் மூன்று நேரமும் சாப்பாடு செய்யும், இந்த எழுபத்தெட்டு வயசிலயும் நான் திடமா இருக்கிறன் எண்டா வீட்டுச்சாப்பாடுதான் என்று கூறிக்கொண்டு சுருட்டைப் பற்றவைத்தார் சுப்பையா.

முகில் கூட்டமாய் சுருட்டுப் புகைகள் வானை நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருந்தது...

கடைச்சாப்பாடு எண்டு கட்டுறம் காசுதானே வீணாகுது. வீட்டில சமைச்சா எவ்வளவு பணம் மிச்சம் ஆகும். நான் வீட்டில மச்சத்தை காச்ச வேண்டாம் எண்டு றூல்ஸ் போட்டதாலதான் இவ்வளவு நாசமும் என்ன நாசமறுப்போ போகட்டும்; சிவலிங்கம் இஞ்ச வாடாப்பா... இனி நான் உங்களுக்குத்தடையா இருக்கேல்லமேனே? என்ர கிழக்கு வாசல் வீட்டில நீங்கள் இனி மச்சம் மாமிசம் எதுவெண்டாலும் உங்கட விருப்பம் போல சமைச்சு சாப்பிடுங்கோ... நான் விழுகிற கட்டையாயிட்டன் விலத்திக் கொள்ளுகிறன். மரக்கறிச் சாப்பாட்ட நான் இனி கடையில சாப்பிடுறன். நீங்கள் வீட்டில விரும்பியபடி சமைச்சு சாப்பிடுங்கோ... கடைச்சுகாதாரம் என்பது கேள்விக் குறியானதுதான் அதையார் மேற்பார்வை செய்தாலும் இலாபநோக்கம் இருக்கும்போது பொரித்த எண்ணெயை மீண்டும் பொரிக்க பயன்படுத்துவினம் பழைய உணவுகளை குளிர்சாதனப் பெட்டியில் வைச்சு சுடவச்சு கொடுப்பினம். வயிற்றோட்டம் மயக்கம் வரும்போதுதான் முளிப்பம்.

பிறகு வைத்தியரிடம் போனா... காசை கொடுத்து சாப்பாட்டை வாங்கி அதால ஆரோக்கியத்தைக் கெடுத்து வைத்தியருக்கும் காசை கொட்ட வேண்டிக்கிடக்கு. நானும் தெனாவெட்டில சொல்லிப் போட்டன் கண்டியளோ... மரக்கறிச் சாப்பாட்டைக் கடையில வேண்டிச் சாப்பிடுறன் எண்டு.... என்ர மனுசி உயிரோட இருந்தா என்னை இப்படி யோசிக்க விட்டிருப்பாளே... அறுபத்தெட்டு வயசில அவள் போய்ட்டாள். பத்து வருசமா சிவலிங்கத்துக்கு கஷ்டத்தைக் கொடுத்திட்டன். இனி எண்டாலும் ஒதுங்குவம் எனக்கென்ன பென்சன் வருகுது தானே... என்று புலம்பியபடி சுப்பையா மாமா சைக்கிளை எடுத்து உருட்டிக் கொண்டு நடந்தார்....

இண்டைக்கு வீட்டில சமையல் நடக்குது சமையல் எண்டா தடல்புடல்தான். வெள்ளிக்கிழமை எண்டும் பார்க்காம புறொயிலர் வந்து கறிச்சட்டிக்க கொதிச்சுக் கொண்டிருக்குது.. தேசிப் புளியை விட்டிட்டு ஒரு சொட்டுக் குழம்பை வாயில வைத்துப் பார்க்கின்றாள் மகேஸ்! கடைச் சாப்பாட்டில் ஒருநாள்கூட இந்த ருசியை அவள் அறிந்ததில்லை. வீட்டில மச்சம் சமைக்க இந்த மனுசன் விட்டிருந்தால் நாங்கள் முன்னேறியிருப்பம் கொஞ்சமெண்டாலும் என்ன நிறைய மிச்சம் பிடிச்சிருக்கலாம் எண்டு தனக்குள் நினைவலைகளை ஓடவிட்டு மதியச் சாப்பாட்டை தயார் செய்தாள்..

மகேஸ்மனதில் இன்று ஒரு சுதந்திர தினமாகவே நினைப்பு. மகிழ்ச்சியும் அரைமணி



நேரத்தில் தலைகீழானது சந்திரலேகா நாடகம் இடைவேளை என்று எழுந்தவளால் மேலும் எழுந்திருக்க முடியாமல் மயக்கம் போட்டு விழுந்தாள். சிவலிங்கம் அதிர்ந்து போனார்... "அம்புலன்சுக்கு அவசர அழைப்பு" மகேசை சிவலிங்கம்வைத்தியசாலைக்கு கொண்டுபோய் சேர்த்தார்.

சுப்பையா பாமாவுக்கு நடந்தது ஒன்றும் தெரியாது. கடையில மரக்கறிப் பாசல வாங்கிக் கொண்டுவந்து முன் விறாந்தையில் அமர்கின்றார். குசினிக்குள் இருந்து வரும் கறிக்குழம்பு வாசத்துடன் கடைச்சாப்பாடு ஒரு வகையில் மெல்லக்கொல்லும் விசமாகலாம் என்பது தெரிந்தும், அதை குழைத்து சாப்பிடத் தொடங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொபிடெல்லின் வெற்றியாளர்கள்



தேசிய மொபைல் தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்கும் மொபிடெல், ஒவ்வொரு நிமிடத்துக்கும் வெற்றியாளர் ஒருவரை உருவாக்கும்வகையில் முன்னெடுத்திருந்த 'காஸ் பொனான்ஸா' பரிசிழுப்புத் திட்டத்தில், ஜுன் மாதத்துக்கான வெற்றியாளர்கள் தெரிவின் மூலம் மொத்தமாக 43 ஆயிரத்து 248 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், இவர்களிடையே 220 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை பரிசாக வழங்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு 50 ரூபா பெறுமதியான ரீலோட், ரீசார்ஜ் அல்லது கட்டணப் பட்டியல் செலுத்தும் சகல வாடிக்கையாளர்களுக்கும் கவர்ச்சிகரமான அனுகூலங்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் '2015 காஸ் பொனான்ஸா' வெற்றியாளர் தெரிவு மூலமாக, மொபிடெல் வாடிக்கையாளர்கள் 5லட்சத்து 26 ஆயிரத்து 149 பேருக்கு அனுகூலங்கள் பெற்றுக் கொடுப்பதற்கு மொபிடெல் எதிர்பார்த்துள்ளதுடன், 'ஒவ்வொரு நிமிடத்துக்கும்', 'நாளாந்தம்', 'வாராந்தம்', 'மாதாந்தம்' வெற்றியாளர்களை தெரிவு செய்யவுள்ளது. வருடத்தில் நான்கு காலாண்டு வெற்றியாளர் தெரிவையும் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இரண்டாம் காலாண்டு நிறைவுடன் 25 லட்சம் ரூபா பரிசுக்கான வெற்றியாளர் தெரிவாகியிருந்தமை விசேட அம்சமாகும். இப் பணப் பரிசுக்குரிய வெற்றியாளர், மொபிடெல் பிற் கொடுப்பனவு வாடிக்கையாளரும், பண்டாரவளை பிரதேச வாசியுமான கோனார முதியன்சலாகே ருவன் சத்துரங்க என்பவர் ஆவார். (த)

> மொபிடெல் வாடிக்கையாளர்கள் 5லட்சத்து 26ஆயிரத்து 149 பேருக்கு அனுகூலங்கள் பெற்றுக் கொடுப்ப தற்கு மொபிடெல் எதிர் பார்த்துள்ளதுடன், 'ஒவ்வொரு நிமிடத்துக்கும்', 'நாளாந்தம்', 'வாராந்தம்', 'மாதாந்தம்' வெற்றியாளர் களை தெரிவு செய்யவுள்ளது.

# சொத்துக்களை வாங்க, விற்க ஏற்ற இணையவசதி உங்களுக்கு

நாம் இலங்கையில் கட்டடங்கள் மற்றும் காணிகள் போன்ற சொத்துகளை விற்பதற்கும், வாங்குவதற்கும், வாடகைக்கு விடவும், வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்குமான இணையத்தை மையப்படுத்திய சொத்துடைமைத்துறையாகும்.

உங்களின் வரவு–செலவு திட்டங்களுக்கமைய அல்லது சொத்துகளின் பெறுமதிக்கு அமைய, சொத்துகளை வாங்கவோ, விற்கவோ அல்லது வாடகைக்கு விடவோ, வாடகைக்கு பெற்றுக்கொள்ளவோ எமது இணையத்தளமான www.homegate.lk எப்பொழுதும் உங்களுக்காகத் தன் கதவுகளைத் திறந்திருக்கும்.

உங்களுக்கு வேண்டிய அல்லது நீங்கள் தேடுகின்ற சொத்துகளுக்கான எண்ணற்ற முடிவுகளை உங்கள் இணையத்தளம் www.homegate.lk கொண்டு வந்து சேர்க்கும். அதுபோலவே விற்பதற்காக அல்லது வாட கைக்கு விடுவதற்காக தங்களால் பதிவு செய்யப்படுகின்ற சொத்து களின் விவரங்களை உலகளா விய ரீதியில், எண்ணற்ற வாடிக்கையாளர்களிடம் உங்கள் இணையத்தளம் கொண்டு போய்ச் சேர்க்கும். இதன் மூலம் சொத்துகள் பற்றிய தங்களின் கேள்விகளுக்கு எண்ணற்ற விடைகளையும், சொத்துகள் தொடர்பான தங் களின் விளம்பரங்களுக்கு, எண் ணற்ற கேள்விகளையும் ஏற்படுத்தி தருகின்றோம்.

அதனால் தான் 'உங்கள் தேடல் எம்மிடம் என்கின்றோம்'.

ரட்ணம்சன்ஸ் பாட்னர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தால், 2015 ஆம் ஆண்டின் இறுதியில் சேவைக்கு கொண்டு வரப்பட்டது www.homegate.lk இணையத் தளமாகும். இலங்கை முழுவதும் நாடு தழுவிய ரீதியில் சொத்துகளை வாங்குவதும், விற்பதும், வாடகைக்கு விடுவதும், வாடகைக்கு பெறுவதும் என்பவை மக்களின் பெருந்தேவைகளாக உள்ளன. ஆனாலும் குறிப்பிட்ட வீதமான மக்களே தங்கள் தேவைகளை நிரப்பீடு செய்து கொண்டு திருப்தியடைகிறார்கள். ஏனையவர்கள் தங்கள் தேவைகளுடனும், கேள்விகளுடனும் பின்னடைகின்றார்கள். இவர்களுக்கிடையில் ஒரு பாலமாக செயற்பட, நவீன தொழில்நுட்ப நேர்த்தியுடன் கூடிய ஓர் இணையத்தளமாக உருவாக்கப்பட்டதே இந்த இணையத்தளமாகும்.

இதன் மூலம் நாடெங்கிலுமுள்ள விற்பனைக்கென, மற்றும் வாடகைக்கென உள்ள சொத்து விவரங்களை அவற்றை தேடுகின்ற வாடிக்கையாளர்களுடன் இணைத்து வைக்கின்றது www.homegate.lk இலட்சக்கணக்கான மக்களின் கனவுகளையும் தேவைகளையும் உணர்ந்துள்ளமையால், தற்கால அதியுயர் தொழிநுட்பம் மற்றும் சேவைகளை வழங்குவதன்மூலம், இலங்கையில்சொத்துகள் துறை(www.homegate.lk) ல், உங்கள் பங்களிப்புடன் புதிய மலர்ச்சியை ஏற்படுத்துவதே எமது உயரிய கனவாகும். (த)




டாட்டா, லேலண்ட், ஹினோ மற்றும் கமின்ஸ் வாகன உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க என்ஜின் பழுதுபார்ப்பிற்காக வழங்கப்பட்ட

எமது சலுகைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது!

எமது அதிகபட்ச வேலைக் கூலி

| | |
|---|---|
| TATA | 44,000/- |
| LEYLAND | 47,000/- |
| Hino | 46,000/- |
| C | 52,000/- |

நாட்டிலேயே அதிகுறைந்த வேலைக் கூலி

மேற்குறிப்பிட்ட பழுதுபார்ப்பு மீண்டும் தேவைப்பட்டால் அல்லது ஓட்டத்தின்போது தேய்வு காரணமாக என்ஜினை கழற்ற நேர்ந்தால் 2 ஆண்டு காலத்தினுள் வேலைக் கூலி மீண்டும் அறவிடப்படமாட்டாது.

எதிரிசிங்க பிறதர்ஸ் லிமிட்டட்
077 66 33 370

# கேம்பிரிட்ஜ் பரீட்சைகளில் இலங்கை மாணவர் இருவருக்கு உயர் பெறுபேறு



கேம்பிரிட்ஜ் சர்வதேச பரீட்சைகள், இலங்கையில் மிகச் சிறந்த கேம்பிரிட்ஜ் பயிலுநர் விருதுகளின் வெற்றியாளர் விவரங்களை அண்மையில் அறிவித்துள்ளது. 2014 நவம்பர் மற்றும் 2015 ஜுன் கற்கை பருவகால கேம்பிரிட்ஜ் தொடர் பரீட்சைகளில் இலங்கையில் இடைநிலைப் பாடசாலைப் பயிலுநர்கள் மத்தியில் மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகளைக் கொண்டாடும் வகையில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

கேம்பிரிட்ஜ் சர்வதேச பரீட்சைகளுக்கான சர்வதேச வலையமைப்பின் பிரதிப் பணிப்பாளரான கை சாப்மன் மற்றும் இலங்கையில் பிரிட்டிஷ் கவுன்சில் நிலையத்தின் உள்நாட்டு பணிப்பாளரான கீத் டேவிஸ் மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச பரீட்சைகளின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்து, கடந்த 28 ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கைக்கான பாடசாலைகள் அபிவிருத்தி முகாமையாளரான பஞ்சலிகா குலதுங்க மாணவர்கள் பல்கலைக்கழகங் களில் திறமையாகச் செயற்படுவதற்கு அவர்களைத் தயார்படுத்தும் வகையில் மாணவர்களின் ஆக்கத்திறன், திறனாய்வுச் சிந்தனை மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்திறன் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து மதிப்பீடு செய்வதற்கு கேம்பிரிட்ஜ் கற்கை நெறிகள் உதவுவதாகக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் சி. யமுனாநந்தா

# இடர் காவுகொண்ட சமூக உளம்

அழிவுக்குப் பின்பான சூழலில் வாழ்வதற்கு இடையூறாக போசாக்கு இன்மை, காயம், நோய் பரவல் என்பவை காணப்படும். இதனை மீளக்கட்டி எழுப்புவதற்கு காலம் தேவைப்படும். மீளக்கட்டி எழுப்பல் முழுமையான தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

உளப்பிரச்சினைகளின் அளவு பெரியது. பொருள்களினதும், சேவைகளினதும் உதவியைவிட, பாதிக்கப்பட்டவர்களுக்கு மனித இடையறுப்பும் தேவை ஆகும். மீட்சி, புனர்வாழ்வு, உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் முக்கியமானவை. அழிவின் சந்தர்ப்பம், அழிவின் வெளிப்பாடு, உணர்வுகளைக் குறைக்கும் முறைகளை ஆராய்தல் வேண்டும்.

1. உணர்வுகள் ஊடான ஆதரவு.
2. இடரினால் பாதிக்கப்பட்ட அனைவரும் இதனை உணர்வர்.

இடரானது, உயிரிழப்பு, சொத்துக்கள் இழப்பு, சூழல் அழிப்பு என்பவற்றை ஏற்படுத்தியது. இதனால் கழிவிரக்கம், துன்பம், கவலை, பதகளிப்பு, கோபம் என்பவை பொதுவாக ஏற்படும். அவர்களின் இத்தகைய மாற்றங்கள் சாதாரணமானவையே எனக் கூறல் வேண்டும். விளங்கக் கூடியதாக உள்ளது எனக் கூறல் வேண்டும்.

சமூகநிலை உதவியாளர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு பொதுவான இடருக்குப் பின்னான மன அழுத்த வெளிப்பாடுகள் மற்றும் உள, அழுத்தங்களை எதிர்கொள்ளல், தேவைகளைப் பெறக் கூடிய வளங்களைப் பற்றிக் கூறல் வேண்டும். இடர்கள் 2 வகையாக ஏற்படும்.

1. தனிமனிதத் தாக்கம்
2. சமூக அல்லது கூட்டான தாக்கம்

### தனிமனித தாக்கங்கள்

மன அழுத்தங்களாகவும் துன்ப வெளிப்பாடுகளாகவும் இருக்கலாம்.

### சமூக தாக்கங்கள்

சமூக பந்தத்தைத் தகர்க்கும்.

இவையே உளவியல் ஆதாரமாக அமைய வேண்டியவை. சாதாரணமான உண்மையான நண்பனை ஆபத்தில் அறி என்பர். ஆனால் சமூகத்தில் இயற்கையான தாங்கல் அற்றுப் போவதால், சமூக ஆதரவுக் குழுக்கள் அமைக்கப்படல் வேண்டும். சமூக நிறுவனங்கள் அமைக்கப்படல் வேண்டும். தனி மனிதர்களுக்கும், குழுக்களுக்கும் தொடர்புகள் உள்ள




டக்கப்படல் வேண்டும்.

பெரும்பாலானவர்கள் ஆரம்பத்தில் ஒன்றாக இணைந்து செயற்படுவர். ஆனால் பின்னர் அவர்களது செயற்பாடு குறைந்துவிடும். இடரில் முகம் கொடுத்தவர் அழுத்தங்களை எதிர்கொள்வர்.

ஆரம்பத்தில் அதிக சக்தி இருக்கும் / நல்லனவே நடக்கும் என்ற எண்ணம் / சமூகப் பற்று இருக்கும். குறைந்த செயற்றிறன் உடன் அதிகளவு செயற்பாடு காணப்படும்.

இழப்பின் உண்மைத் தன்மையை உணர, விரக்தியும், பிரமையும் ஏற்படும். இதனால் பல அழுத்த அறிகுறிகள் தென்படும். இது அவர்களின் தீர்மானம் எடுக்கும் தன்மையைக் குறைக்கும். மீட்கவும், மீளக்கட்டமைப்புக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இடரினால் அழுதலும், கவலைப்படலும் அசாதாரண சூழலில் ஏற்படும் சாதாரண வெளிப்பாடாகும். மனஅழுத்த வெளிப்பாடுகளும், கவலை வெளிப்பாடுகளும் இடருக்குப் பின் பொதுவாகக் காணப்படும். இந்த இடரை அனுபவித்த அனைவருக்கும் இந்தத் தாக்கம் ஏறக்குறைய ஏற்பட்டு இருக்கும்.



மன அழுத்தத்தில் இருந்து விடுபடல் வேண்டும். அனுபவங்களைக் கூறல் வேண்டும். இதற்குக் காலம் தேவை. பொதுமக்களுக்குச் சாதாரண வெளிப்பாடுகள் பற்றிக் கூறுவதும், அவற்றை எவ்வாறு கையாளுவது என்று கூறுவதும் அழுத்தங்களில் இருந்து விரைவில் விடுபட உதவும். இதனால் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

அனேகமான உணர்வுபூர்வமான வெளிப்பாடுகள், இடரினால் ஏற்பட்ட வாழ்வதற்கான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இடர் அன்றாட வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் பாதித்தது. வீடு, உணவு, உடை அந்தந்த நேரத்துக்கு ஏற்ற, சரியான உதவிகள் அத்தியாவசியமானதாகும். இடர் உளநல சமுதாயத்தின் எல்லா மட்டத்துக்கும் இவை சமமாகச் செல்ல வேண்டும். வயது, பால், இனம், மதம், கலாசாரம் என்பவற்றிலும் மொழிக்கு ஏற்பவும் அமைய வேண்டும்.

உள்ளூர் மக்களில் இருந்து சமூக உளநலக் காப்பாளர் அமைவது சிறந்தது. பாதிக்கப்பட்டவர்கள் அக்கறை காட்டுவர்.

உணர்வுகளை வெளிப்படுத்த, அனுபவங்களைக் கூற, எண்ணங்களைக் கூற, முறையாக அணுக வேண்டும். அவர்களின் தனித்தன்மைக்குள் செல்லக் கூடாது. இடை உதவிகள் வேறுபட்ட நிலையில் உதவிகள் ஆரம்பத்தில் கேட்டல்.

ஆதரவு வழங்கல்
வெளிக்கொணரல்
அழவிட்டு உணர்வுகளை அகற்றல்
கழிவிரக்கம் அகற்றல்
இறுதியில் விரக்தி நிலையைக் கையாள்வர்
கோபத்தைத் தணித்தல்
மாயத்தன்மையைத் தீர்த்தல்

ஆதரவு அமைப்புக்கள் மீள்வதற்கான சூழல் அவசியம். தனிமனிதருக்கு அதி முக்கிய மான ஆதரவு குடும்பத்தில் இருந்து கிடைக்க வேண்டும். சமூக உளநலமேம்பாளர், குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றாக இருக்க உதவ வேண்டும். ஒரு குடும்ப அங்கத்தவர் பற்றை மீள்வதற்கு உதவுவர். அநாதை ஆனவர்களுக்கு, அயலவர்கள் அல்லது தெரிந்தவர்களின் ஆதரவு அவசியம்.

### இடரின் விளைவுகள்

ஆழ்ந்த வடுவை ஏற்படுத்தி உள்ளது.

1. உடல் ரீதியில்
காயம்
முறிவு
நோய்கள்

2.உளவியல் ரீதியில்
அதிர்ச்சி
பீதி
பயம்
பதகளிப்பு
கவலை / துன்பம் / இழப்பு
குற்ற உணர்வு
மீள் நினைவுக்கு
அழுதல்
மனச்சோர்வு
சட்ட உதவி பெறுவதில் கஷ்டம்

3.சமூக ரீதியில்
வீடின்மை
துணையை இழத்தல்
சடுதியான இடப்பெயர்வு
கொட்டகைகளில் வாழும் பிரச்சினைகள்
பிரத்தியேக தனிமை இன்மை
தனித்தாய் / தந்தை உள்ள குடும்ப
அநாதைகள்
ஊழல்
உள்ளூர் தலைவர்கள் இன்மை
உள்ளூர் தலைவர்களிடம் இருந்து கிடைக்கும் உதவி இன்மை.
இளமைத் திருமணம்
புலம்பெயர்வு
கல்வியை இடைநடுவில் கைவிடல்
வீட்டுக்குள் இருந்த பெண்கள் வெளிக்கு வரல்
பொருளாதார ரீதியில் வாழ்க்கைப் பொருள்கள் இழப்பு
சொத்துக்கள் இழப்பு
வேலை வாய்ப்பின்மை
மீளப் பொருள்களைச் சேகரிக்க, நட்டஈடு பெறுவதில் உள்ள காலதாமதச் சிக்கல்கள் என்பவற்றுக்கு சமூக உள ஆதரவு தேவைப்படுகின்றது.

இடரின் பின்பான வெவ்வேறு நிலைகளும் இடைநிலைகளும் வேறுபடும். மீட்பு நிலையில் தற்காலிகக் கொட்டகை / உணவு / உடைகள் / சுகாதார வசதி / நீர் வசதி

சமூக உள ஆதரவு இழப்புக்கும் சேதத்துக்கும், அடிப்படை உரிமைகள், நட்டஈடு, அரசு திட்டம், வீடுகளை மீளமைத்தல். இடருக்கு முன்னான நிலைக்கு வசதிகளைக் கொண்டுவருதல். மீளவும் சமூக மட்டத்திலான உதவிகள், என்பவை அடையாளப்படுத்தாமல் செய்யப்படல் வேண்டும். சட்ட உதவிகள் உறுதிப்படுத்தல், சமூக நீதி கிடைக்கப்பெறல். இடருக்குப் பின் பல அசௌகரியமான உணர்வுகளை வெளிப்படுத்துவர். இவை அசாதாரண சூழலில் ஏற்படும் சாதாரண வெளிப்பாடுகளே.

அதிகளவில் பாதிக்கப்படின் அதிகளவு மன அழுத்தம் ஏற்படும். சமூக உள ஆதரவு வழங்கப்படின், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சமூக உள ஆதரவு வழங்கப்படாதவர்களை விடக் குறையும். ஆதலால் உள ஆதரவு மிகவும் முக்கியமான பங்கை, முழுமையான கவனிப்பில் உதவுகின்றது. இது வேகமான மற்றும் சாதகமான மீளலுக்கு உதவும்.

### உணர்ச்சி வெளிப்பாடுகள்

சாவின் விளிம்புவரை இட்டுச் சென்றதுடன், சொத்துக்களின் சேதம், இழப்புக்களுடன் அன்றி மனித உணர்வுகளின் ஆணிவேரையும் அசைத்துவிட்டது.

ஆழ்ந்த அதிர்ச்சி இழப்புக்கள் மேல் இருக்கும். சாதாரண வழமைகளுக்குத் தடைப்படல், எதிர்காலம் பற்றிய கேள்வி, எதிர்பாராத பிரச்சினைகள், மீளவும் தன்னைக் கட்டி எழுப்பவும், குடும்பத்தைக் கட்டி எழுப்பவும், சமூகத்தைக் கட்டி எழுப்பவும், உணர்வுகளின் வெளிப்பாடுகள், எரிந்து விழுதல், பயம், பதகளிப்பு, பீதி, மீள நினைவுக்கு வரல், நம்பிக்கையீனம்,

> **“ மன அழுத்தத்தில் இருந்து விடுபடல் வேண்டும். அனுபவங்களைக் கூறல் வேண்டும். இதற்குக் காலம் தேவை. பொதுமக்களுக்குச் சாதாரண வெளிப்பாடுகள் பற்றிக் கூறுவதும் அவற்றை எவ்வாறு கையாளுவது என்று கூறு வதும் அழுத்தங்களில் இருந்து விரைவில் விடுபட உதவும். இதனால் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். ”**

கவலைப்படல் உணர்வுகளின் மாற்றங்களுக்கு அப்பால் சமூகக் கட்டமைப்பு உடைவு.

உடல் காயங்கள், வீடின்மை, அநாதைகள், புலம்பெயர்வு, கல்வியை இடைநடுவில் கைவிடுவது, பொருளாதார ரீதியில் சொத் துக்கள் இழப்பு, வேலை இன்மை, உதவி அற்ற நிலை, உடற்காயங்கள், அங்கவீனம், வருமான இழப்பு, சமூக பொருளாதாரத் தாக்கம் என்பவை உணர்வு மாற்றத்தை ஏற்படுத்தும். உடற்காயம் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும். இவை ஒன்றோடொன்று இணைகின்றன.

### வெவ்வேறு அவஸ்தைகளில் உணர்வு மாற்றத்தை அறிதல்

இடருக்குப் பின் ஏற்படும் உணர்வு மாற்றங்கள் காலத்துடன் மாறும். சரியான ஆதரவு வழங்க வெவ்வேறு நிலைகளில் நிகழும் உணர்வு மாற்றங்களை அறிய வேண்டும்.

1. உடனடி மாற்றங்கள் (சில மணித்தியாலங்களில்)
1) பதற்றம், பதகளிப்பு, பீதி, உடனடியாக ஏற்படும். பாதுகாப்புத் தேடி ஓடுதல்.
2) அதிர்ச்சி, விறைப்புத்தன்மை, உண்மையான நிலையை ஏற்றுக் கொள்ளல். கடினமாக இருக்கும், ஒன்றும் ஏற்படாதது போன்று இருப்பர், கதைக்காமல் இருப்பர், மாறாட்டமான கதைகளும், உணவில் நாட்டமின்மையும் காணப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 2 | 6 | 7 | 4 | 5 | 9 | 1 |
| 7 | 9 | 1 | 5 | 8 | 2 | 6 | 3 | 4 |
| 4 | 5 | 6 | 1 | 3 | 9 | 8 | 7 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 1 | 8 | 9 | 6 | 5 |
| 5 | 8 | 7 | 2 | 9 | 6 | 1 | 4 | 3 |
| 1 | 6 | 9 | 4 | 5 | 3 | 2 | 8 | 7 |
| 9 | 1 | 8 | 3 | 2 | 7 | 4 | 5 | 6 |
| 6 | 7 | 5 | 9 | 4 | 1 | 3 | 2 | 8 |
| 3 | 2 | 4 | 8 | 6 | 5 | 7 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மணிரத்னம் படத்தில் கார்த்தி



'ஓ காதல் கண்மணி' படத்துக்குப் பின்னர் மணிரத்னம் இயக்கும் படம் பற்றிப் பல்வேறு தகவல்கள் வெளிவந்துவிட்டன. அவருடைய அடுத்த படத்தில் கார்த்தியும் துல்கரும் நடிப்பதாக முதலில் கூறப்பட்டது. அதன் பின்னர் படத்திலிருந்து துல்கர் விலகிக் கொண்டதால் கார்த்தியும் நானியும் நடிக்க இருப்பதாகக் கூறப்பட்டது.
இறுதியாக துல்கர், நானி ஆகியோர் நாயகர்களாகவும் நித்யாமேனன் யாமி எனும் புதுமுகம் நாயகியாகவும் நடிப்பதாகக் கூறப்பட்டது.
இப்போது மீண்டும் நிலைமை மாறியுள்ளது. மணிரத்னம் படத்தில் கார்த்தி நடிக்க இருப்பது உறுதி எனவும், கார்த்தி தற்போதைய படங்களை முடித்துவிட்டு மணிரத்னம் படத்தில் நடிக்கவிருப்பதாகவும் தகவல்வெளியாகியுள்ளது.

கரிகாலன் @DiNationS · Nov 30
இண்டைக்குச் சம்பள நாள் என்பதுகூட வேலைக்கு போறதுக்கான உந்துதல்தான்.

மீனம்மா @meenammakayal · Oct 19
நீ என்ன செய்தாலும் எனக்குக் கோபமே வராது என்று சொன்ன பின்னர், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்குள் எவ்வளவு நடிக்க வேண்டியிருக்கு ச்சே..

கதிரவன் @iam_kanal · Dec 1
எது நடந்தாலும் வேடிக்கை பார்த்துக்கொண்டே நகர்ந்துவிடு–உறவை பலப்படுத்தும். எது நடந்தாலும் உள்ளே தலையிட்டு உன் கடமையை ஆற்று–பகையை பலப்படுத்தும்.

Gobinath @Gobinath_SP · Nov 16
சாடையாய் மழைத் துளிகள் யன்னல் ஆடிகளைத் தட்டித் தாளமிட நீண்ட நாள்களின் பின்னர் நூலோடு ஓர் இரவு.

அனாமிகா @MissLoochu · Jul 8
"உன்னைவிட்டுப் பிரிந்தால் நான் பைத்தியமாகிவிடுவேன்" சொன்னவர்களை மகிழ்வாய் எங்கே காண்கையில் வரும் புன்னகையில் புத்தனின் சாயல்.

## புன்னகைப் பக்கம்



எனது கட்சிக்காரரை எதிர்க்கட்சி வக்கீல் குறுக்கு விசாரணை செய்யக் கூடாது மைலார்ட்
ஏன்?... அவர் உண்மையை உளறி விடுவார்....



பேங்க் லாக்கர்ல நீங்க எதை வைச்சாலும் எங்களுக்கு ஒண்ணுமில்லதான். அதுக்காக வெங்காயத்தை வைக்கலாமானெல்லாம் கேக்காதிங்க






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** செயல்களில் முன்யோசனை வேண்டும். தொழில், பணியிடத்தில் அதிக நேரம் பணிபுரிய வேண்டியிருக்கும். ஆனாலும் சுமாரான பணவரவால், மனதில் சிறு வருத்தம் இருக்கும்.

**இடபம்:** பிறருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற சிரமப்படலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். கொடுக்கல், வாங்கலில் மிகுந்த கவனம் தேவை. பணவரவு சுமாராக இருக்கும். ஆடம்பரச் செலவை மனமின்றி செய்ய வேண்டி வரும்.

**மிதுனம்:** குடும்ப உறுப்பினர்கள் உதவிக்கரமாக நடந்துகொள்வர். தொழில், வியாபாரம் செழித்து வளர, அனுபவஸ்தர்களின் ஆலோசனை கிடைக்கும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** புதிய அனுபவங்களை எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். மீதிப் பணம் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற வாய்ப்பு உண்டு.

**சிங்கம்:** அக்கம் பக்கத்தவரிடம் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி கண்டு ஆச்சரியப்படுவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும். சொத்து வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

**கன்னி:** சொந்தப் பணிகளில் ஆர்வம் வளரும். தொழில், வியாபார நடைமுறையில், சில மாறுதல் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பயணங்களைப் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**துலாம்:** மனம், செயலில் புத்துணர்வு பிறக்கும். நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். விருந்துகளில் கலந்துகொண்டு மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** நல்லோரின் வழிகாட்டுதல் நம்பிக்கைத் தரும். தொழில், வியாபாரத்தில் அளவான இலாபம் இருக்கும். பொருள்களை கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். திட்டமிட்ட பயணத்தில் மாறுதல் செய்ய வேண்டிவரும்.

**தனுசு:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். விரும்பிய பொருளை வாங்கித் தந்து மகிழ்ச்சிப்படுத்துவீர்கள்.

**மகரம்:** உடல்நலத்தில் அக்கறை வேண்டும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர்கள் வருகையால் அதிக செலவு ஏற்படலாம். அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியினரிடம் சமரச போக்கைப் பின்பற்றவும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பிறக்கும். தவறு நிகழ்ந்த பணியைச் சரி செய்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்துப் பணவரவு கிடைக்கும். கலையம்சமான பொருள் வாங்குவீர்கள். குழந்தைகளின் படிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** மனதில் இருந்த சஞ்சலம் மறையும். தொழில், வியாபாரத்தில் உருவான குளறுபடியைச் சரி செய்து, இலாபம் அதிகரிக்கும் முயற்சியில் இறங்குவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியன்னை பேராலயத்தில் புனித ஆண்டுக் கதவு திறந்து யாழ். ஆயர் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்குவார்

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

*டிசெம்பர் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மறைமாவட்ட மரியன்னை பேராலய புனித ஆண்டுக் கதவைத் திறந்து - யாழ் ஆயர் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கி புனித ஆண்டை ஆரம்பித்து வைப்பதை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.*

2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி தூய கன்னிமரியாவின் அமல உற்பவ பெருவிழாவன்று முதல், 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி கிறிஸ்து அரசர் பெருவிழாவரை இரக்கத்தின் புனித ஆண்டைக் கொண்டாடும்படி பிரான்சிஸ் பாப்பரசர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ் பதவி ஏற்ற இரண்டாம் ஆண்டு (2013 - 2015) நிறைவில், இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் நிறைவுற்ற ஐம்பதாம் ஆண்டு (8 டிசெம்பர் 1965 - 8 டிசெம்பர் 2015) நிறைவு தினத்தில் வழக்கத்திற்கு மாறான இந்த இரக்கத்தின் புனித ஆண்டு தொடங்கப்படுகிறது. வழமையாக 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் இந்த யூபிலி புனித ஆண்டு கடந்த தடவை 2000ஆம் ஆண்டு மறைந்த புனிதர் 2ஆம் ஜோண் போல் பாப்பரசரால் பிரகடனப்படுத்தப் பட்டது. இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் நிறைவுற்ற ஐம்பதாம் ஆண்டு நிறைவை 2015இல் நினைவு கூரும் விதமாக 25 ஆண்டுகள் நிறைவாகும் முன்னர் இந்தப்புனித ஆண்டு அறிவிக்கப்படுவதால் இது வழக்கத்துக்கு மாறான புனித ஆண்டாக அமைகிறது.

பிரான்சிஸ் பாப்பரசர் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி 2015ஆம் ஆண்டு வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலய புனித ஆண்டுக் கதவை 5ஆயிரம் இறைமக்கள் சூழ நிற்க சம்பிரதாயபூர்வமாகத் திறந்து இந்தப் புனித ஆண்டை ஆரம்பித்து வைத்துள்ளார். அதனைத் தொடர்ந்து வத்திக்கானில் உள்ள மற்றைய மூன்று பசிலிக்கா பேராலயங்களான புனித யோண் றத்தரன் பசிலிக்கா பேராலயம் (டிசெம்பா 13), புனித மரியா பசிலிக்கா பேராலயம் (ஜனவரி 01 மரியன்னை தினம்), புனித பவுல் பசிலிக்கா பேராலயம் (ஜனவரி 25 பவுல் மனம் திரும்பிய தினம்) என்பனவும் திறந்து வைக்கப்படவுள்ளன.

பசிலிக்கா பேராலயங்களின் புனித கதவுகள் புனித ஆண்டில் மட்டும் திறக்கப்படும். இங்கு குறிப்பிடப்பட வேண்டியது என்ன வென்றால், வத்திக்கானில் உள்ள நான்கு முக்கிய பசிலிக்கா பேராலயங்களிலும் புனித கதவுகள் உள்ளன. இந்தக் கதவுகள் திறக்கப்பட முடியாதபடி சீமெந்தினால் சீல் செய்யப்பட்டு எப்போதும் மூடிய படியே இருக்கும். புனித ஆண்டில் மட்டும் இந்த சீமெந்துச் சீல் உடைக்கப்பட்டு இந்தக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டு இறை மக்கள் அதன் வழியாக உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர். புனித ஆண்டு தவிர்ந்த மற்றைய காலம் முழுவதும் இந்தக் கதவு பூட்டப் பட்டே இருக்கும். இது தருகின்ற கருத்து என்னவென்றால் புனித ஆண்டில் இறைமக்கள் வழமைக்கு மாறான பாதை வழியே உட்செல்கிறார்கள்.

புனித ஆண்டில் இந்தக் கதவின் வழியாக உள்ளே வருவதன் மூலம் இறைமக்கள் இறை வனின் அளப்பரிய இரக்கத்தையும் அளவு கடந்த மன்னிப்பையும் பெறுகிறார்கள். புனித ஆண்டின் பரிபூரண பலன்களைப் பெறுகிறார்கள். தாம் செய்த பாவங்களுக்கான மன்னிப்பை மட்டுமல்லாது, அவற்றுக்கான தண்டனையிலிருந்தும் விடுதலை பெறுகிறார்கள். இறைவனின் இரக்கத்தினால் பாவங்களுக்கான மன்னிப்பையும் தண்டனைகளுக்கான விடுதலை பெறுவதுமே இந்தப் புனித ஆண்டின் சிறப்பம்சமாகும்.

**யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் புனித கதவு**

பிரான்சிஸ் பாப்பரசர் எப்போதும் வழமைக்கு மாறானதைச் செய்து எல்லோர் கவனத்தையும் கவர்ந்து பணியாற்றுவதில் வல்லவர். உலகெங்கும் பரந்து வாழும் கத்தோலிக்க மக்கள் எல்லோரும் வத்திக்கானுக்கு வந்து இந்தப் புனித கதவின் வழியாக உட்சென்று புனித ஆண்டின் பயன்களைப் பெறுவது கடினம் என்பதால், உலகின் எல்லா மறைமாவட்டங்களின் பேராலயங்களிலும் புனித கதவை அமைத்து, அதனைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து - அக்குறிப்பிட்ட மறைமாவட்ட இறைமக்கள் அனைவரும் தமது பேராலயங்களில் அமைக்கப்பட்ட அந்தப் புனித கதவுக்கு யாத்திரையாக வந்து, பவனியாக உட்சென்று, பாவமன்னிப்பு அருட்சாதனத்தைப் பெற்று, இறைவனின் இரக்கத்தை அனுபவித்து - மனம்மாறி புதிய வாழ்வை ஆரம்பிக்க வழிசெய்துள்ளார். இந்த வகையில்த்தான் யாழ். மறை மாவட்ட பேராலயமான புனித மரியன்னை பேராலயத்திலும் புதிய கதவு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்கதவானது டிசெம்பர் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை புனித மரியன்னை பேராலய முதலாம் திருப்பலிக்கும் இரண்டாம் திருப்பலிக்கும் இடையில் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிகாசம் ஆண்டகையால் திறக்கப்பட்டு, பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஆசீர் வழங்கப்பட்டு, யாழ். மறைமாவட்டத்தில் புனித ஆண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஆசீரை யாழ் மறைமாவட்ட ஆயர் புனித ஆண்டின் முடிவில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் வழங்குவார்.

**யாழ். மறை மாவட்ட இறைமக்கள் மரியன்னை பேராலயத்திற்கு யாத்திரை**

இந்தப் புனித ஆண்டு முழுவதிலும் யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க இறைமக்கள்

> **பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஆசீர் வழங்கப்பட்டு - யாழ். மறை மாவட்டத்தில் புனித ஆண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஆசீரை யாழ் மறைமாவட்ட ஆயர் புனித ஆண்டின் முடிவில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் வழங்குவார்.**

அனைவரும் பங்குத் தந்தையுடன் இணைந்த குழுக்களாகவோ, தனித்தனி குழுக்களாகவோ யாழ். மறை மாவட்ட பேராலயமான புனித மரியன்னை பேராலயத்துக்கு யாத்திரையாக வந்து, அண்மித்த ஒரு இடத்தில் இருந்து பவனியாக அங்கு திறக்கப்பட்டுள்ள புனித கதவின் வழியாக உட்சென்று - பாவ மன்னிப்பு அருட்சாதனத்தைப் பெற்று - விசுவாச அறிக்கையிட்டு - திருப்பலியில் பங்கு கொண்டு புனித ஆண்டின் பயன்களைப் பெற அழைக்கப்படுகின்றனர். யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இறைமக்கள் பாவமன்னிப்பு அருட்சாதனத்தைப் பெற்று புது வாழ்வை ஆரம்பிக்க துணை செய்யும் விதமாக சிறப்பாக நியமிக்கப்பட்ட இரக்கத்தின் மறைப்பணியாளர்கள் (விசேடமாக குறிக்கப்படும் குருக்கள்) புனித ஆண்டில் நாள் முழுவதும் குறிப்பிட்ட நேரங்களில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் காத்திருப்பர் என மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்திரு கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார். கருக்கலைப்பு பாவத்துக்குரிய தண்டனைகளை நீக்குவதற்கு அனைத்துக் கத்தோலிக்க குருக்களுக்கும் இந்தப் புனித ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, அதேநேரம் தண்டனைகள் வழங்குவதற்குத் திருப்பீடத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள பாவங்களுக்குரிய தண்டனையை அகற்றுவதற்கு இரக்கத்தின் மறைப் பணியாளருக்கு சிறப்பு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.




**புனித ஆண்டுக் கருப்பொருள்**

புனித பவுல் எபேசியருக்கு எழுதிய மடலில் கடவுள் மிகுந்த இரக்கமுடையவர் (எபேசியர் 2:4) என்று தெரிவித்த வசனங்களே இந்த இரக்கத்தின் புனித ஆண்டின் கருப்பொருளாகிறது. உங்கள் வானகத் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள் (லூக்காஸ் 6:36) என்ற விவிலிய வசனங்களில் இருந்து - தந்தையைப் போல் இரக்க முள்ளவராய் - என்ற வார்த்தைகளே இந்த இரக்க யூபிலி புனித ஆண்டின் விருது வாக்காகிறது. இரக்கத்தின் நற்செய்தியாளர் என அழைக்கப் படும் புனித லூக்காவின் நற்செய்தியே இப்புனித ஆண்டு முழுவதும் திருப்பலி வாசகத்துக்குப் பயன் படுத்தப்படும். புனித லூக்கா நற்செய்தியின் அதிகாரம் 15 - நற்செய்தியில் நற் செய்தி போல் அமைந்து - காணாமற் போன ஆடு - காணாமற் போன திராக்மா - காணாமற் போன மகன் போன்ற இறை இரக்கத்தை வெளிப் படுத்தும் உவமைகளைத் தரு கின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. பாப்பரசர் பிரான்சிஸ் இந்த புனித யுபிலி ஆண்டின் ஒவ்வொரு மாதத்தின் ஏதாவ தொரு வெள்ளிக்கிழமையிலும் இரக்கச் செயலோடு தொடர் புடைய ஒரு அடையாள நிகழ்வில் ஈடுபடுவார் என நற்செய்தியின் புதிய வழி அறிவிப்பு திருப்பீட அவையின் தலைவர் பேராயர் ரினோ பிசிக்கெல்லா ஆண்டகை அறிவித்துள்ளார்.



**இரக்கத்தின் பாப்பரசர் 2ஆம் யோண் போல் வழியில் பிரான்சிஸ் பாப்பரசர்**

இந்த இரக்கத்தின் ஆண்டு இறைஇரக்க வழிபாட்டுடன் நேரடியாகத் தொடர் கொண்டதல்ல என்பது இங்கு விசேட கவனத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். ஆனால் இறைவனின் இரக்கத்தை இன்னும் ஆழமாகப் புரியவும் பெறவும் தொடர்புகளை ஏற்படுத்தலாம். மறைந்த புனிதரான 2ஆம் யோண் போல் பாப்பரசர் இரக்கத்தின் பாப்பரசர் என அழைக்கப்படுகிறார். இவரே இறை இரக்கத்தின் ஞாயிறை வழிபாட்டுக் காலத்தின் ஒரு பகுதியாக 2000 ஆம் ஆண்டில் இணைத்தவர். ஐந்து ஆண்டுகளுக்குப் பின் 2005ஆம் ஆண்டு இறை இரக்கத்தின் ஞாயிறுக்கு முந்திய இரவு 2 ஆம் ஜோண் போல் பாப்பரசர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். பாப்பரசர் பிரான்சிஸ் கூட தமது பாப்பரசப் பணியை இறைவனின் இரக்கத்தை வெளிக்காட்டும் ஒன்றாகவே அமைத் துள்ளார். பரிதாபத்துக்குரிய தன்னை இறைவன் தன் இரக்கத்தால் தெரிந் தெடுத்துள்ளார் என்றே தன் விருது வாக்கை எடுத்துள்ளார். 2011 ஆம் ஆண்டு இறை இரக்கத்தின் ஞாயிறன்று 2 ஆம் ஜோண் போல் பாப்பரசரை முத்திப்பேறு பெற்றவராகவும் 2014 ஆம் ஆண்டு அதே இறை இரக்கத்தின் ஞாயிறன்று புனிதராகவும் உயர்த்தினார்.

எனது 14ஆவது வயதில் எனது அன்னை எனக்கு வாங்கித் தந்த புனித பவுஸ்தீனா எழுதிய இறை இரக்கப் புத்தகமே நான் வாசித்த முதற் கத்தோலிக்கப் புத்தகம். இதுவே என் வாழ்வை ஒழுங்கமைத்தது என பிரான்சிஸ் பாப்பரசர் தெரிவித்துள்ளமையை இங்கு நோக்க வேண்டும். புனித ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் இளைஞர்களுடன் போலந்தில் கொண்டாடவுள்ளார் என்பது இங்கு சிறப்புத் தகவலாகும்.

**நல்லாயன் இயேசு புனிதஆண்டின் இலச்சினை**

புனித ஆண்டின் இலச்சினையாக நல்லாயன் இயேசுவின் படம் இயேசுசபைக் குருவான மார்க்கோ றுப்கி என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 100 ஆடுகளில் தொலைந்து போன ஒரு ஆட்டைத் தேடி அதனைக் கண்டு பிடித்த மகிழ்ச்சியில் அதனைத் தூக்கித் தன் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டு வரும் பட அமைப்பை ஒரு மனிதரை அவ்வாறு போட்டுக் கொண்டு வருவதைப்போல் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பு அம்சமாகும். மனம் திரும்பும் மனிதர்களே அதிக கவனத்தையும் அன்பையும் பெறுகின்றனர்.

இந்தப் புனித ஆண்டு அனைவருக்கும் அருள் தரும் புனித ஆண்டாக ஆசிப்போம்.

*(கட்டுரையாளர், ஊடக விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | – | 120 | 120 | 100 | 120 | 100 |
| கத்தரி | 140 | 120 | 200 | 160 | 140 | 160 | 70 |
| கரட் | 140 | 180 | 320 | 180 | 140 | 320 | 320 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 400 | 220 | 320 | 280 | 220 | 300 | 250 |
| பாகல் | 300 | 280 | 400 | 300 | 280 | 320 | 350 |
| கருணைக்கிழங்கு | 70 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 90 | 90 | 70 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 120 | 120 | 130 | 180 | 100 |
| பூசணி | 40 | 60 | 60 | 40 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 170 | 200 | 180 | 240 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 40 | 50 | 80 | 40 |
| கீரை | 40 | 60 | 50 | 20 | 50 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 30 | 40 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 700 | 600 | 800 | 700 | 500 | 1000 | 800 |
| புடோல் | 140 | 120 | 100 | 120 | 80 | 160 | 120 |
| கோவா | 140 | 180 | 100 | 160 | 140 | 160 | 180 |
| வெண்டி | 200 | 120 | 160 | 120 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 300 | 140 | 240 | 240 | 240 | 300 | 220 |
| லீக்ஸ் | 200 | 180 | 160 | 160 | 160 | 240 | 160 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50–60 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 70 | 60 | 70 | 120 |
| தேசிக்காய் | 200 | 260 | 200 | 150 | 180 | 80 | 70 |
| வல்லாரை | 30 | 30 | 10 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 400 | 340 | 400 | 320 | 300 |
| இராசவள்ளி | 250 | – | 150 | – | 180 | – | 200 |

# கோதுமை ரவை இட்லி



## சமைப்போம் வாங்க

**தேவையான பொருள்கள்**

கோதுமை உடைத்த ரவை - 2 கப்
உளுத்தம் பருப்பு அரைக் கப்
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

முதலில் கோதுமை ரவை மற்றும் உளுத்தம் பருப்பைத் தனித்தனியாக பாத்திரத்தில் போட்டு 2 - 3 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக் கவும்.

பின்பு இட்லிக்கு அரைப்பதுபோல உளுந்து மற்றும் கோதுமை ரவையைப் போட்டு அரைத் துக் கொள்ளவும்.

அதனுடன் தேவையான அளவு உப்புச் சேர்த்துக் கலந்து புளிக்க வைக்கவும்.

நன்றாகப் புளித்த பின்னர் இட்லிகளாக ஊற்றிச் சட்னியுடன் சேர்த்துப் பரிமாறவும்.

இப்பொழுது சுவையான கோதுமை ரவை இட்லி தயார்.

# வீட்டுத்தோட்டக் குறிப்புகள்



சிறிதளவு எப்சம் உப்பை தண்ணீரில் கரைத்து செடிகளுக்கு ஊற்றலாம். செடிகள் நன்கு வள ரத் தேவையான மக்னீசியம், சல்பேட் இரண் டையும் இந்த உப்பு கொடுக்கும் . வாரம் ஒரு முறை உபயோக்கிக்கலாம்.

முட்டை ஓடுகளைக் காய வைத்து நன்கு தூளாக் கிப் போட வேண்டும். இதில் இருக்கும் கல்சியம் செடிகளுக்கு நல்ல உரமாகும்.

4 கரண்டி வினிகர் ஒரு லீற்றர் தண்ணீரில் கலந்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஊற்ற வேண்டும்.

அலங்கார மீன் தொட்டியில் தண்ணீர் மாற்றும் போதுவெளியேற்றப்படும்கழிவுநீரைச்செடிகளுக்கு ஊற்றலாம். செடிகள் செழிப்பாக வளரும்.

சாம்பல் சிறந்த உரம். கிடைத்தால் போடலாம்.

ஓக் மர இலைகள் அல்லது வேப்பமர இலை களை வாளியில் உள்ள நீரில் போட்டு வெயிலில் வைக்கவேண்டும். நீரின் நிறம் நன்றாக மாறி யதும் குளிர வைத்துச் செடிகளுக்கு ஊற்றலாம்.

காய்கறிக் கழிவுகளைச் செடியின் அடியில் போடலாம். அவை உக்கிப் பயன்தரும்.

# அழகுக்கு அழகு சேர்க்கும் ஆடை அலங்காரம்

பெண்கள் பொதி சுமப்பது போல உடல் முழுவதும் சுற்றிய நிலையில் அதிகமான அளவில் உடை அணிவது அழகைக் கெடுக்கும். அதற்காக அங்கங்கள் தெரியும் அளவுக்கு மிகவும் குறைவான ஆடைகளை அணியக் கூடாது.

**கடைக்குப் போகும்போது:**

இலேசான நிறத்தில் அமைந்த புடைவைகள் அல்லது மெல்லிய பூக்கள் போட்ட புடைவை அணிந்து செல்வது சூழ்நிலைக்கு ஏற்ப இருக்க வேண்டும்.



பெண்கள் அணியக்கூடிய பிளவுஸ் களின் கைகளிலும், கழுத்திலும் லேஸ் களை வைத்துத்தைத்துக்கொண்டால், அவை என்ன வண்ணத்தில் புடைவை அணிந்தாலும் அதற்கு பொருத்தமாக இருக்கும். பெண்கள் அணியும், அணியக்கூடிய புடைவையின் அமைப்பே அவர்களின் தோற் றத்தையே மாற்றியமைக்கக்கூடிய தன்மையுடன் திகழ்கின்றது.

புடைவையில் உள்ள டிசைன் வெறும் அழகுக்காக மட்டுமே அமைந்தி ருப்பதாகக் கருதிவிடக்கூடாது. திட்ட மிட்டு புடவையைத் தேர்ந்தெடுத்து உடுத்தினால் பெண்களின் தோற் றத்தையே அது மாற்றி விடும். உதார ணமாக, பெண்கள் அணியக்கூடிய புடைவையில் அமைந்த கோடுகள் குறுக்குவாட்டில்அமைந்தால்உயரமான பெண்கள் குள்ளமாக இருப்பது போன்ற பிரமை பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.

புடைவையில் அமைந்த கோடுகள் நேர்வாக்கில் அமைந்தால் குள்ளமான வர்கள் சற்று உயரமாக இருப்பது போலக் காட்சி தருவார்கள். அலுவல கங்களுக்கோ, கல்லூரிகளுக்கோ செல்லும் பெண்கள் மிகவும் ஆடம் பரமாகவும் கண்களைப் பறிக்கும் விதத்திலும் ஆடை அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

கண்ணியமான தோற்றத்தை அளிக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ற உடையை அணிந்து செல்வது மிகவும் அவசியம். மிகவும் ஒல்லியாகத் தோற்றமளிக்கும் பெண்கள் இறுக்கமான உடையை அணியக் கூடாது.

## நாளை

கார்த்திகை -28
திங்கட்கிழமை 14.12.2015
[illegible] 03.51
நட்சத்திரம்: [illegible] 02.46
ராகுகாலம்: 07.51 - 09.21 வரை
சுபநேரம்: 12.21- 01.51 வரை

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 800 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 400 | - |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 600 | - |
| பாரை | 450 | 500 | 500 | 500 | 800 | 400 |
| சுறா | 400 | 450 | - | 600 | 800 | - |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 600 | 350 |
| விளை | 650 | 450 | 350 | 600 | 600 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | - |
| கும்பிளா | 350 | 300 | 300 | 480 | 400 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 500 | 600 | - |
| ஒரா | 350 | 400 | 350 | 500 | 800 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 350 | 400 | - |
| நகரை | 150 | 250 | 200 | 500 | 400 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 300 | - |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 | 400 | - |
| திருக்கை | 150 | 300 | 300 | 300 | 400 | - |
| பாலை | 400 | 250 | 200 | 500 | 400 | - |
| வாளை | 100 | 150 | 200 | 300 | 300 | 250 |
| ஜொய் | 50 | 150 | 60 | 150 | 100 | - |
| மதனம் | 300 | 200 | 200 | 200 | 400 | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நகரசபைக்கு 39 லட்சம் வருமானம்

## பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளால்

மன்னார்,டிசெ.13

பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளுக்காக மன்னார் நகர சபையால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள கடைத் தொகுதிகளால் இது வரை சுமார் 39 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் தெரிவித்தார்.

மன்னார் நகரசபையால் நத்தார் புதுவருடப் பண்டிகைக்கால சந்தைக் கடைத்தொகுதி வருடா வருடம் குத்தகைக்கு விடப்படுவது வழமை.

இந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதி கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு குத்தகைக்கான கடைத்தொகுதி பயனாளிகள் முன்னிலையிலும், பொலிஸார் முன்னிலையிலும் பரீசிலிக்கப்பட்டு கடைத்தொகுதிகளை அமைப்பதற் கான அனுமதி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற போதிலும், 189 கடைத் தொகுதிக்கான விண்ணப்பங்களே மூடிய கேள்விக் கோரல் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

> சுமார் ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்ற போதும் 189 கடைத்தொகுதிக்கான விண்ணப்பங்களே மூடிய கேள்வி கோரல் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஏற்கனவே மன்னார் மாவட்ட வியாபாரிகளுக்குக்கென ஒதுக்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை 33 ஆக இருந்த போது வெளி மாவட்ட வியாபாரிகளின் கடைத்தொகுதிக்கும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் மன்னார் மாவட்ட வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டது. இது வரை 139 கடைகள் ஏலத்தில் விடப்பட்டுள்ளன. கடைத்தொகுதிகள் அமையும் இடங்களைப் பொறுத்து ஏலப்பணம் மாறுபட்டுள்ளது.

பண்டிகைக் காலத்துக்காக வர்த்தக நிலையங்களை அமைக்கஒதுக்கப்பட்ட இடங்களின் மூலம் இது வரை 39 லட்சம் ரூபா வருமானம் மன்னார் நகர சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது எனத் தெரிவித்த மன்னார் நகர சபையின் செயலாளர், இந்த வருமானம் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இரட்டிப்பு வருமானமாகவுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருமானத்தில் இருந்து துப்புரவுத் தொழிலாளர்கள், சிற்றூழியர்கள், எரிபொருள் செலவு மற்றும் சிறு அபிவிருத்திப் பணிகள் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-56)

# தமிழக மக்களுக்கு நேசக்கரம் நீட்டுவோம்

## சுவிற்சர்லாந்து, சிவராம் நினைவுப் பணிமன்றம் அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

ஈழத் தமிழருக்குத் துயரம் நேரும் போதெல்லாம் நேசக்கரம் நீட்டிய தமிழக மக்கள், இன்று இயற்கையோடு மல்லுக்கட்டி நிற்கும்போது எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவது அவசியமாகும். -இவ்வாறு சுவிற்சர்லாந்து, சிவராம் நினைவுப் பணிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

"தாய்த் தமிழக உறவுகளுக்கு நேசக்கரம் நீட்டுவோம்"என்னும் தலைப்பில் குறித்த மன்றம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தின் சென்னை மற்றும் கடலூர் மாவட்டங்களிலும், தாயகத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் ஏற்பட்டுள்ள தீவிர பருவமழைத்தாக்கம்புலம்பெயர் தமிழ் மக்களை ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியுள்ளது.

இயற்கையின் சீற்றம் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பழிவாங்குகின்றதோ என நினைக்கத் தோன்றும் வகையில் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

தமிழக உறவுகளின் நிலையோ, கண்ணில்நீரை வரவழைப்பதாகவுள்ளது. அத்துடன் தொலைக்காட்சிகள்மூலம்காணக்கிடைக்கும் காட்சிகள்மனதைஉருக்குகின்றன.

ஈழத் தமிழருக்குத் துயரம் நேரும் போதெல்லாம் நேசக் கரம் நீட்டும் தாய்த் தமிழக மக்கள், எமது துயரத்தைத் தமது துயரமாக நினைத்து உயிரையே துச்சமென நினைத்துப் போராடும் மக்கள், இயற்கையோடு மல்லுக் கட்டி நிற்கும்போது எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவது அவசியம்.

தொப்புள் கொடி உறவுகளான நாம், சொந்தச் சகோதரர்களின் துயரத்தில் பங்கு கொள்ள வேண்டும். எனவே உதவி செய்வதற்கு ஒவ்வொரு புலம்பெயர் பொது அமைப்புக்களும், இயலுமான தனி நபர்களும் முன்வர வேண்டும்.

ஈழத் தமிழர்களும் தாய்த் தமிழகத் தமிழர்களும் அரசியல் ரீதியாக ஒன்றுபடுவதைப் பல சக்திகள் பல காலமாக எதிர்த்து வருவதை அனைவரும் அறிவோம். எனவே, அதற்கு இடங்கொடாது எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-ரி5)

## திருமறைக் கலாமன்றத்தின் 'பொற்றூறல்'

யாழ்ப்பாணம்,டிசெ.13

திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழாவை முன்னிட்டு மார்கழித் திங்கள் பொற்றூறல் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இல. 286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்டத்தின் ஆயர் பேரருள் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொள்வார்.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயம், யாழ்ப்பாணம் புனித அடைக்கல அன்னை ஆலயம், சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயம், நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் ஆகியவற்றுடன் யாழ்ப்பாணம் இரட்சனிய சேனை ஆகியவற்றின் பாடகர் குழாங்கள் நிகழ்வில் கலந்து கொண்டு கிறிஸ் மஸ் கீதங்களை வழங்கவுள்ளன.

இந்த நிகழ்வு கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை முன்னிட்டு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-10,23)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந் துள்ள யாழ் மாவட்டத்துக்கான சங்கத்தின் கிளைச் செயலகத்தில் நடை பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு, அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-ரி5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருடைத்துணிகளைப் பெற்றுக்கொள்ளலாம்

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாண வர்களுக்குச் சீருடைத்துணி கொள்வனவு செய்யும் வர்த்தக நிலையங்களின் பெயர் விவரங்களை துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இதற்கமைய மல்லாவி யில் முத்துப் பிள்ளையார் வண்ணச்சோலை, ஊர் மிளா மல்ரிசொட், சீமாணி புடைவையகம், அபிஸ்ரன் புடை வையகம், ரெக்ஸ் கலக்சன், ஆகிய வர்த்தக நிலையங் களிலும், ஒட்டுசுட் டான் -முத்துஐயன் கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்க புடைவையகத்தி லும், அம்மன் பல் பொருள் வாணி பத்திலும் மாணவர் களுக்கு வழங்கப் பட்ட பணவவுச்சரை வழங்கி, சீருடைக ளைப்பெற்றுக்கொள் ளலாம்எனப்பணிப் பாளர் தெரிவித் துள்ளார். (ஐ-500)

## கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங் கத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர் பானஆலோசனைக் கூட்டம், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆஸ்பத் திரிவீதியில்அமைந் துள்ள யாழ். மாவட் டத்துக்கான சங்கத் தின் கிளைச்செயல கத்தில் நடைபெற வுள்ளது. இந்தக் கூட்டத்தில் அங்கத் தவர்களை தவறாது கலந்து கொள்ளு மாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (ஐ-ரி5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் ஓய்வூதியர் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன் போது மூத்த வங்கியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)





சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு ஜேர்மன் பசுமை வளத்திட்ட ஸ்தாபகர் எஸ்.குலசிங்கம் அனுசரணை வழங்கி இருந்தார்.(ஐ)



சமூக அபிவிருத்தி மன்றத்தால் நடத்தப்பட்ட சிறுவர் முதியோர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன் போது விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மன்றத்தின் முன்னாள் தலைவர் ருக்மணி ஆனந்தவேலுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஐ)



லண்டன் ஈஸ்ற்ஹம் நகரில் அண்மையில் நடைபெற்ற ராகசங்கமம் நிகழ்வில் மெல்லிசைப்பாடகர் மாணிக் கம் சத்தியமூர்த்தி இயக்குநர் பாரதிராஜாவால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ஐ)



அளவெட்டி தெற்கு றோ.க.த பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ச.மெறினுக்கு வலி.வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் ச.சஜீபன் சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கி வைத்தார். (ஐ)



கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் கௌரவிக்கபபட்ட ஆசிரியர்கள். (ஐ-135)



மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி திருவிழாவில் சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்திய பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவை, மாவை ஆதீன கர்த்தா ஸ்ரீ.இரத்தினசபாபதிக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஐ)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சோமவார உற்சவம் அண்மையில் நடைபெற்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




முல்லைத்தீவில் உள்ள ஐந்து பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளனர். வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களைக் கௌரவித்தார். (ஐ-21)




வவுனியா மகாறம்பைக்குளம் ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர் சு.கருணாநிதியின் சேவை நலன் பாராட்டு விழா வும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் கடந்த சனிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. (ஐ)



கச்சாய் அத.க. பாடசாலையில் இடம்பெற்ற மரம் நடுகை வேலைத் திட்டத்தில் மாணவர்கள் மரக் கன்றுகளை நடுகை செய்தனர். (ஐ-9)




நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை விழாவின் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் சத்தியமூர்த்தி கதீந்து கொண்டு பரிசில் வழங்கி வைத்தார். (ஐ-422)



புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட மராட்சி வலயக் கல்வி திணைக்களத்தின் சங்கீத பாட ஆசிரியர் திருமதி ஆனந்தராணி நாகேந்திரம் மாணவர்களுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (ஐ)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், அன்ரனி ஜெகநாதன், கந்தையா சிவநேசன்( பவன்) ஆகியோர் நிவாரணங்களை வழங்கி வைத்தனர். (ஐ)





வவுனியா வைரவப்புளியங்குளம் பாரதி முன்பள்ளி மழலைகளின் கலை விழா அதிபர் திருமதி ஜெயராசா சந்திரா தலைமையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)






சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் கீழ் 'வீட்டுக்கு வீடு, கிராமத்துக்கு கிராமம்' எனும் கிராமங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியா பிரதேச செயலகப் பிரிவின் சூமாங்குளம் கிராமத்தில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அறநெறிப்பாடசாலை திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது. (ஐ-422)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின்

விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ் வெல் பரணகம தெரிவித்தார்.

அத்துடன், இரு தரப்பிலும் குற்றம் இழைத்தவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். நீதிமன்றத்தில் சாதாரணமாக கொலையாளிக்கு குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுவது போன்று இந்த விடயத்தில் அணுக முடியாது. இங்கு தண்டனை வேறு விதமாக வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு, யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்றது. இந்த அமர்வின் முடிவில், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சனல் – 4 ஊடகம் வெளியிட்ட இறுதிப் போர் தொடர்பான காணொலியைப் பார்ப்பதற்கு உண்மையாக இருப்பது போல் தெரிகின்றது. அந்தக் காணொலி தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். அந்தக் காணொலியை பொய் என்று கூறுபவர்களது கருத்துக்களும், சரி என்று கூறுபவர்களது கருத்துக்களும் கவனத்தில் எடுத்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இது தொடர்பில் ஆதாரத்துடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆணைக்குழுவின் அமர்வில் காணாமற் போதல் சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவத்தினரின் பெயர்கள், சில அமைப்புக்களின் பெயர்கள் – நபர்களை சுட்டிக் காட்டியுள்ளனர். அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள் என்று ஆணைக்குழுவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, எமது ஆணைக்குழுவின் விசாரணைகள் முழுமையடையவில்லை. ஆணைக்குழு விசாரணை முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட நபர்களை விசாரிக்கவுள்ளோம். இது தொடர்பில் ஜனாதிப்திக்கு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளோம்.– என்றார்.

இதன் போது, நீங்கள் வழங்கிய இடைக்கால அறிக்கையில் விடுதலைப் புலிகள் மீதே குற்றங்களைச் சுமத்தியுள்ளீர்கள் என்று ஊடகவியலாளர்களால் கேள்வி தொடுக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர்,

நாங்கள் இரண்டு பகுதியினர் மீதும் குற்றம் சுமத்தியுள்ளோம். எமக்கு கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் செயற்பட்டுள்ளோம். எமக்குக் கிடைத்த சாட்சியங்கள் நூறு வீதம் சரியானது என்று சொல்ல முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு நோக்கத்துக்காகப் போரில் ஈடுபட்டார்கள். இராணுவத்தினர் கொடுக்கப்பட்ட கட்டளைக்காகப் போரிட்டார்கள். இரு தரப்பினரும் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலும் இராணுவத்திலும், ஒரு சிலர் தவறாகச் செயற்பட்டிருக்கலாம். ஆனால் இரண்டினதும் தலைமைகள் தவறிழைக்கவில்லை. அத்துடன் ஒருவரை ஒருவர் பழிவாங்கும் நோக்குடனும் செயற்படவில்லை.


இரண்டு தரப்பிலும் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள். சாதாரணமாக நீதிமன்றத்தில் கொலைக் குற்றம் புரிந்த ஒருவரைத் தண்டிப்பது போன்ற நடைமுறையை இங்கு பின்பற்ற முடியாது. தண்டனை வழங்குவது கூட இங்கு வேறு விதமாகத்தான் மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

(த-வ-5-21-101-106-ரி2-ரி6)

---

## மரண அறிவித்தல்கள்

### சிவரத்தினம் இரத்தினசிங்கம்



(முன்னாள் தலைவர் German Instan Tea Factory Forman முன்னாள் வர்த்தக வங்கி காப்பாளர்)

சிவராஜபதி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவரத்தினம் இரத்தினசிங்கம் 11.12.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவரத்தினம்-ராஜலக்மி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஞானமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் யாசோதா மற்றும் திருமதி சுபத்திரா (ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேதுவர்தனி, நிஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **சுபத்திரா** (மகள்)
**T.P: 0771059908**

(C/20769) (10.17)

---

### ஐயாத்துரை தனபாலசிங்கம்



பாடசாலை வீதி, தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை தனபாலசிங்கம் கடந்த (11.12.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை நல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, குமாரகுலசிங்கம் மற்றும் ரேவதி, குமாரசிங்கம் (இத்தாலி), மாலதி, பத்மாவதி (ஜேர்மனி), சிவகுமார் (இத்தாலி), சுபாங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினி, புஸ்பராசா, தர்சினி (இத்தாலி), சிறிக்குமார், சுதர்சன் (ஜேர்மனி), நிசாந்தினி (இத்தாலி), கங்காதரன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற இரட்ணசிங்கம் மற்றும் பரமானந்தம், நாகலட்சுமி, மீனலோசினி, குணசிங்கம், இலக்சிங்கம் (ஜேர்மனி), பால சிங்கம் (கனடா), சரோஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடிதெற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர். 0777 816940

---



### செல்லப்பா தவஞானம்

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும், தற்பொழுது கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தவஞானம் 11.12. 2015 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரதிலட்சுமியின் அன்புக் கணவரும், சர்மிலாவின் (கனடா) பாசமிகு தகப்பனும், பத்திரிநாதனின் (கனடா) மாமனும், காலஞ்சென்ற திருஞானம் மற்றும் சிவஞானம், ஞானரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனலட்சுமி, விஜயகுமார், சந்திரகுமார் (கனடா), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.12.2015 செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

(66840) (10.17)

தகவல்:
**விஜயகுமார்**

---

## மரண அறிவித்தல்



### திருச்செல்வம் யுகராசா

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருச்செல்வம் யுகராசா நேற்று (12.12. 2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம்-ஆனந்தி தம்பதியரின் அன்பு சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து -பொற்கொடி தம்பதி யரின் அன்பு மருமகனும், மேரி பரஞ் சோதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற ஜேம்ஸ் றெஜீவன் மற்றும் ஸ்ரனிஸ் ஜெலிவன் (முகாமைத்துவ உதவியாளர், வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம்), டொறிஸ் ஸ்ரீபன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்துஜா (ஆசிரியை, யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்), கீர்த்திகா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனும், ஞானமலர், காலஞ்சென்ற பத்திநாதர் மற்றும் ஜேசு தாசன், காலஞ்சென்ற நேசமலர் மற்றும் லில்லிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராசா, அருள்மேரி, கௌசலா, காலஞ்சென்ற நேசராசா மற்றும் குணசிங்கம், வர்ணகுலசிங்கம், காலஞ்சென்றவர்களான உதயகுமார், உருத்திரன் மற்றும் மனோகரன் (ஜேர்மனி), ஆகியோரின் மைத்துனரும், விதுஷகான், ஜதுஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.12.2015) திங்கட்கிழமை காலை 09 மணிக்கு இல.50, சிவன்புது வீதி, இல்லத்திலிருந்து அன்னாரின் கோண்டாவில் வடக்கு இல் லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் காலை 10.00 மணியளவில் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, புனித சின்னப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் மு.ப. 11.00 மணியளவில் கோண்டாவில் கிழக்கு, கட்டைஆலடி சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல. 50, சிவன்புது வீதி, நல்லூர்.**
**021 2054090, 077 6155999**

தகவல்:
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

மலர்வு
1947
07
04



உதிர்வு
2015
12
07

### திரு. காசிநாதன் ஞானசேகரன்

சங்குவேலியை பிறப்பிடமாகவும், சில்லாலை.31/9.ஹாமர்ஸ் அவனியு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும், கொண்ட திரு. காசிநாதன் ஞானசேகரன் 07.12.2015 (திங்கள்) அன்று இறையடியெய்தினார். அன்னார் காலஞ்சென்ற காசிநாதன் (மலாயன் பென்சனியர்) பார்வதி தம்பதியினரின் பாசமிகு மகனும், திருமதி பிலோமினாவின் அன்புக் கணவரும், அனிற்றா வதனி (ஆசிரியை புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி கொழும்பு-13), யூட் கிளென்னி ( இலண்டன் ), ஹனியூட் சிறிதரன் (நெதர்லாந்து ) யூட் ஹரிஹரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தையல்நாயகி (சிங்கப்பூர்) ஆனந்தகிருஷ்ணன், காலஞ்சென்ற ஹரிகிருஷ்ணன், சத்தியபாமா, கமலாதேவி, காலஞ்சென்ற சாந்திமதி, ஜெகநாதன், காலஞ்சென்ற சோதிநாதன், காலஞ்செனற் தேவராஜன், திலகதேவி, சப்தசமுத்திரம், உமாதேவி, கேதீஸ்வரி, வர்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிருந்தாபன் ( உவெஸ்லி கல்லூரி கொழும்பு ) பிரணவன் ( றோயல் கல்லூரி கொழும்பு ), துளசிகன், லக்ஷனா, கஜித், திலக்ஷன், துவாரகா, ஆகியோரின் அன்புப் பேரனும், இராஜேந்திரம் (விரிவுரையாளர் கணிதத்துறை தேசிய கல்வி நிறுவகம் ), தவரஞ்சனி ( இலண்டன் ), சோனியா ( நெதர்லாந்து ), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயலக்ஷ்மி, தனலக்ஷ்மி, பரமநாதன் கேதீஸ்வரி, சிவராஜா,சத்தியராஜா,பிரியதர்ஷனி,வேனுகா ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், திவாகர், குளோரியா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஹரிஸ், அபிலாஸ் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், ஆவார்.அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 12.12.2015 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரையும் 13 . 12 . 2015 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கல்கிசை பொது மயானதில் தகனக் கிரியை செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: S. இராஜேந்திரம், ( தேசிய கல்வி நிறுவகம் )–மருமகன் : 077 6006311

தொடர்பு : வதனி ( மகள் ) : 077 4951960, 011 2360146 — சிறிதரன் ( மகன் ) : 00311 80795689
யூட் கிளென்னி ( மகன் ) : 0044 7765248200 — ஹரிஹரன் ( மகன் ) : 075 7309305

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










மலிவு மலிவு மலிவு

ஏசியன் தளபாடத்தின் மெகா சேல்

| | | |
|---|---|---|
| சோபா செற் | இலவசம் Glass Teapo & Rice Cooker | |
| 6x4 அலுமாரி | 10950/= | இலவசம் Vegetable Rack |
| 6x3 அலுமாரி | 8950/= | இலவசம் Shoe Rack |
| Hisense 32"TV | 26900/= | (37900/=) |
| Hisense 24"TV | 19900/= | (26900/=) |
| Panasonic LED 32"TV | 49990/= | இலவசம் DVD Player, Panasonic Phone) |
| Gass Cooker | 3950/= | இலவசம் Kettle |
| Table Mate | 1750/= | (2450/=) |

வீடு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான அனைத்து பொருள்களையும் மலிவாக பெற்றுக் கொள்ளலாம். / ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

230, நாவலர் றோட், இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்
077 3583879, 077 8314 201

# இரு...

சென்றனர்.
சம்பவம் இடம்பெற்று ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் மீண்டும் வீட்டுக்கு வருகை தந்த இராணுவத்தினர், பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைகள் இரண்டை ஈவி ரக்கமின்றிச் சுட்டுக் கொன்றுவிட்டனர் என ஜனாதிபதி ஆணைக் குழு முன் சோதி ராஜா சாந்தகுமாரி கண்ணீருடன் சாட்சியமளித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இரவு 11 மணி யளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள எனது சகோதரியின் வீட்டுக்கு 20 வரையரன இராணுவத்தினர் வருகை தந்திருந்தனர். உங்களின் வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் எனக் கேட்டுவிட்டு ஐந்து இராணுவத்தினர் உள்ளே வந்தனர். ஏனையோர் வீட்டைச் சுற்றிக் காவலுக்கு நின்றிருந்தனர்.

அவர்கள் வந்திருந்த பவள்வாகனம் எமது வீட்டிற்கு அருகாக இருந்த சந்தியில் நின்றிருந்தது. வீட்டு வளவினுள் உள் நுழைந்த இராணுவத்தினர் வீட்டின் கதவைச் சப்பாத்துக் கால்களால் உதைந்து கதவைத் திறக்கும்படி கொச்சைத் தமிழில் கோரினர். நாங்கள் பதற்றத்தில் வீட்டின் முன்பக்கமாக இருந்த மின்குமிழை ஒளிரச் செய்தோம். வெளிச்சத்தைக் கண்டவர்கள் உடனடியாக வீட்டிற்கான மின்னிணைப்பைத் துண்டித்து விட்டனர்.

பதற்றம் அதிகரித்ததால் வீட்டுக் கதவைத் திறந்தோம். உள்ளே வந்த இராணுவத்தினர் எங்களை மிரட்டினர். அத்துடன் எல்லோருடைய தேசிய அடையாள அட்டைகளையும் பெற்றுக் கொண்டனர். அவற்றைத் துருவி ஆராய்ந்து விட்டு எனது மகன் எனது சகோதரியின் மகன் மற்றும் மருமகன் ஆகியோரின் பெயரை உரக்க அழைத்தனர்.

அவர்கள் பயம் காரணமாக நித்திரையில் இருப்பது போலக் கண்களை இறுக மூடியபடி இருந்தனர். வாயை பச்சைத்துணியால் மூடிக்கட்டியிருந்த இராணுவத்தினர் அதனைக் கிழித்து மூவரின் கைகளையும் பின்புறமாகக் கட்டி விட்டு தற தறவென இழுத்துச் சென்றனர். நாங்கள் கத்திய போது துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர்.

எங்களால் அந்தச் சமயத்தில் ஒன்றும் செய்யமுடியவில்லை. அயல் வீடுகளில் இருப்பவர்கள் கூட வெளியே வரமுடியாத நிலைமை. நாங்கள் என்ன செய்யிறது, எங்களுக்கு நம்பிக்கை இருக்கு பிள்ளையாள் எங்கோ ஓர் இடத்தில் உயிரோட இருப்பார்கள்.

என்ரை பிள்ளையளைக் கண்டு பிடித்துத் தாருங்கள் எனக் கூறி கதறி அழுதனர் ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்க வருகை தந்திருந்த சகோதரிகளான கந்தசாமி வசந்தகுமாரியும் சோதி ராஜா சாந்தகுமாரியும்.

சம்பவதினத்தன்று கந்தசாமி வசந்தகுமாரியின் வீட்டிலே தங்கியிருந்த 32 வயதான வசந்தகுமாரியின் மகன் கந்தசாமி சசீஸ் கண்ணா, சாந்தகுமாரியின் மகனான 22 வயது சோதி ராஜா மோகனகாந் மற்றும் 21 வயதான மருமகன் திரவியநாதன் திரவியவேந்தன் ஆகியோரே இவ்வாறு இராணுவத்தால் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டவர்கள்.

சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் அப்போது அரியாலைப் பகுதியில் இருந்த இராணுவ முகாமில் போய் கேட்டோம். அப்படியொருவரையும் நாங்கள் கைது செய்யவில்லை. வேண்டும் என்றால் இராணுவத்தின் 512 படைப் பிரிவினரிடம் கேட்டுப்பாருங்கள் என கூறினர். அங்கும் பதிலில்லை. பின்னர் ஊரெழு முகாமுக்குச் சென்று விசாரித்தோம். அவர்களும் தங்களிடம் அப்படியான ஒருவருமில்லை, வேண்டுமானால் அச்செழு முகாமில் போய்ப் பாருங்கள் என்றனர். இப்படி ஒவ்வொரு முகாமாக அலைந்து களைத்துப்போனோம்.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரச உயர் அதிகாரிகள் என எல்லோரிடமும் எழுத்து மூலமும் வாய் மூலமும் கேட்டு மனமுடைந்து போனோம் என்றனர்.

இந்தச் சம்பவங்கள் இடம்பெற்று முழுதாக ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் மீண்டுமொரு அச்சுறுத்தலும் இரு உயிரிழப்புக்களும் எங்கள் குடும்பத்தை ஆட்கொண்டது.

தொடர்ந்து சாட்சியமளித்த சோதி ராஜா சாந்தகுமாரி,
எனக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்பிள்ளைகளும் இருக்கின்றனர். சம்பவ தினத்தன்று மதிய உணவை முடித்து விட்டு வீட்டில் இருந்த மூத்த மகனையும் இளைய மகனையும் நண்பர்கள் போலத் தொலைபேசி மூலம் உரையாடி வீட்டின் வெளிப்புறமாக வீதிக்கு அழைத்து, அவர்களைச் சுட்டுக் கொலை செய்தனர்.

இந்தச் சம்பவம் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள எமது வீட்டின் முன்பாகவே இடம்பெற்றிருந்தது. சம்பவம் இடம்பெற்ற போது அருகில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யு.என்.எச்.சீ.ஆர் அலுவலகங்கள் அமைந்திருந்ததுடன் அங்கு அதிகாரிகள் கடமையில் இருந்தனர். அந்த வீதியால் சென்றவர்கள் பார்த்திருக்க, நொடிப் பொழுதில் என் பிள்ளைகளின் உயிரைப்பறித்துவிட்டனர் காலன் உருவில் வந்த கயவர்கள். எங்களின் பிள்ளையளின் உயிரை அநியாயமாய் எடுத்துப் போட்டாங்கள் என கண்ணீருடன் சாட்சியமளித்தார். (த-வ-ரி2)

# சரவணபவன்...

மன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனுக்கு நாடாளுமன்றத்தில் நேற்றுப் பாராட்டுத் தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஊடகத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,
கடந்த காலத்தில் 44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். வடக்கில்தான் பெரும்பாலான ஊடகர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், அந்த யுகத்தை நாம் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளோம். இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இருக்கின்றார். நெருக்கடியான சூழ்நிலையிலும் அவர் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டார். இதற்காக அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறான சூழ்நிலையின்போது பெரும்பாலானோர் தமது நிறுவனங்களை மூடிவிடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இதை வழங்குவதில் சிக்கல் இருக்காது. ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்து பத்திரிகை நிறுவனம் தமக்கு ஊடகப் பயிற்சி தொடர்பான கல்வி நிறுவனம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. அதில் முயற்சிக்கலாம். பயிற்சிகளின் நிமித்தம் ஊடகவியலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பலாம்– என்றார். (த-சி)

# இராணுவத்தினரே...

வின் இரண்டாம் நாள் அமர்வு நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணாமற்போனோரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

எனது மகன் நிக்சன் ஜெராட். அவன் காணாமற்போகும்போது அவனுக்கு வயது 21. எனது மகனை இராணுவத்தினர் கைதுசெய்தனர். அவனை அவர்கள் இதுவரையில் உயிருடன் வைத்திருப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை.

எனவே, எங்களுக்கு விசாரணை எதுவும் தேவையில்லை. ஏனெனில் எங்களுக்கு வயது போய் விட்டது. இனி நாங்கள் எங்களின் பிள்ளையை தேடிப் பிரயோசனம் இல்லை.

யாழ். நெடுங்குளம் பகுதியிலிருந்த எனது மகனை அந்தப்பகுதியில் இருந்த இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் 1996 ஆம் ஆண்டு மே மாதம் பிடித்துச் சென்றனர்.

இதனை இராணுவத்தினரே எங்களிடம் வந்து உங்களின் மகனை நாங்கள் தவறுதலாகக் கைதுசெய்து விட்டதாகவும் பின்னர் இரண்டு தினங்களில் அவரை விடுவிப்பதாகவும் கூறினார்கள். ஆனால், இன்று 20 வருடங்கள் ஆகியும் எனது மகனை இன்று வரை விடுவிக்கவும் இல்லை. அவர் வீடு திரும்பி வரவும் இல்லை.

எத்தனையோ ஆணைக்குழுக்களிடம் நாங்கள் சாட்சியமளித்துள்ளோம். ஆனால் எந்தப் பலனும் இதுவரையில் கிடைக்கவில்லை. அவன் உயிருடன் இருப்பான் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. அந்த நம்பிக்கை இல்லாமல் போனதன் பின்னர் இந்த விசாரணையில் நீங்கள் என்ன நட வடிக்கையை எடுக்கப் போகின்றீர்கள். அவனை இராணுவத்தினர் கொலை செய்திருக்க வேண்டும். நாங்கள் இனிமேல் எங்களின் பிள்ளைக்காகக் காத்திருந்து என்ன நடக்கப் போகின்றது என்றும் அந்த பெற்றோர் ஆணைக்குழுவிற்கு உருக்கமாகச் சாட்சியமளித்தார். (த-வ-ரி2)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 08.11.1926 இறப்பு 12.12.2015

**திருமதி மகேஸ்வரி செல்வநாயகம்**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்வநாயகம் நேற்று (12.12.2015) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கார்த்திகேசு தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

188, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
021 222 8248,
072 699 5593

தகவல்: (66854), (11,16,17,18)
சகோதரன் - பரமேஸ்வரன்
(416)281 8666 (கனடா)



## மைலன் மோகன்

**(மோகன் மாஸ்டர், செல்வம்)**

கைதடிமத்தி, வளர்மதி வீதியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில்தெற்கு, கண்ணன் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மைலன் மோகன் (மோகன் மாஸ்டர், செல்வம்) கடந்த (10.12.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மைலன் சரசு தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற சிவராசா மற்றும் அருந்தவமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற வைரவன்-பொன்னி தம்பதிகளின் அருமைப் பேரனும், இந்து ராணி (இந்து)யின் பாசமிகு கணவரும், சாதுரியனின் அன்புத் தந் தையும், சிவகுருநாதன் (சிவம்), செந்தில்நாதன் (இந்தியா), விஜய லட்சுமி (ஜேர்மனி), சுபாசினி, சர்மிளா ஆகியோரின் அன்புச் சகோ தரனும், ரஞ்சன் (ஜேர்மனி), சுவேந்தினி, சந்திரகுமாரி (இந்தியா), உதயகுமார், ஜெயச்சந்திரன், சிறீஸ்கந்தராசா (சிறி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2015) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் மட்டுவில் தெற்கு, சின்னத்தூ இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணன் கோவில்வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி 077 0492 368

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**திருமதி கனகமணி நடராஜன்**
(கனகமணி ரீச்சர்)
(ஓய்வுநிலை ஆசிரியை, யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை)

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி நடராஜன் (கனகமணி ரீச்சர்) நேற்று (12.12.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா இராசம்மா தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான இராசையா - கதிராய் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராஜனின் (PR ஓய்வுநிலை அதிபர் யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்) மனைவியும், ஜசந்தா (ஆசிரியை, மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை), பாஸ்கரன் (விவசாயப் போதனாசிரியர், மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமுருகராஜன் (J.P ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சிவசாந்தி (J.K விவசாய வியாபாரம், திருநெல்வேலி) ஆகியோரின் மாமியும், ஹம்சாயினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஹரு ஷன் (யா/மானிப்பாய்மெமோரியல்ஆங்கிலப் பாடசாலை), யபிந்தன்(யா/ இந்து ஆரம்பப் பாடசாலை), கனுஷா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான சரஸ்வதி, சிவபாக்கியம் மற்றும் செல்வமணி, காலஞ் சென்ற சீவரத்தினம் மற்றும் கனகரத்தினம், காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப.02.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் பாஸ்கரன் 077 347 1719
(மாவட்ட விவசாயப் போதனாசிரியர்)
மருமகன் திருமுருகராஜன் (J.P) 077 175 3838
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஊடகவியலாளர்களின் பிரச்சினை நேரில் ஆராயப்படும்

## ஊடக அமைச்சர் கயந்த உறுதி

கொழும்பு, டிசெ.13

வடபகுதிக்கு நேரில் பயணம் செய்து, அங்குள்ள ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகத்துறை மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஊடகத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மகிந்த ஆட்சியின்போது அரசின் ஊதுகுழல்களாக அரச ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. அரசியல் மயமாக்கத்திற்குள்ளாகின. எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு இடமளிக்கப்படவில்லை. ஆனால், 450 ஊடகங்கள் இன்று சுயாதீனமாக இயங்குகின்றன.

அத்துடன், ஊடகவியலாளர்கள் தற்போது பெறும் சம்பளத்தை வைத்து அவர்களுக்கு வீடு அமைத்தும் ஏனைய தேவைகளைப் பூர்த்திசெய்தும் வாழ முடியாது. எனவே, அரசு அவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கவுள்ளது. இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது. தற்போது இடம் அளவிடும் பணிகள் நடைபெறுகின்றன. அடுத்த வருடம் முதல் ஏனைய நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

அத்துடன், இரண்டாயிரம் ஊடகவியலாளர்களுக்கு சலுகை அடிப்படையில் இந்த வருடத்துக்குள் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. உயர்கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசில்களும் வழங்கப்படும். அந்த வகையில் எதிர்வரும் 18ஆம் திகதி சிலருக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. தகவல் அறியும் சட்டவரைவும் அடுத்த வருட ஆரம்பத்தில் நிறைவேற்றப்படும்.

மேலும், ஊடகவியலாளர்களுக்கு தபால்மூலம் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். தேர்தல் ஆணையாளருடனும் பேசப்படும். இதற்காக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படவேண்டும் என இதற்கு முன்னரும் தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள், கணினிகள் ஆகியன உரியவகையில் வழங் கப்படவில்லை என இங்கு கருத்து வெளியிடப்பட்டது.

அந்தவகையில் நானும் பிரதி அமைச்சரும் வடக்கிற்கு நேரில் சென்று, அங்குள்ள ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் பற்றிகலந்துரையாடிஅவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

(த-சி)

### ஊடகவிய

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் நுட்பமான விதங்களிலும் ஊடகச் சுதந்திர மறுப்பு நிலவுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற தகவல் ஊடகத்துறை அமைச்சின் வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் கூறியுள்ளதாவது:-

இலங்கையின் ஊடகச் சுதந்திர நிலைமைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லையென எல்லை களற்ற ஊடகவியலாளர் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. இதில் இலங்கையைவிடவும் பொருளாதாரத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் பின் தங்கியுள்ளதாகக் கூறப்படும் பல ஆபிரிக்க நாடுகள் இந்த தரவரிசையில் இலங்கையைப் பார்க்கிலும் முன்னிலையில் இருக்கின்றமை துர்ப்பாக்கியமான விடயமாகும். ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப்படும் ஊடகத்தை வெட்டிச் சாய்ப்பதிலேயே இலங்கையின் ஆட்சியாளர்கள் குறியாய் இருந்துள்ளனர்.

இலங்கை வரலாற்றில் குறிப்பாக, ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் தான் பெரும் ஊடகக் கொலைகள் நடந்தன. அவை பல வகையில் நடத்தப்பட்டன. ஊடகங்களைத் திணறடிக்கும் வகையில் நடந்தன. குறிப்பாக, ராஜபக்ச நடத்திய இனப்படு கொலையை, ஊழல் அரசியலைத் தங்குதடையின்றி மேற்கொள்ள அவர் ஊடகங்களின் குரலை நசித்தார்.

கடந்த காலத்தில் நடந்த ஊடகச் சுதந்திர மறுப்பை முடிவுக்குக் கொண்டு வந்து, ஊடக உரிமையை நிலைநாட்டு வதாக புதிய அரசைச் சார்ந்தவர்கள் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தனர். மைத்திரிபால சிறிசேன அவர் கள் ஊடகச் சுதந்திர மறுப்பால் மற்றும் ஊடகக் கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் சென்று, அவர்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் இவ்வாறு வாக்குறுதியளித்தார்.

எனவே, கடந்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஊடகச் சுதந்திர மறுப்புக்களுக்குப் பொறுப்புக்கூறும் விதமாக, அந் தச் சம்பவங்களுடனும் கொலைகளுடனும் தொடர்புடைய குற்றவாளி களைப் புதிய அரசு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இலங்கையில் நடந்த மிக மோசமான மனித உரிமை மீறல்களை மறைப்பதற்காக, மிக மோசமான ஊடகச் சுதந்திர மீறல்களில் இலங்கை அரசு ஈடுபட்டுள் ளது.

இந்த விடயங்கள் தொடர்பில், இலங்கையின் புதிய அரசு வெளிப்படையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள் கின்றேன். அவ்வாறான நடவடிக் கைகளை எடுக்காத பட்சத்தில், அந்த ஊடகச் சுதந்திர மறுப்பை புதிய அரசும் ஓர் அரச இயந்திரமாகச் சாதுரியமாக மறைக்கிறது என்பதையே நாம் முடிவுசெய்ய நேரிடும்.

ஏனெனில், முன்னைய காலத்தில் இலங்கை அரசே ஊடகச் சுதந்திரத்தை மறுத்து, ஊடகக் கொலைகளைப் புரிந்தது அல்லது தனக்குச் சார்பான குழுக்களை வைத்து அந்தக் கொலைகளை நடத்தியது என்பது யாவரும் அறிந்ததே. நாம் கடந்த காலத்தில் நடந்த ஊடகச் சுதந்திர மறுப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அப்படி என்றால், இப்போது ஊடகச் சுதந்திரம் நிலவுகின்றதா?

ஆட்சி மாறியும் ஊடகச் சுதந்திரம் இல்லை. குறிப்பாக, இராணுவமும் இராணுவத்தின் புலனாய்வுக் கட் டமைப்புக்களும் தொடர்ந்தும் ஊடகங்களைக் கண்காணித்து வருகின்றன. இந்த நிலை இன்னமும் தொடர்வது கவலையளிக்கின்றது.

இது தொடர்பில் விளக்க வேண்டுமென்றால், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு இடையில் சந்திப் பொன்று இடம் பெற்றது. அந்தச் சந்திப்பு இடம் பெற்ற மண்டபத்தினுள் இரு புலனாய்வாளர்கள் உள் நுழைந்திருந்தனர். அவர்கள் இருவரும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தவர்களை மறைமுகமாகப் புகைப்படம் எடுத்துக்கொண்டதுடன், கலந்துரையாடல் முழுவதனையும் ஒளிப்பதிவும் செய்துகொண்டனர்.

குறித்த இருவரும் அங்கிருந்த வரவுப் பதிவேட்டில் தம்மை ஊடகவியலாளர்கள் என்றே பதிவு செய்துள்ளனர். அத்துடன், மண்டபத்தின் வெளியே பல புலனாய்வாளர்களின் நடமாட்டம் காணப்பட்டதென அங்கிருந்த செய்தியாளர்கள் மூலம் அறிந்து கொண்டேன். அத்துடன், பல ஊடக வியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றனர். மறைமுகமாக அச்சுறுத்தப்படுவதும் இனந்தெரியாத குழுக்கள் அச்சுறுத்துவதும் தொடர்கின்றன. ஊடகச் சுதந்திரம் குறித்து நம்பிக்கையற்ற, நிச்சயமற்ற ஒரு சூழலே நிலவுகிறது. இராணுவத்தின் கட்டுப் பாட்டிலுள்ள நாடு என்ற வகையில், தொடர்ந்தும் ஊடகச் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. இன்று வடக்கு, கிழக்கில் நுட்பமான விதங்களிலும் ஊடகச் சுதந்திர மறுப்பு நிலவுகின்றது. ஊடகச் சுதந்திரத்தை நிலைநாட்டவேண்டியது ஒரு அரசின் கடமை. ஆனல் அந்த அரசே ஊடக சுதந்திர மீறல்களைப் பாதுகாக்கின்றது. அந்த அரசே ஊடகச் சுதந்திரத்தை நுட்பமாக மீறுகிறது. அரசின் இயந்திரமான இராணுவமே ஊடகச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சியை முன்னெடுக்கிறது.

ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை உறுதிசெய்ய புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஊடக அமைப்புக்கள் கோரிக்கைவிடுத்து வருகின்றன. தற்போதைய நிலையில் ஊடகத்துறையிலுள்ளவர்களிடம் வினவினீர்களென்றால், கிடைத்த தகவல்களை அச்சமின்றி அறிக்கையிட முடி யும். ஆனாலும் தகவல்கள் கிடைப்பது அரிது என்ற கருத்து வலுவாக முன்வைக்கப்படுகின்றது. கடந்த ஆட்சியின் போது தகவல்கள் இருக்கும். ஆனால், அதனை வெளி யிட முடியாதபடிக்கு அச்சகரமான சூழ்நிலை ஆட்கொண்டிருக்கும்.

(த-வ) (நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இந்த உரையின் தொடர்ச்சி நாளைய உதயனில் வெளிவரும்)

### பலாலியில்

இரண்டாவது நாளாக இடம்பெற்ற காணாமற் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் சாட்சியமளிக்கும் போதே, குறித்த தந்தை இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

அரியாலையை சேர்ந்த லோ. சேரன் எனும் எனது மகனை கடந்த 1996ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி வீட்டிற்கு ஆயுதங்களுடன் வந்த இராணுவத்தினர் எம்மிடம் கடிதம் ஒன்றை வழங்கி விட்டு, எனது மகனை அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு பிடித்துச் செல்வதற்கு முதல் நாள் இராணுவச் சீருடையில் வந்தவர்கள் சிலர் எமது அயலில் வசிப்பவர்களிடம் எனது மகன் குறித்து விசாரித்தும் சென்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டது தொடர்பில் நாம் 512 ஆவது பிரிகேட்டில் சென்று கேட்டபோது தாம் பிடித்ததாக ஒத்துக்கொண்டு கோப்ரல் ராஜபக்ச ஒப்பமிட்டு ஓர் கடிதம் வழங்கினார்.

இவ்வாறு கடிதம் வழங்கியும் மகனை விடுவிக்காத காரணத்தினால், நான் ஒருவரின் உதவியுன் பலாலி இராணுவ முகாமிற்கும் சென்று எனது மகன் தொடர்பில் இராணுவத்தினரிடம் விசாரித்தேன். அப்போது ஓர் படை அதிகாரி எனது மகனின் பெயரைப் பெற்று தமது தடுப்பில் 27 பேர் உள்ளதாகவும் அதில் பரிசீலித்துக் கூறுவதாகவும் சென்றவர், சிறிது நேரம் கழித்து வந்து இந்தப் பெயரிற்கு உரியவர் தமது இடத்தில் இருப்பதாக கூறினார்.

ஆனால் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. எனவே தம்மிடம் இருப்பதாக இராணுவம் ஒத்துக் கொண்ட எனது மகனை மீட்டுத் தாருங்கள் என தந்தை ஆணைக் குழுவிடம் சாட்சியமளித்தார்.

(த-வ-101)

### நீரிழ் மூழ்கி

துள்ளனர்.

இதில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த, எட்டு வயதுச் சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்த பரிதாபச் சம்பவம் நேற்றுமுன்தினம் மானிப்பாயில் இடம்பெற்றுள்ளது. நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த ரவீந்திரகுமார் லக்சன் (வயது 8) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

22 அடி ஆளமுடைய சிறுவனின் வீட்டுக் கிணற்றில் மழைக் காலம் என்பதனால் அதிகளவில் தண்ணீர் நின்றுள்ளது. சிறுவன் அந்த ஆளமுடைய கிணற்றில் கையால் தண்ணி அள்ளிக் குளிப்பது வழமை என்று பெற்றோர் கூறுகின்றனர். அவ்வாறே நேற்று முன்தினமும் குறித்த சிறுவன் தண்ணீர் அள்ளிக் குளித்தபோது, தவறி கிணற்றினுள் விழுந்துவிட்டான்.

குளிக்கச் சென்ற சிறுவனைக் காணவில்லை என்று தேடிய போதே சிறுவன் சடலமாக கிணற்றுக்குள் இருந்தமை கண்டறியப்பட்டது.

நேற்றுமுன்தினம் மதியம் 1.30 அளவில் சம்பவம் இடம்பெற்ற நிலையில் அங்குள்ளவர்கள் சேர்ந்து சிறுவனது உடலை மீட்கும் பணியில் ஈடுபட்டபோதும் அவர்களால் அது முடியவில்லை.

இந்த நிலையில் கடற்படையினர் அங்கு வரவழைக்கப்பட்டு அவர்களே பிற்பகல் 6 மணியளவில் சிறுவனின் சடலத்தை மீட்டனர். பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, பண்டத்தரிப்பில் வயல் கிணற்றில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான். அம்மன் வீதி பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஜெயராசா ஜெனோசன் (வயது 18) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். 7 பேர் அந்த வயற் கிணற்றில் கடந்த வியாழக்கிழமை குளித்துள்ளனர். இதன்போதே குறித்த மாணவன் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4)

### சி.ஐ.டி

பொரளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3 பேருடன் முல்லைத் தீவைச் சேர்ந்த ஒருவருமாக 4 பேரும் சேர்ந்து மன்னாருக்குச் சென்றுள்ளனர்.

அங்குள்ள ஒருவரிடம் சென்று தம்மைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்றுகூறி 50 ஆயிரம் ரூபா பணத்தைக் கப்பமாகத் தர வேண்டும் என்றும், தராவிட்டால் பொய் வழக்குப் பதிவு செய்து கைது செய்து உள்ளே தள்ளிவிடுவோம் என்றும் அச்சுறுத்தியுள்ளார்.

இதனால் குறித்த நபர் அவர்கள் குறிப்பிட்ட வங்கிக் கணக்கு இலக்கத்துக்கு அவர்கள் கோரிய பணத்தை வைப்பிலிட்டுள்ளார். பின்னர் இது தொடர்பில் மன்னார் பொலிஸில் அதே வருடம் ஜனவரி 17 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் பொலிஸார் அதே வருடம் பெப்ரவரி 15 ஆம் திகதி குறித்த சந்தேக நபர்கள் நால்வரையும் கைது செய்தனர். அவர்களுள் 3 பேர் பெரும்பான்மை இனத்தவர்கள்.

குறித்த நால்வருக்கும் எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை மூலமாக அவர்களில் தென்பகுதியைச் சேர்ந்த 3 பேரும் குற்றவாளிகள் என்று நீதிமன்று இனங்கண்டு கொண்டது. அவர்கள் தொடர்பான வழக்கு நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிட்டமை உள்ளிட்ட பல ஆதாரங்களின் அடிப்படையில் குறித்த 3 பேரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர்.

இதனால் அவர்களுக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் பெண் என்பதனால் அவருக்குரிய தண்டனையை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்தது நீதிமன்று.

நாலாவது சந்தேக நபரான முல்லைத்தீவைச் சேர்ந்தவர் மீதான விசாரணை இன்னும் தொடர்ந்து இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(வ-4,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா – பாக். தொடர் நடைபெறாவிட்டால் கிரிக்கெட் செத்துவிடாது என்கிறார் யூசுப்


இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே தொடர் நடைபெறாவிட்டால் கிரிக்கெட் ஒன்றும் செத்துவிடாதுஎன்றுகருத்துத்தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் முன்னாள் வீரரான யூசுப்.

குறித்த விடயம் தொடர்பாக யூசுப் தெரிவிக்கையில்;- 'இது குறித்து இத்தனை கூச்சல்கள் குழப்பங்கள் ஏன்? பாகிஸ்தானும் இந்தியாவும் இருதரப்பு கிரிக்கெட்டில் ஆடாவிட்டால் அது உலக கிரிக்கெட்டையோ அல்லது இருநாட்டு கிரிக்கெட்டையோ பாதிக்கப்போவதில்லை. இந்தத் தொடர் நடைபெறாவிட்டால் கிரிக்கெட் ஒன்றும் செத்துவிடாது. அதற்கு கடந்த 8 வருடங்களும் சான்றாக உள்ளன. கடந்த எட்டு ஆண்டுகளாகவே இரு அணிகளும் இருதரப்பு தொடர்களில்விளையாடவில்லை. இதனால் கிரிக்கெட் ஒன்றும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எப்போதுமே இருநாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் தொடர்களின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் நிறைய இடைவெளிகள் இருந்தே வந்துள்ளன.

இதனால் இருநாட்டு கிரிக்கெட் வளர்ச்சிக்கும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்பட்டதில்லை. நாம் ஒருவரையொருவர் எதிர்த்து விளையாடவில்லை என்பதால் உலக கிரிக்கெட் நின்றுபோய்விடுமா என்ன? தயவு செய்து இந்தியா – பாகிஸ்தான் தொடர்களை தலையில் தூக்கிவைத்துக் கொண்டாட வேண்டாம்-என்றார். (ம)

# மூன்று நாள்களில் முடிந்த டெஸ்ட் ஆஸியிடம் வீழ்ந்தது மே.தீவுகள்



ஆஸ்திரேலியா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸாலும் 212 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 4 இலக்குகள் இழப்புக்கு 583 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. வோக்ஸ் 269 ஓட்டங்களையும் ஷோன் மார்ஷ் 182 ஓட்டங்களையும் பெற்றனர்.


முன்னிலை பெறுவது மிகவும்

> “தொடர்ந்து களத்தடுப்பு செய்ய தகுதியற்ற காரணத்தினால் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது தீவுகள். வழக்கம்போல் முன்னிலை வீரர்கள் தடுமாறினார்கள்.”

கடினம். பொலோ ஒன் நிலைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற முனைப்பில் களமிறங்கிய தீவுகள், இரண்டாம் நாள் முடிவில் 207-6 என்று நிலையில் இருந்தது. பிராவோ 94 ஓட்டங்களுடனும் றோச் 31 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் 31 ஓட்டத்திலேயே ஆட்டமிழந்தார் றோச். பவுண்டரியுடன் சதம் கடந்தார் பிராவோ. ரெய்லர் ஒரேபந்தில் போல்ட் ஆனார். 108 ஓட்டங்களுடன் பிராவோவின் இன்னிங்ஸ் முடிவு காண 223 ஓட்டங்களுடன் அடங்கியது தீவுகள். பந்து வீச்சில் ஹசில்வூட் 4 இலக்குகளையும் லையன் 3 இலக்குகளையும் சிடில் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து களத்தடுப்பு செய்ய தகுதியற்ற காரணத்தினால் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது தீவுகள். வழக்கம்போல் முன்னிலை வீரர்கள் தடுமாறினார்கள். பிரீத்வைட் நிலைத்து நிற்க சண்டிகா ஓட்டம் எதனையும் பெறாமலும் பிராவோ 4 ஓட்டங்களுடனும் சாமுவேல்ஸ் 3 ஓட்டங்களுடனும் பிளக்வூட் ஓட்டம் எதனையும் பெறாமலும் ரம்டின் 4 ஓட்டங்களுடனும் வீழ்ந்தனர். முதல் பத்துப்பந்துப் பரிமாற்றத்தில் தீவுகள் 30-5. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கோல்டர்இரட்டைஇலக்கத்தை எட்ட பிரீத்வைட் அரைச்சதம் கடந்தார். 17 ஓட்டங்களுடன் கோல்டரும் ஆட்டமிழக்க அடித்தாட முற்பட்டார் பிரீத்வைட். முன்வரிசை வீரர்களாலேயே தாக்குப் பிடிக்க முடியவில்லை-என்றால் இறுதி நிலை வீரர்கள் எம்மாத்திரம்? 148 ஓட்டங்களில் சுருண்டு இன்னிங்ஸாலும் 212 ஓட்டங்களாலும் வாங்கிக் கட்டியது தீவுகள். ஆட்டநாயகனாக வோக்ஸ் தெரிவானார். (ம)

# முதல் இன்னிங்ஸில் நியூசி. முன்னிலை வெற்றிவாய்ப்பும் அந்த அணிக்கு அதிகம்




நியூசிலாந்து – இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய மூன்றாவது நாளில் இலங்கை முதல் இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 294 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 137 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து நாள் முடிவில் 171-1 என்று உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மத்தியூஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய சகல இலக்குகளையும் இழந்து 431 ஓட்டங்களைப் பெற்றது நியூசிலாந்து. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரதீப் 4 இலக்குகளையும் லக்மல், சமீர இருவரும் தலா இரு இலக்குகளையும் மத்தியூஸ், சிறிவர்தன இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிஸை ஆரம்பித்த இலங்கை இரண்டாம் நாள் முடிவில் 197-4 என்ற நிலையில் இருந்தது. சந்திமல் 83 ஓட்டங்களுடனும் விதானகே 10 ஓட்டங்களுடனும் களத்தில் மூன்றாம் நாளுக்காக களமிறங்கினர். சதத்தை நிறைவுசெய்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட சந்திமல் 83ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தார். விதானகே 22 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். பின்வரிசை வீரர்கள் தம்மால் முடிந்த அளவுக்கு இரட்டை இலக்கத்தை எட்ட மூன்றாம் நாள் 294 ஓட்டங்களுடன் முடிவுகண்டது இலங்கையின் இன்னிங்ஸ். பந்துவீச்சில் சவுத்தி வாக்நெர் இருவரும் தலா 3 இலக்குகளையும் சான்நெர், போல்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். 137 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்துக்கு அசத்தலான தொடக்கத்தை வழங்கியது ஆரம்ப இணை. குப்தில், லாதம் இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். அதே நேரம் சிறு தவறும் செய்தனர். மேலதிகமாக 250 ஓட்டங்களைக் குவித்தாலே ஆட்டத்தை இடைநிறுத்தலாம். இன்னும் இரண்டு நாள்களே கைவசம் உள்ளன. எவ்வளவு முடியுமோ அவ்வளவு அடித்தாடி வேகமாக ஓட்டங்களைப் பெற்றாலேயே ஆட்டத்தை இடைநிறுத்தி இலங்கையை வீழ்த்தக்கூடிய அவகாசம் அதிகமாக இருக்கும். ஆனால், பந்துப் பரிமாற்றத்துக்கு 2.5 என்றசராசரியிலேயே இருவரும் விளையாடினார்கள். 46 ஓட்டங்களுடன் குப்தில் ஆட்டமிழந்தார். இடத்தை நிரப்பிய வில்லியம்சன் லாதத்தை அழைத்து ஏதேதோ தெரிவித்தார்.

அனேகமாக அது தலைவர் மக்கலம் சொல்லிவிட்ட வியூகமாக இருக்கலாம். சராசரியில் பந்துப்பரிமாற்றத்துக்கு 3.5 என மாற்றம் ஏற்பட்டது. அரைச் சதம் கடந்தார் லாதம். அரைச் சதத்தை நோக்கி வில்லியம்சன். நாள் முடிவில் நியூசிலாந்து 171-1 என்றுள்ளது. (ம)

# தவறேதும் செய்ததாக எண்ணவில்லை என்கிறாராம் குசல் ஜெனித் பெரேரா



தடை செய்யப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்தியதாக குற்றஞ் சுமத்தப்பட்டு நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து வெளியேற்றப்பட்ட குசல் ஜெனித் பெரேரா, தான் தவறேதும் செய்ததாக எண்ணவில்லை என்று தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கிறார் இடைக்காலப் பயிற்றுனரான ஜெரோம்.

அண்மையில் இடம்பெற்ற இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரின்போது இருந்தாற்போலிருந்து. மேற்கொள்ளப்பட்ட தடைசெய்யப்பட்ட மருந்துப் பாவனை தொடர்பான சோதனைகளின்போது குசல் ஜெனித் பெரேரா தடைசெய்யப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டதாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது. இதனைத் தொடர்ந்து நியூசிலாந்துக்கான தொடருக் காக அங்கு சென்றிருந்த குசல் இலங்கைக்குத் திருப்பி அனுப் பப்பட்டார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை அணியின் இடைக்காலப் பயிற்றுநரான ஜெரோம் ஜெயரத்ன தாம் குசலுடன் கலந்துரையாடியதாகவும், தவறேதும் செய்யவில்லை என அவர் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார். கால் பாதத்தில் ஏற்பட்ட விலங்குக்கடி காரணமாக மருந்துகளை உள்ளெடுத்ததாகவும் ஆனால், தடைசெய்யப்பட்ட எந்தவொரு மருந்தையும் உள்ளெடுத்திருக்கவில்லை எனவும் குசல் தெரிவிப்பதாகவும் ஜெரோம் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்.ஏ. கிண்ணத் தொடரில் மன்னார் லீக் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் முன்னெடுத்து வரும் எப்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சில நேற்று முன்தினம் தாழ்வுப் பாடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன. அவற்றின் முடிவுகள் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கிறின் பீல்ட் அணியை எதிர்த்து தாழ்வுப் பாடு சென்.அன்ரனிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் தாழ்வுப்பாடு சென். அன்ரனிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து தோட்டவெளி ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் சென். அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அடம்பன் ஐக்கிய அணியை எதிர்த்து சாந்திபுரம் ஸ்ரார் அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் சாந்திபுரம் ஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற முருங்கன் பொதுசன அணிக்கும் அச்சம்குளம் சென்.ஜோசப் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முருங்கன் பொதுசன அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# எவ்.ஏ. கிண்ணத் தொடரில் பருத்தித்துறை லீக் முடிவுகள்

கரணவாய், டிசெ. 13

எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். சேவியர் விளையாட்டுக் கழகம், வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகம், சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், நக்கீரன் விளையாட்டுக் கழகம், வல்வை விளையாட்டுக் கழகம், விண்மீன் விளையாட்டுக்கழகம் என்பவை வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் எவ்.ஏ. கிண்ணத்துக்காக நாடளாவிய ரீதியில் உதைபந்தாட்டத் தொடரை முன்னெடுத்து வருகிறது. இந்தத் தொடரில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சில, அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் 5:2 என்ற கோல்களின் அடிப்படையில் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கின் அடிப்படையில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது. மூன்றாவது ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 6:0 என்று பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தைப் பந்தாடியது. அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் 4:1 என்று சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியிருந்தது.

நேற்று நடைபெற திட்டமிட்டிருந்த இரு ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் வருகை தராததால் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கும் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் வருகை தராததால் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்திற்கும் வெற்றி வழங்கப்பட்டது. (ம-108)

## மேசைப்பந்தாட்ட தரப்படுத்தல்

கரணவாய், டிசெ. 13

வடமாகாண மேசைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தொடரில் வீரவீராங்கனைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 12வயது ஆண்கள் பிரிவில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை மாணவனான எஸ்.டஜீவன் முதலிடம் பிடித்துள்ளார். பெண்கள் பிரிவில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.ஜனனி முதலிடம் பிடித்துள்ளார்.

**ஆண்கள் பிரிவு**

12வயது ஆண்கள் பிரிவில் எஸ்.டஜீவன் 25 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். எஸ்.விதுசிகன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி) இரண்டாம் இடத்திலும், எஸ்.ஜெனிஸ்ராஜ் (கொக்குவில் இந்துக் கல்லூரி) மூன்றாம் இடத்திலும், எஸ்.கவிநிலவன் நான்காம் இடத்திலும், எஸ்.தனுசன் (மன்னார் பற்றிமா வித்தியாலயம்) ஐந்தாம் இடத்திலும், எஸ்.அன்ஜே (யாழ். மத்திய கல்லூரி) ஆறாம் இடத்திலும், எஸ்.கவிசன் (யாழ். மத்திய கல்லூரி) ஏழாம் இடத்திலும், எஸ்.ஹர்சிகன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி) எட்டாம் இடத்திலும் உள்ளனர்.

**பெண்கள் பிரிவு**

பெண்கள் பிரிவில் எஸ்.ஜனனி 25 புள்ளிகளுடன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) முதலிடத்தில் உள்ளார். எஸ்.மிதுசாளினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி) இரண்டாம் இடத்திலும், எஸ்.டிலானி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) மூன்றாம் இடத்திலும், எஸ்.கஜனுசியா (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) நான்காவது இடத்திலும், எஸ்.வைஸ்ணவி (வல்வை மகளிர் கல்லூரி) ஐந்தாவது இடத்திலும், எஸ்.சுகன்யா (வல்வை மகளிர் கல்லூரி) ஆறாவது இடத்திலும், எஸ்.டர்சிகா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஏழாவது இடத்திலும், எஸ்.மதுமிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) எட்டாவது இடத்திலும் உள்ளனர். (ம-108)

## உதயசூரியன், இளந்தென்றல் அணிகள் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத் தப்படும் ஏவ்.ஏ. கிண்ணத் .துக்கான தொடரில் முல்லைத்தீவு மாவட்ட லீக்கில் பதிவு செய்துள்ள கழகங் களுக்கு இடையிலான ஆட் டங்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை அளம்பில் இளந் தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இம் பெற்றன. காலை 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து சிலாவத்தை இளம் பறவை அணி மோதிக்கொண்டது. இதில் செம்மலை உதய சூரியன் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அளம்பில் இளந் தென் றல் அணிக்கும் கிளிநொச்சி திருநகர் அணிக்கும் இடை யில் பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவிருந்த ஆட்டத்துக்கு கிளிநொச்சி திருநகர் அணி வருகை தராததால் இளந்தென்றல் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ம-23)

## இன்றைய மோதல்

கரணவாய், டிசெ. 13

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத் தும் அழைக்கப்பட்ட அணி களுக்கு இடையிலான கால் பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் அரையிறுதி ஆட்டத் தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-108)

## தவானுக்கு பரிசோதனை இல்லை

தவானின் பந்துவீச்சைப் பரிசீலிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி சமநிலைக்காக போராடியது. குறிப்பாக அந்த அணியின் அம்லா - வில்லியர்ஸ் இணை 400 பந்துகளுக்கும் மேலாகத் தாக்குப் பிடித்தது. இதனால் இணைப்பாட்டத்தை தகர்க்க பகுதி நேரப்பந்து வீச்சாளர்களை அழைத்த தலைவர் கோக்லி, தவானுக்கும் வாய்ப்பு வழங்கினார். தவான் வீசிய மூன்று பந்துப்பரிமாற்றங்களில் ஒருசில பந்துகளில் சந்தேகம் இருப்பதாகவும், 14 நாள்களுக்குள் அவரது பந்துவீச்சைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் ஐ.சி.சி. தெரிவித்திருந்தது. ஆனால் பரிசோதனைக்கு உட்படுத்தத் தேவையில்லை என்று குறிப்பிட்ட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, இனி மேல் நடக்கும் ஆட்டங்களில் தவான் பந்துவீச மாட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம)



## சதுரங்கத் தொடரின் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 13

வடமாகாண முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடரில் கிளிநொச்சி வலயத்தில் வெற்றியீட்டிய வீரவீராங்கனைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் கடந்த வியாழக்கிமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலய மட்ட போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற வீரவீராங்கனைகளும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கோட்ட மட்டப் போட்டிகளில் ஒவ்வெரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரவீராங்கனைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் விஷ்ணு, கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் தலைவர் தி.சிவரூபன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (23)

## ஓய்வினை அறிவித்தார் மூனி

அயர்லாந்து அணியின் சகல துறை வீரரான மூனி சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 33வயதான மூனி, அயர்லாந்து சார்பாக மூன்று உலகக் கிண்ணத் தொடர்களில் பங்குபற்றிய நான்கு வீரர்களில் ஒருவராவார். 2011ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத் தொடரில் பெங்களூரில் வைத்து இங்கிலாந்து அணியை அயர்லாந்து வென்ற போது, வெற்றி ஓட்டத்தைப் பெற்றமைக்காக ஞாபகமூட்டப்படும் அவர், அடுத்த கட்டம் நோக்கிச் செல்லவிரும்புவதாகத் தெரிவித்துள்ளார். இதன்மூலம் மூனி கழகங்களுக்கு விளையாட ஒப்பந்தமாகியுள்ளமை தெளிவாகிறது. அயர்லாந்துக்காக 64 ஒருநாள் ஆட்டங்களில் 3 அரைச் சதங்கள் உள்ளடங்கலாக 23.48 என்ற சராசரியில் 963 ஓட்டங்களைப் பெற்றதோடு, 34.06 என்ற சராசரியில் 48 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பியன்ஸ் லீக் தொடரில் யுனைற்றட் அதிர்ச்சித் தோல்வி

சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரிலிருந்து, மன்செஸ்டர் யுனைற்றட் அணி அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் வோக்ஸ்வாகன் எரினா மைதானத்தில் இடம்பெற்ற வொல்ப்ஸ்பேர்க் அணிக்கெதிரான ஆட்டத்தில் ஒருவிதமான தடுமாற்றத்தை யுனைற்றட் வெளிப்படுத்தியிருந்தது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் வொல்ப்ஸ்பேர்க் அணி முதற் கோலைப் பதிவு செய்தது. ஆனால் 13ஆவது நிமிடத்தில் யுனைற்றட் பதில் கோலை பதிவுசெய்ய கோல் கணக்கு 1:1 என்று மாற்றம் பெற்றது. 29ஆவது நிமிடத்தில் வொல்ப்ஸ்பேர்க் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய முதற் பாதியின் முடிவில் அந்த அணி 2-1 என்று முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியின் ஆரம்பத்தில் யுனைற்றட் மேலும் ஓர் கோலை விளாச மீண்டும் சமநிலைத் தன்மை ஏற்பட்டது. ஆனால் இரண்டே நிமிடங்களில் பதிலடி வழங்கிய வொல்ஸ்பேர்க் அணி 3-2 என வெற்றிபெற்று யுனைற்றட்டுக்கு அதிர்ச்சியளித்தது. (ம)

# கால்பந்தாட்ட வீரர் கொலை

ஹோண்டுராஸ் நாட்டில் சர்வதேச கால்பந்து வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் கால்பந்தாட்ட உலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

26 வயதான அர்னால்ட் பெரால்டா, ஹோண்டுராஸ் தேசிய கால்பந்து அணியின் வீரர் ஆவார். 2012ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஒலிம்பிக் தொடரில் விளையாடும் வாய்ப்பை பெற்றார். ஸ்கொட்லாந்தின் ரேஞ்சர்ஸ் கிளப்பிற்காகவும் விளையாடியுள்ளார். சமீபத்தில் ஹோண்டுராஸ் நாட்டின் ஒலிம்பியா கிளப் அணியில் இணைந்து விளையாடி வருகிறார். இந்த நிலையில், நேற்று இரவு தனது சொந்த நகரான லா செய்பாவில் உள்ள ஒரு வணிக் வளாகத்துக்குச் சென்ற அர்னால்ட், கார் தரிப்பிடத்தில் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். (ம)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
06.04.1941



மறைவு
13.11.2015

### கந்தையா தர்மபாலன்

கண்ணியமாய் வாழ்ந்து காலமெல்லாம் நற்பணிசெய்து
எண்ணியவை எல்லாம் நிறைவேறி புண்ணியத்தின் புகழ் கண்டீர்
கால் பதித்து யாவரையும் கவர்ந்திழுக்கும்
கனிவான பண்பினிலே காலமெலாம் வாழ்ந்தீர்
சீலமுடன் எமை அன்பாய் நற்கோலமுடன் வாழ
ஞானமதில் வழிகாட்டி நன்நெறிமுறைகள்
நலமுடனே பகன்று நின்ற பகலவனே!
திண்ணியமாய் வர்த்தகத்தில் திகழ்ந்தொடு
வண்ணமுடன் கலை மிளிர தொழிலாற்றி
காண்போர் வியந்திடவே நிலையாக நிமிர்ந்து நின்றீர்
விண்ணில் மதி உள்ளவரை உமை மறவோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

60, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

SPOKEN
English
With Grammar
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்களாக 3 மாதங்களுக்கு நடைபெறுவதுடன் பகுதிநேர வகுப்புக்கள் சனி or ஞாயிறு தினங்களில் நடைபெறும்
Duration : 3 Months Course Fee : 13250/=
Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
தகைமைப் பரீட்சைகள்
கடந்த 5 மாதத்தினுள் எங்கள் 104 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்
German & Swiss மொழிப் பாடநெறி — Deutsche
Netherlands மொழிப் பாடநெறி — Dutch
அனுபவமும் திறமையும் கொண்ட ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது
BRITISH COLLEGE of Education
Hot line 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124
13, Chapel Rd, Colombo-06. 585, Peradeniya Rd, Kandy.

EXAMPOINT Vacancy
ICT . Education . Traininig & Development Centre
COMPUTER ASSISTANT - PART TIME
(MALE) JAFFNA
REQUIREMENTS INCLUDE
- A minimum of 3 passes at GCE A/Ls in any stream.
- Must have knowledge of Microsoft office packages & Adobe photoshop design.
- Computer hardware and problems fixing.
- Excellent communication skills.
- Able to work in dynamic environment.
- Fluent in English , Advanced in Sinhala
Please send your CV on or before
16th December 2015 to info@exampoint.lk
ExamPoint (Pvt) Ltd. 0776 28 48 45
No- 120/6, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel : 021 221 6400 Email: info@exampoint.lk Web: www.exampoint.lk

15/12/2015 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி
Free Information Seminar
Information Technology — MBA
Information Technology — MSc IT
Cardiff Metropolitan University
ICBT CAMPUS JAFFNA
580 Hospital Road, Jaffna, Sri Lanka.
Tel: 021-4777888
இடம் : ICBT Campus
காலம் : 15.12.2015 செவ்வாய்க்கிழமை
நேரம் : 5.00 - 6.00 (மாலை)

First Time in Jaffna
Jacqui Hare
Cardiff Metropolitan University, UK
www.icbt.lk
For more information & Registration : Amaresh 076 928 978 4

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து நகைகளுக்கும்
25% விசேட விலைக்கழிவு டிசெம்பர் 30 வரை

M&M FASHIONS
செயின் பென்டன் தோடுகள் காப்பு சிமிக்கி வகைகள்
ஆரங்கள் காசுமாலை கை செயின் முத்துமாலை
நெக்லஸ் வகைகள்
திருமண மற்றும் நாட்டிய நிகழ்வுகளுக்கான ஆபரணங்கள் (Wedding Collections)
(இடுப்புப் பட்டி, நெற்றிச் சுட்டி, கைப்பட்டி, நாகசடம், காற்சலங்கைகள்)
விசேட விலைக்கழிவு 25%
கவரிங் நகைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்!

205/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ராஜா தியேட்டர் முன்பாக
077 0055 990 021 221 6145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.